Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.
30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 248 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 16, வியாழன் 01.08.2013

பாடசாலை மாணவருக்கு மருத்துவ முகாம் 03

தவிர்க்க முடியாதது இந்தியா 07

கடன்களால் இக்கட்டில் வங்கிகள் 20

'20/20' இலங்கை மகளிர் தகுதி 23

# சரியான தருணத்தில் மஹிந்தவுக்கு பதிலடி

## காணி, பொலிஸ் தொடர்பில் சம்பந்தன் காட்டம்

கொழும்பு, ஓகஸ்ட் 01
காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உரிய நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிலடி கொடுக்கும்.
- இவ்வாறு காட்டமாகத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.
"காணி, பொலிஸ் அதிகாரங்களை என்னிடமிருந்து எவரும் எடுத்துவிட முடியாது. அதை விட்டுக் கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. அரசமைப்பில் இந்த அதிகாரங்கள் குறித்து தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது'' என்று, பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் நிர்வாகிகளை நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்திய போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.
ஜனாதிபதியின் இந்தக் கருத்துத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதில் கருத்து என்னவென்று அதன் தலைவர் இரா.சம்பந்தனிடம் நேற்று 'உதயன்' வினாவியது.
இதற்குப் பதிலளிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதி, தான் நினைக்கும் நேரங்களில் ஒவ்வொன்றைச் சொல்லி வருகின்றார். அவரின் ஒவ்வொரு வேறுபட்ட கருத்துகளுக்கும் நாம் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை.



காணி, பொலிஸ் அதிகாரங்கள் முக்கியமான விடயங்கள். இவை குறித்து தற்போது ஜனாதிபதி, தெரிவிக்கும் கருத்துக்களைப் பற்றி நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.
காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உரிய நேரத்தில் தமிழ்க் கூட்டமைப்பு பதிலடி கொடுக்கும். அது வரை பொறுத்திருங்கள் என்று தெரிவித்தார் சம்பந்தன். (த-சி)

## சிகரெட், மதுபானம் விலைகள் உயர்வு

கொழும்பு, ஓக. 01
சிகரெட் மற்றும் மதுபானங்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.
சிகரெட்டுக்களின் விலை இரண்டு மற்றும் மூன்று ரூபாவினால் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.
பார்க்க பக். 04

## தமிழ்நாட்டு மீனவர் 34 பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 01
பருத்தித்துறை, வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வந்த இந்திய தமிழ் நாட்டைச் சேர்ந்த 34 மீனவர்கள் 5 இயந்திரப் படகுகளுடன் பருத்தித்துறைக் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த வேளை, பருத்தித்துறை துறைமுகத்துக்கு நேரே உள்ள
பார்க்க பக். 04

## கார் - லொறி மோதிய விபத்தில் 2 கடற்படை அதிகாரிகள் சாவு

கொழும்பு, ஓக. 01
புத்தளம், கருவலகஸ்வெவ பிரதேசத்தில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் கடற்படை உயர் அதிகாரிகள் இருவர் உயிரிழந்தனர்.
பூநகரியிலிருந்து கொழும்பு நோக்கி சென்றுகொண்டிருந்த கடற்படையினரின் காரும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான கனரக வாகனமும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகக் கருவலகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.




கொமாண்டர் ஜானக்க பிரியந்த, லெப்டினன்ட் கொமாண்டர் சரித் கலுதந்திரி ஆகிய கடற்படை உயர் அதிகாரிகளே இந்த விபத்தில் உயிரிழந்தவர்களாவர்.
கடற்படை அதிகாரிகளின் சடலங்கள் புத்தளம் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.
இந்த விபத்து தொடர்பில் கருவலகஸ்வெவ பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## 7 கட்சிகள், 10 குழுக்கள் நேற்று மட்டும் வேட்பு மனு

யாழ்ப்பாணம், ஓக. 01
வடமாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் முடிவடையவுள்ள நிலையில், நேற்றுப் புதன்கிழமை மட்டும் 7 கட்சிகள், 10 சுயேச்சைக் குழுக்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளன.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி என்பன நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளன.
தொடர்ச்சி: பக்கம் 21

## ஆரவார அமளியுடன் வேட்பு மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஓக.01
வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்தது. இதன் போது பாண்ட் வாத்தியங்கள் முழங்க பட்டாசு கொழுத்தி பெரும் ஆரவாரத்துடன் வேட்பு மனுத் தாக்கல் செய்ய வருகை தந்தனர்.
நேற்றுப் புதன்கிழமை
தொடர்ச்சி: பக்கம் 21

## கூட்டமைப்பு வேட்பாளர்களை படையினர் அச்சுறுத்தவில்லை

### பலாலி படைத் தலைமையகம் மறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 01
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களை இராணுவத்தினரோ, புலனாய்வுப் பிரிவினரோ அச்சுறுத்தவில்லை எனவும், அவ்வாறு அச்சுறுத்தும் தேவை இல்லையெனவும் பலாலி பாதுகாப்புப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை வேட்பாளர்களான சாவகச்சேரியைச் சேர்ந்த சட்டத்தரணி சயந்தன், திருகோண
தொடர்ச்சி: பக்கம் 21


## அரசா, ஐ.தே.க வா தெரிவு? சுவாமிநாதன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 01
தமிழ்க் கட்சிகளை எதிர்த்து வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடவில்லை என்று தெரிவித்தார் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன்.
வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் 'உதயன்' பத்திரிகையிடம் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
"அரசுக்கா ஐக்கிய தேசியக் கட்சிக்கா வாக்களிப்பது என்பதைத் தமிழ் மக்கள் தீர்மானிக்க வேண்டும் என்றுதான் நாங்கள் கேட்
தொடர்ச்சி: பக்கம் 21

## மக்களை ஒன்று திரட்டும் களம் வடக்குத் தேர்தல்

### ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் கருத்து

யாழ்ப்பாணம், ஓக. 01
மாகாணசபையில் அதிகாரம் இல்லை என்பதாலேயே அன்றும் எதிர்த்தோம் இன்றும் எதிர்க்கின்றோம். இருப்பினும் போர் முடிந்த பின்னரும் இந்த அரசு மக்களுக்கு எதையும் வழங்கவில்லை. எனவே அனைத்து மக்களையும் ஒன்று திரட்டிப் போராடும் களமாகவே வடமாகாண
தொடர்ச்சி: பக்கம் 21

யாழ். மாவட்ட செயலகத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் வேட்புமனுவை தாக்கல் செய்வதற்காக கட்சியின் செயலாளரும் அமைச்சருமாக சுசில் பிரேமஜயந்த சகிதம் வேட்பாளர் குழாம். (உ-20)



ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் வேட்புமனுவை தாக்கல் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம். சுவாமிநாதன், தமிழ் முஸ்லிம் கூட்டமைப்புத் தலைவர் அஸாத் சாலி, முதன்மை வேட்பாளர் துவாரகேஸ்வரன் வேட்புமனுவை தாக்கல் செய்த பின்னர். (உ-20)



ஜே. வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி முதன்மை வேட்பாளர் சகிதம் வேட்புமனுவை தாக்கல் செய்த பின்னர் (உ-20)

# நீதிமன்ற அறிவித்தல் கிழித்து வீசப்பட்டது

## ஆனைக்கோட்டையில் சம்பவம்

நீதிமன்ற உத்தரவுப்படி வீட்டில் ஒட்டப்பட்ட அறிவித்தல் சிறிது நேரத்தில் அங்கிருந்து அகற்றப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று ஆனைக்கோட்டையில் பொலிஸாரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட குடும்பத்தினர் தங்கியிருந்த வீட்டில் இடம்பெற்றது.

ஆனைக்கோட்டையில் பொலிஸாரால் வெளியேற்றப்பட்ட குடும்பத்தவர்களை அதே வீட்டில் குடியிருக்க யாழ். நீதிமன்று நேற்று உத்தர விட்டு அது தொடர்பான வழக்கை செப்ரெம்பர் 9ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. எனினும் அறிவித்தலை ஒட்டச் சென்ற நீதிமன்ற உத்தியோத்தர்களை அங்கு அறிவித்தல் ஒட்டவேண்டாம் என்று வெளிநாட்டில் இருந்து வந்த பெண் தடுத்து நிறுத்தியுள்ளார். அதனால் உத்தியோகத்தர்கள் சுமார் 2 மணித்தியாலத்துக்கு மேலாக அங்கு காத்திருந்தனர். பெண் குறித்த அந்த இடத்தில் இருந்து சென்ற பின்னர் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அறிவித்தலை ஒட்டிச் சென்றனர்.

அந்த அறிவித்தல் சிறுது நேரத்தில் கிழித்து அகற்றப்பட்டது. சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த வீட்டின் குடியிருப்பாளரையும் நண்பரையும் யாழ். நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். அவர் களைப் பிணையில் செல்ல நீதிமன்று அனுமதி வழங்கியது. தொடர்ந்தும் தற்காலிகமாக குடியிருக்க அனுமதித்தது. (த-4)

# யாழ்.பஸ்ஸில் லஞ்சம் பெற்ற பொலிஸார் இருவர் சிக்கினர்

கொழும்பு,ஓக 01

தனியார் பஸ் நடத்துநரிடம் லஞ்சம் பெற்ற இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை கொழும்பில் இருந்து பருத்தித்துறை சென்ற தனியார் பஸ் புத்தளம் பகுதியில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களால் வழி மறிக்கப்பட்டுள்ளது.

பஸ்ஸின் ஆவணங்களைப் பரிசீலித்த பொலிஸார் நடத்துநரிடம் பணம் கோரியுள்ளனர்.

இதன்போது நடத்துநர் 300 ரூபாவை இரு பொலிஸாருக்கும் வழங்கிய போது குறித்த பஸ்ஸில் சிவில் உடையில் பயணித்த விசேட பொலிஸ் குழுவினர் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் மாஅதிபரின் ஆலோசனைக்கு அமைய விசேட பொலிஸ் குழு சிவில் உடையில் தனியார் பஸ்களை அவதானித்து வருகிறது. இவ்வாறு லஞ்சம் வழங்குவோர், வாங்குவோர் அவதானிக்கப்பட்டு உடன் கைது செய்யப்படுவர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (த)

# வடக்கில் நாம் வெல்வோம்

## அமைச்சர் சுசில் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 01

ஏனைய மாகாணங்களைப் போன்று வடமாகாணத்திலும் அரசு வெற்றிபெறும். இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த.

எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சார்பாக நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டது. இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களுடன் நல்லூரில் விசேட பூசை வழிபாடுகளில்பங்கெடுத்தஅமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் ஆகியோர் அதன் பின்னர் யாழ். மாவட்ட செயலகத்துக்கு சென்று வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

டக்ளஸ்"க்காகக் காத்திருப்பு

ஆதரவாளர் படையுடன் யாழ்.மாவட்ட செயலகத்துக்கு சென்ற இருவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவரது கட்சியினரும் வரும் வரை காத்திருக்க வேண்டியேற்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தனது ஆதரவாளர்களுடன் பட்டாசுகள் கொழுத்தி பெரும் ஆரவாரத்துடன் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு வருகை தந்தார். அதனைத் தொடர்ந்து அமைச்சர்களான சுசில் பிரேம ஜயந்த மற்றும் டக்ளஸ் தேவானந்தா, மாகாண சபை வேட்பாளர்களான இராமநாதன் அங்கஜன் மற்றும் தவராஜா ஆகியோர் மாவட்ட செயலகத்தினுள் வேட்பு மனுத் தாக்கல் செய்யச் சென்றனர்.

வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த அமைச்சர் சுசில்,

ஏனைய மாகாணசபைகளில் வெற்றி பெற்றதைப் போன்று வடமாகாண சபையிலும் எமது கட்சி வெற்றி பெறும் என்றார்.

இதன் பின்பு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு கிறீன் கிறாஸ் விடுதியில் இடம்பெற்றது. இதன் போது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் சுசில், 13 ஆவது திருத்தம் தொடர்பில் முடிவெடுப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதனூடாக 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்வது தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்றார். அத்துடன் இலங்கையில் 27 சதவீத சனத்தொகையை கொண்ட மேல் மாகாணத்தின் முதலமைச்சராக தான் இருந்ததாகவும் அதன்போது காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றிய பிரச்சினையில்லாமல் தன்னால் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்ததாகவும் தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த வேட்பாளர் தவராசா, மாகாணசபையில் இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் தெரிவிக்கையில், ஜனாதிபதியுடன் பேசி 13 ஆவது திருத்தத்தையும் தாண்டிய தீர்வை தமிழ் மக்களுக்காக பெற முடியும் என்று தெரிவித்தார்.

ஐ.ம.சு.மு.வின் யாழ்.மாவட்ட வேட்பாளர் விவரம்

அங்கஜன் இராமநாதன், ஆறுபிள்ளை சின்னத்துரை தவராஜா, நடராஜா தமிழகன், கந்தசாமி கமலேந்திரன், ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், பாலகிருஸ்ணன் சிவகுரு, அலெக்சாண்டர் சூசைமுத்து, சுந்தரம் டிவகலால், அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின், கோடீஸ்வரன் ருஷாங்கன், நாகன் கணேசன், ஞானசக்தி சிறீதரன், முடியப்பு ரெமிடியஸ், அகிலதாஸ் சிவக்கொழுந்து, நாகநாதி பொன்னம்பலம், கதிரவேலு செவ்வேள், அஹமட் சுல்ரான் சுபியான், குமாரு சர்வானந்தன், அப்துல் ஹமீட் நுர்மான் சிராஸ் மொஹமட். (ஐ-5)

# ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 70 பேர் கைது



கொழும்பு, ஓக 01

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட 70 பேரைக் கடற்படையினர் நேற்றுப் புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

இவர்கள் வாழைச்சேனைக் கடற்பரப்பில் வைத்தே கைதுசெய்யப்பட்டுள்ளனர். படகின் மூலம் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் சென்று கொண்டிருந்தபோது இவர்களைக் கடற்படையினர் கைதுசெய்து திருகோணமலைக்குக் கொண்டு செல்வதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மட்டக்களப்பு நகரில் மூன்று வான் மற்றும் ஒரு கார் ஆகியவற்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இவை சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காக ஆள்களை ஏற்றிச் சென்ற வாகனங்களாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# சட்ட விரோத வலைகள் கொக்கிளாயில் அழிப்பு

யாழ்ப்பாணம், ஓக.1

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் கடல் நீரேரியில் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்ட 164 கூட்டு வலைகள் கைப்பற்றப்பட்டு அவை அழிக்கப்பட்டு உள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.சுதாகரன் தலைமையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தேடுதலின் போது இவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோதமான வலைகளைப் பாவித்துத் தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்து செல்கின்றன. இதனால் அங்குள்ள ஏனைய மீனவர்கள் பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

இதனால் இதனைத் தடுப்பதற்காக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினால் திடீர் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த மாதம் 24 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது 60 கூட்டு வலைகள் கைப்பற்றப்பட்டன. அவை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அழிக்கப்பட்டன.

இந்த நிலையில் நேற்று முன்தினமும் திடீர் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன் போது 164 கூட்டு வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. தங்கூசி வலை பயன்படுத்திய ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரது வலையும் கைப்பற்றப்பட்டது. நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் 8 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான 164 கூட்டு வலைகளும் தங்கூசி வலையும் அழிக்கப்பட்டது.

சட்டவிரோத மீன்பிடி வலைகளைப் பயன்படுத்துபவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# யாழ்.பல்கலையில் நேற்று மாணவர் மோதல்

## பல்கலை வளாகத்துள் நுழைய அவர்களுக்குத் தடை

யாழ்ப்பாணம், ஓக 01

யாழ்.பல்கலைக்கழகத்தில் 3ஆம், 4ஆம் வருட கலைப்பீட மாணவருக்கிடையே நேற்றுக் குழு மோதல் ஏற்பட்டுள்ளது. அதனால் குறித்த இரண்டு வருடங்களைச் சேர்ந்த மாணவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து நேற்று வெளியேற்றப்பட்டனர். அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தினுள்ளும், பல்கலைக்கழக விடுதியினுள்ளும் நுழைய காலவரையறையற்ற தடை விதிக்கப்பட்டுள்ளதோடு பல்கலைக்கழக விடுதியில் தங்கியுள்ள இரண்டு வருடங்களையும் சேர்ந்த மாணவர்களையும் நேற்றிலிருந்து 12 மணித்தியாலங்களுக்குள் விடுதியை விட்டு வெளியேறுமாறு பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

எனினும் இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்கள் எதுவித தடையுமின்றிப் பல்கலைக் கழகத்தினுள் செல்ல முடியும் அவர்கள் தமது வழமையான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்றும் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இந்தத் தடைகளை மீறி பல்கலைக்கழகத்தினுள் நுழையும் மாணவர்கள் மீது பல்கலைக்கழக சட்ட விதிகளுக்கு அமைய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு பல்கலைக்கழகப் பதிவு இரத்துச் செய்யப்படும் என்றும் பதிவாளர் அறிவித்துள்ளார். (த-4)

# விந்தனுக்கு அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 01

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடவுள்ள யாழ்.மாநகர சபை உறுப்பினர் விந்தன் கனகரெத்தினம் குறித்து இனந்தெரியாதோர் தகவல் திரட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அவரது வீட்டுக்குச் சென்ற சிலர் அயலவர்களிடம் விந்தன் குறித்தும் அவர் மேற்கொண்டு வரும் பணிகள் குறித்தும் விசாரித்துச் சென்றுள்ளனர். இதனால் தனக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கூட்டமைப்புப் பிரதிநிதிகளிடம் தான் முறையிட்டுள்ளதாக உதயனிடம் தெரிவித்தார். (ஐ-4-400)

## மருத்துவமுகாம் பதாகையில் 'சுதந்திர தேசம் தொலைதூரம்'




யாழ்ப்பாணம், ஓக.1
"சுதந்திர தேசம் - தொலை தூரம்" இவ்வாறு கல்விச் சேவைகள் அமைச்சினால் வடமாகாண மாணவர்களுக்கான மருத்துவ பரிசோதனை பற்றிய அறிவித்தல் பதாகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களுக்கான மருத்துவ பரிசோதனையும் சிகிச்சையும் யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று நடத்தப்பட்டது. அதன் ஆரம்ப நிகழ்வின் போதே மேடையில் குறித்த பதாகை கட்டப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வுக்கு பௌத்த குருமார் இரண்டு பேரும் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மேடையில் விருந்தினர்களாக அமர்த்தப்பட்டிருந்தனர். யாழ்ப்பாணத்திலுள்ள இந்து குருமாரோ, கிறிஸ்தவ குருமாரோ அழைக்கப்பட்டிருக்கவில்லை. பிரதம விருந்தினராக வந்திருந்த அமைச்சர் துமிந்த திசாநாயக்க பௌத்த பாரம்பரியப்படி வெற்றிலை கொடுத்து வரவேற்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-4)

# பாடசாலை மாணவருக்கு மருத்துவ முகாம் நேற்று

### யாழ்ப்பாணத்தில் அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்





யாழ்ப்பாணம், ஓக.1
யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களுக்கான மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம் யாழ். மத்திய கல்லூரியில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. யாழ். வலயக் கல்வி அலுவலகமும் சுகாதாரப் பிரிவும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

யாழ். மாவட்டத்தில் வலய ரீதியாக ஒவ்வொரு பாடசாலையிலும் மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது. மருத்துவர்கள், பொது சுகாதார பரிசோதகர்களின் உதவியுடன் நேற்றைய மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு ஏனைய பாடசாலைகள் சிலவற்றினது மாணவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

நிகழ்வில் கல்விச் சேவைகள் அமைச்சர், அமைச்சின் அதிகாரிகள், ஆளுநர், பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், கல்வி அதிகாரிகள், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் கடந்த திங்கட்கிழமை வவுனியாவிலும் நேற்று முன்தினம் முல்லைத்தீவிலும் மருத்துவ முகாம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இன்றைய தினம் கிளிநொச்சியிலும் நாளையதினம் மன்னாரிலும் குறித்த மருத்துவ முகாமும் சிகிச்சையும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (வ-4)

## வேட்பாளர் படங்களை பொலிஸார் அகற்றினர்

வவுனியா, ஓக. 1
வவுனியாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் படங்கள் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன. இவற்றை பொலிஸார் அகற்றி வருகின்றனர்.

கடந்த 29 ஆம் திகதி வேட்பாளர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்த பின்பு பிரச்சார நடவடிக்கையில் இறங்கினர். வேட்பாளர் படங்களையும் பிரதேசங்களில் ஒட்டினர். இதனை அடுத்தே வேட்பாளர்களின் படங்களை பொலிஸார் அகற்றி வருகின்றனர். (எ-402)

## நிறை போதையில் முகாமுக்குள் நுழைந்த மூவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஓக.1
போதை தலைக்கேறிய நிலையில் படை முகாமுக்குள் நின்று அங்கு கடமையில் இருந்தவர்களை தரக்குறைவாக ஏசிய மூன்று பேரை சாவகச்சேரி நீதிமன்று விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகாமுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்ததாக படையினரால் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட மூவருக்கு எதிராக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் மூவரையும் ஓகஸ்ட் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-9)

## ரூ.3 மில்லியன் செலவில்
# பனை அபிவிருத்தி சபைக்கு நெடுந்தீவில் புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், ஓக.1
நெடுந்தீவுப் பிரதேசத்தில் பனை அபிவிருத்திச் சபைக்கான புதிய கட்டடம் 3 மில்லியன் ரூபா நிதியில் கட்டப்படவுள்ளது. இதற்கான பணிகள் இந்த வருட இறுதிக்குள் முடிவடையும் என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள பனை வளத்தை உரிய முறையில் பயன்படுத்தி அதனூடாக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கான பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகத்தை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


இதற்கமைவாக நெடுந்தீவு நான்காம் வட்டாரத்தில் உள்ள பனை அபிவிருத்திச் சபையின் மாதிரி பனம் தோட்டத்துக்கு அருகில் இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் கடந்த மாதம் நடப்பட்டுள்ளது. எனினும் இந்த வருட இறுதிக்குள் அதனைக் கட்டி முடிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் கட்டடத் தொகுதிக்கான 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் அதிகமான பனை உற்பத்தியாளர்கள் இருப்பதால் குறித்த புதிய கட்டடம் பயனாளிகளுக்கு நன்மை தரக் கூடியதாக அமையும்.

பயனாளிகளுக்குத் தேவையான ஆலோசனைகள், பயிற்சிகள், ஏற்றுமதி தொடர்பான ஆலோசனைகள், சந்தை வாய்ப்புக்கள் போன்றவற்றை இதனூடாகப் பெற்றுக் கொடுக்க முடியும்– எனவும் தெரிவித்தார். (வ-14)

## சாவகச்சேரி நகரில் கடை தீக்கிரை...



சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் திடீரென தீப்பிடித்ததில் பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகின. இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது. தேநீர் தயாரிப்பதற்காக மின் ஹீற்றரை வைத்துவிட்டு அதனை மறந்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை மின்சார ஒழுக்கு ஏற்பட்டு தீப்பிடித்துக் கொண்டது. அதில் 'கொமட் பிற்றிங்' பொருள்கள் மற்றும் பிளாஸ்ரிக் குழாய்கள் போன்றவை எரிந்து நாசமாகின. எரிந்து அழிந்த பொருள்களின் பெறுமதி உடனடியாகத் தெரியவரவில்லை. (ஒ-9)

## வவுனியா செயலகத்தில் இப்தார் நிகழ்வு

வவுனியா, ஓக.1
வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் சமூக சமய நல்லிணக்கத்திற்கான இப்தார் நிகழ்ச்சி வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.கே.பந்துலஹரிச்சந்திர தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை வவுனியா காமினி மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக அமைச்சர் ரிசாத்பதியுதீன் கலந்து கொள்வார். நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹுனைஸ் பாரூக், முத்தலிப்பாவா பரூக் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-402)

# தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா மன்னாரில் மூன்று நாள்கள்

மன்னார், ஓக.1
தமிழ் மொழியை உலக அரங்கில் ஏற்றி வைத்த தமிழ்த்தாயின் தன்னிகரில்லாத் தலைமகனாம் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாருடைய பிறப்பின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மன்னாரில் நாளை வெள்ளி முதல் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நகர மண்டபத்தில் மூன்று நாள்கள் இடம் பெறும் இவ்விழாவில் தொடக்க விழா, நிறைவு விழா உட்பட ஆய்வரங்குகள், இலக்கிய அரங்குகள், கலை அரங்குகள் என எட்டு அரங்குகள் இடம்பெறவுள்ளன.

நாளை 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை தொடக்க விழாவும், பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இலக்கிய அரங்கும், மாலை 6.30 - 9.30 மணி வரை கலை அரங்கும் இடம்பெறவுள்ளன.

3ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை ஆய்வரங்கும், பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இலக்கிய அரங்கும், மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரை கலை அரங்கும் இடம்பெறும்.

4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை ஆய்வரங்கும் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை நிறைவு விழாவும் இடம்பெறுவதோடு மேலும் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

தொடக்க விழாவின் போது 'தமிழாழி' என்ற பெயரில் நூற்றாண்டு விழா மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. தனிநாயகம் அடிகளாரின் வாழ்வையும் பணிகளையும் மையப்படுத்திய இரண்டு நாள் ஆய்வரங்கில் யாழ் பல்கலைக் கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக் கழகங்களில் இருந்து தமிழ் அறிஞர்கள், கல்விமான்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

மேலும் மன்னார் நகரின் பொது நூலகத்திற்கு முன்பாக உள்ள பிரதான வீதிக்கு அருகில் தனிநாயகம் அடிகளாரின் சிலையும் மன்னார் பனங்கட்டுக்கொட்டுப் பகுதியில் உள்ள கடலேரி வீதி 'தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் வீதி' என பெயர் மாற்றம் செய்யப்பட்டு திறந்துவைக்கப்படவுள்ளன. இவ்விழாவில் பங்குகொள்ள இலங்கையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள், கல்விமான்கள், படைப்பாளிகள், எழுத்தாளர்கள் என பலரும் மன்னாருக்கு வருகை தரவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-12)

# யாழ்., கொழும்பு பல்கலை இணைந்து நுண்கலை சார் போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்களும், கொழும்பு பல்கலைக்கழக கட்புல நூதன வெளிப்பாட்டுப் பிரிவு மாணவர்களுமாக 60 பேர் பங்குபற்றும் 'அவைக் காற்றும் கலையும் கட்புல நூதன கலையும்' போட்டி நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக் கழக மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இந்த நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது. ஆர்வலர்கள் வந்து கண்டுகளிக்கமுடியும் என்று யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் தெரிவித்தார்.

இந்தப் போட்டியில் இராமநாதன் நுண்கலைக் கழகத்தைச் சேர்ந்த நடனம், சங்கீதம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய மூன்று பிரிவுகளிலும் இருந்து தலா 10 மாணவர்கள் வீதம் 30 மாணவர்களும் இதே அடிப்படையில் கொழும்பு பல்கலைக்கழகத்தில்பங்கு கொண்டுள்ளனர்.

இந்தப் போட்டி நிகழ்வில் தமிழ், சிங்கள பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் வடிவமைப்புக்களாக வெளிப்படுத்தப்பட்டன.

பரஸ்பரம் இரு பிரிவு பாரம்பரியங்களையும் விளங்கிக் கொள்ளும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கியின் செயற்றிட்டத்தின் கீழ் 21 ஆம் நூற்றாண்டுக்கான பல்கலைக்கழகங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் கொழும்பு மாணவர்கள் இங்கு வந்து இதனை முன்னெடுக்கின்றனர் என்று பேராசிரியர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 03 - 03 - 1933

இறப்பு 12 - 08 - 2012

அமரர் **கந்தையா முத்துத்தம்பி**

திதி- 01.08.2013 வியாழக்கிழமை

பாசத்தின் உறைவிடமாய் அன்பின்
திருவுருவாய்
குடும்பத்தின் தலைவனாய் எங்களை
வழிநடத்திய தெய்வமே!
ஆண்டு ஒன்று நகர்ந்தாலும் உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டு அகலாது
எங்கள் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து
ஆண்டவன் அடியில் உங்கள்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்
உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

இல.137/2, மில் வீதி,
உக்குளாங்குளம்,
வவுனியா.
தொ.இல- 0776014918

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கரத்தினம் இராசரத்தினம்



அரசடி ஒழுங்கை, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் இராசரத்தினம் (ஓய்வுபெற்ற உப அதிபர், யா/கொக்குவில் இராமகிருஸ்ணா வித்தியாலயம்), 30.07.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தையா இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் ஆனந்தநடராஜா, காலஞ்சென்றவர்களான ஆனந்தலட்சுமி, தியாகேஸ்வரி, நடேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரஸ்வதி, காலஞ்சென்ற குருபாலசிங்கம் மற்றும் நித்தியானந்தன், சிவராசா- சிவபாக்கியம், அரசரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் இந்திரபகவான்- சுஜித்தா, கிருத்திகா, சஞ்சுதன் ஆகியோரின் சிறிய தாயும் ரதீஸ்கண்ணா- மயூறினி சுதாகர் ஆகியோரின் மாமியும் ஹேமதிவ்வியம், கோபிசன், லோகிசன், ஹேனுஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (02.08.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

தகவல்:
க.இராசரத்தினம்
(கணவர்)

(30109)

## தொடர்ச்சி....

### சிகரெட், மதுபானம் விலைகள் உயர்வு

மதுபானம் மற்றும் பியர் ஆகியவற்றின் விலைகள் நேற்று புதன்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்தந்த நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

அதன் பிரகாரம் ஒரு போத்தல் சாராயத்தின் விலை 30 ரூபாவினாலும் ஒரு போத்தல் பியரின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசினால் சுங்கத் தீர்வை அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்தே விலைகளை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த நிறுவனங்கள் அறிவித்துள்ளன. (த்)

### தமிழ்நாட்டு மீனவர் 34 பேர் கைது

கடல்பகுதியில் வைத்து கடலில் ரோந்து சென்ற கடற்படையினர் இவர்களைக் க்கைது செய்தனர்.

கைதான இம்மீனவர்கள் நேற்று புதன் கிழமை நண்பகல் யாழ். பிராந்திய கடற்றொழில், நீரியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே.கணேசமூர்த்தியிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்த தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(த-8)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்துரை சிவபாக்கியம்



எழுதுமட்டுவாள், நாகர் கோவில் வீதி, ''அசோக பவனத்தில்'' வசித்தவரும் தற்பொழுது கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற ''சேர்மன்'' சின்னத்துரையின் அருமை மனைவி சிவபாக்கியம் நேற்று முன்தினம் (30.07.2013) செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தலிங்கம்-இராசம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, துரைசிங்கம், நடராஜா மற்றும் இரத்தினசபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அசோக்குமார் மற்றும் அசோகராணி, அசோகமலர் ஆகியோரின் அருமைத் தாயும், சுபத்திராதேவி, நடராஜா, சதானந்தன் ஆகியோரின் அருமை மாமியும், சிகதரன், கவிதா, வித்யா, கிரிஜா, பாஸ்கரன், பிரபாகரன், யசோதை, துஷ்யந்தி, அனசூயா, அரவிந்தன், நிமலன், பிரம்மியா, ஹேமா, சுகன்னியா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரத்ன மலர்சாலை 1ஆம் மாடியில் (VIP) இன்று (01.08.2013) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப 4.30 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35/9,
யோசப் ஒழுங்கை,
பம்பலப்பிட்டி.

தகவல்:
வீ. நடராஜா - மருமகன்
தொ.பே: 0112 582976
0772 224433

(சி/10681)(10,8)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆறுமுகம் கணேஸ்வரி

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் கணேஸ்வரி நேற்று (31.07.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்)- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரியும், மயில்வாகணம் ஆறுமுகத்தின்(ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதிவான்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற மயில்வாகனம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கணேசமூர்த்தி, கமலநாதன், யோகநாதன், காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் இந்திராணி ஆகியோரின் மைத்துனியும், கணேசலிங்கத்தின்(கிராம உத்தியோகத்தர், அச்சுவேலி) ஒன்றுவிட்ட சகோதரியும், காலஞ்சென்ற நடராசா(ஓய்வுபெற்ற அதிபர்), பண்டிதர் சதாசிவம்(ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் மருமகளும், பொன். சின்னத்தம்பியின் (வைத்தியகலாநிதி), பெறாமகளும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2013) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊறணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொலிகண்டி மேற்கு,
வல்வெட்டித்துறை,

தகவல்:
ம. ஆறுமுகம் (கணவர்)

### கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து

(இளைப்பாறிய பிரதம தபாலதிபர், அகில இலங்கை சமாதான நீதவான்)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து (30.07.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இணுவில் கிழக்கு இளைப்பாறிய ஆசிரியர் சங்கரப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தேவாம்பிகையின் அன்புக் கணவரும், தேவகுமாரி(ஆசிரியை, தொண்டமானாறு வீரகத்தி மகா வித்தியாலயம், யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை), கேசகுமாரி(அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்துறைத்துத் திணைக்களம், வடக்கு மாகாண சபை), புவனகுமார்(அமெரிக்கா), புவனகுமாரி(ஆசிரியை, குருநாகல், பரகஸ்தெனிய, தேசிய பாடசாலை), தர்மகுமாரி (அபிவிருத்தி உத்தியோகத்தர், வவுனியா நகரசபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. யோகேந்திரன்(வைத்திய பொறுப்பதிகாரி, கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை நிலாவெளி), கேதீஸ்வரன்(ஆசிரியர், குருநாகல் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், ஹாஹினி, அகிலேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, செல்லமுத்து, பாலசிங்கம், குமாரசூரியர், பூரணம், ஆறுமுகம் மற்றும் திசைவீரசிங்கம்(ஜமேக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப.10.00மணியளவில் இடம்பெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சிவதேவி இல்லம்"
உடுப்பிட்டி.

தகவல்.
குடும்பத்தினர்.

## கருங்குளவி தாக்கி மூவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, ஓக.1
பனை மரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் வீதியில் நடந்து சென்ற இரு பெண்களையும் சைக்கிளில் சென்ற ஆண் ஒருவரையும் துரத்தித் துரத்தித் தாக்கின.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மட்டுவில் பகுதியில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் வீசிய கடும் காற்றால் பனையிலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகளே இவ்விதம் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த புஷ்பாகரன் ஏஞ்சல் அகள்வாஜி (வயது-30), துரைசிங்கம் பாக்கியலட்சுமி (வயது-60) தாளையம்பதி வீதியைச் சேர்ந்த சண்முகலிங்கம் சிவஜங்கரன் (வயது-31) ஆகியோரே கருங்குளவிகளால் தாக்கப்பட்டவர்களாவர். இந்த மூவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (வ-9)

## மதுபாவனையை கட்டுப்படுத்த தென்மராட்சியில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஓக.1
தென்மராட்சிப் பிரதேசத்தில் மதுபாவனை மற்றும் புகைத்தல் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மதுவரித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தால் வருடந்தோறும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் விழிப்புணர்வுச் செயற்றிட்டத்துக்கு அமைவாக இந்த வருடமும் கிராம ரீதியாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


கிராம ரீதியாக மதுபாவனையாளர்கள், புகைத்தல் பொருள் பாவனையாளர்கள் ஆகியோரை நேரடியாகச் சந்தித்து அத்தகைய பாவனைகளைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு ஆலோசனைகளை மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் வழங்கி வருகின்றனர்.

இதனூடாக தென்மராட்சிப் பிரதேசத்தில் மதுபாவனை கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் மதுபாவனையாளர்கள் மதுபாவனையில் இருந்து விலகி வருவதையும் அவதானிக்க முடிந்துள்ளது.

தொடர்ந்து இந்தச் செயற்றிட்டங்களை முன்னெடுக்கக் கூடியதாக மதுவரித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

# கொழும்புத்துறை ஹெலன் தோட்ட மக்களுக்கு மின்சாரம் கிடைக்குமா?

யாழ்ப்பாணம், ஒக்.1
கொழும்புத்துறை ஹெலன் தோட்டம் பகுதியில் குடியிருக்கும் மக்கள் தமது பகுதிக்கு இதுவரை மின் விநியோகம் வழங்கப்பட வில்லை என்று விசனம் தெரிவிக்கின்றனர்.



பல தடவைகள் மின் வழங்குமாறு கேட்டிருந்தும், வடக்கின் வசந்தம் திட்டத்தில் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட போதும், இதுவரை தமது பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக மின்சார சபையுடன் தொடர்பு கொண்டதாகவும் அவர்கள் மாநகர முதல்வரிடமிருந்து கடிதம் வாங்கி வந் தால் நடவடிக்கை எடுப்பதாக தெரி வித்ததாகவும் அவர்கள் கூறினர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் முதல்வரைச் சந்திக்க யாழ்.மாநகர சபைக்கும் சமுகமளித்திருந்தனர். முதல்வர் கொழும்பு சென்றுள்ளதால் அவரைச் சந்திக்க முடியவில்லை.

தமது பகுதியில் பாம்புத் தொல்லைகள் அதிகரித்துள்ளதால் இரவு வேளையில் வெளிச்சம் அவசியம். ஹெலன் தோட்டப் பகுதியில் 350 குடும்பங்கள் வரை வசிக்கின்றன.

எனவே அப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை கொள்வரா என அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (வ-7)

## குற்றச் செயல்களில் ஈடுபட்ட 154 பேருக்கு அபராதம்

### சங்கானை மதுவரித் திணைக்களப் பிரிவில்

யாழ்ப்பாணம், ஓக. 1
சங்கானை மதுவரித்திணைக்களப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 6 மாத காலப்பகுதிக்குள் சட்ட விரோத குற்றச் செயல்களில் ஈடுபட்ட 154 பேருக்கு 3 லட்சத்து 33 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

சங்கானை மதுவரித்திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக அரச சாராயத்தை விற்பனை செய்தோர், வீடுகளில் வைத்து கள் விற்பனை செய்தோர், 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகைத்தல் பொருள் விற்பனை செய்தவர்கள் என 154 பேர் இனங்காணப்பட்டு நீதிமன்றங்களில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்களுக்கு தண்டப் பணமாக 3 லட்சத்து 33 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது. சட்ட விரோத குற்றச் செயல்களுக்கு ஏற்ப அவர்களுக்கான தண்டப்பணத்தை நீதிமன்றம் விதித்திருந்தது.

இதற்கமைவாக கடந்த ஜனவரி மாதம் 6 பேரிடமிருந்து 65 ஆயிரத்து 500 ரூபாவும், பெப்ரவரி மாதம் 10 பேரிடமிருந்து 44 ஆயிரத்து 500 ரூபாவும், மார்ச் மாதம் 51 பேரிடமிருந்து 13 ஆயிரத்து 500 ரூபாவும், ஏப்ரல் மாதம் 21 பேரிடமிருந்து 95 ஆயிரம் ரூபாவும், மே மாதம் 42 பேருக்கு 70 ஆயிரத்து 500 ரூபாவும், ஜூன் மாதம் 23 பேரிடமிருந்து 44 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளது. (வ-14)

## 648 ஓட்டோக்கள் தரிப்பிடங்களிலிருந்து சேவையில்

யாழ்ப்பாணம், ஓக.1
யாழ்.மாவட்டத்தில் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 648 ஓட்டோக்கள் அவற்றுக்காக ஒதுக்கப்பட்ட தரிப்பிடங்களில் இருந்து பொது மக்களுக்கான சேவையில் ஈடுபட்டு வருகின்றன என்று யாழ்.மாவட்ட ஓட்டோ சங்கத் தலைவர் எஸ்.ராஜ்குமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:



தற்போது தமது சொந்தத் தேவைகளுக்காக சிலர் ஓட்டோக்களை சொந்தமாக வைத்திருக்கின்ற போதும் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்களுக்கு மட்டுமே தரிப்பிடங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதனூடாக பொதுமக்கள் தமது வசதிக்கு ஏற்ப ஓட்டோக்களைப் பயன்படுத்த முடியும். சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்களுக்கு அடையாளப்படுத்தக் கூடிய வகையில் ஒதுக்கப்பட்ட தரிப்பிடங்களுக்கு ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் பாதுகாப்பாக பயணிக்கக் கூடியதாக இருப்பதுடன் ஓட்டோ சாரதிகளுக்கும் பயணிகளுடன் முரண்பாடு ஏற்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ்.மாவட்ட ஓட்டோ சங்கத்தில் 648 ஓட்டோக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நகர்ப் பகுதி உட்பட ஏனைய உள்ளூர் பிரதேசங்களுக்கும் தரிப்பிட ஒழுங்குகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (வ-14)



இலங்கை தமிழரசுக் கட்சியின் வவுனியா அலுவலகம் அண்மையில் வவுனியா குருமண்காடு பகுதியில் திறந்து வைக்கப்பட்டபோது கட்சியின் கொடியை தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா ஏற்றி வைப்பதைக் காணலாம். (ஒ-266)



வவுனியாவில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் வேட்புமனுவை தாக்கல் செய்வதற்காக அமைச்சர் றிஷாத் பதியுதீன் சகிதம் வந்த வேட்பாளர் குழாம். (ஒ-402)



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் நேற்று கிளிநொச்சியில் வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர்....



நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க சகிதம் மக்கள் விடுதலை முன்னணியினர் கிளிநொச்சியில் வேட்புமனுத் தாக்கல் செய்ய வருகை தந்த வேளை....

## உத்தரபிரதேசம் நான்காக பிரிக்கப்பட வேண்டும் – மாயாவதி

புதுடில்லி, ஓக.1
உத்தரபிரதேசத்தை நான்காகப் பிரிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் உத்தரபிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் மாயாவதி.

தெலுங்கானா உதயமாவது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

''ஆந்திராவை பிரித்து தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்பட்டதை வரவேற்கிறேன். இதற்கு முன்னர் உத்தரபிரதேச மாநிலத்தை நிர்வாக வசதிக்காக நான்காக பிரிக்க வேண்டும் என மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்தேன்.

ஆனால் மத்திய அரசு செவிசாய்க்கவில்லை. தற்போது ஆந்திராவை பிரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதே போன்றே உத்தரபிரதேசத்தையும், பண்டல் கண்ட்,பூர்வாஞ்சல், ஹபீத் பிரதேசஷ் என பிரிக்க வேண்டும். இதன் மூலம் நிர்வாக வசதி எளிமையாகும்.சிறிய மாநிலங்கள் பிரிக்கப்படுவதை நான் எப்போதும் வரவேற்பேன். இதற்கு தற்போதைய சமாஜ்வாதி கட்சியும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் '' என்றார். (ற)



# உதயமாகின்றது தெலுங்கானா கொந்தளிக்கின்றது ஆந்திரா

புதுடில்லி, ஓக.1
இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக தெலுங்கானாவை உருவாக்குதற்கு காங்கிரஸ் கூட்டணி செயற்குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டள்ளது.

அதையடுத்து ஆந்திராவின் பல பகுதிகளில் எதிர்ப்பலைகள் கிளம்பியுள்ளன.

தெலுங்கானா மாநிலம் அமைப்பு ரீதியாக உருவாக 6 மாதங்கள் ஆகும். எதிர்வரும் 5ஆம் திகதி தொடங்கும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் தெலுங்கானா மாநிலத்துக்கான மசோதா தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்படும். அதன் பின்னர், மாநில வருவாய், நதிநீர் பங்கீடு, சொத்து மற்றும் கடன்கள் பிரிவினை குறித்து விவாதித்து முடிவு செய்ய தெலுங்கானா,ராயலசீமா, கடலோர ஆந்திரா பகுதிகளை சேர்ந்த தலைவர்கள் கொண்ட குழுவை பிரதமர் நியமிப்பார். இந்த நடைமுறைகள் முடிந்து அடுத்த ஆண்டு ஆரம்பத்தில்தான் தெலுங்கானா மாநிலம் உருவாகும்.

தெலுங்கானா மாநிலம் உதயமாகும் என காங்கிரஸ் மேலிடம் அறிவிப்பு செய்தவுடன் தெலுங்கானா மாவட்டங்களை சேர்ந்த மக்கள் உற்சாகமடைந்து மகிழ்ச்சியில் திளைத்தனர். தெலுங்கானா பகுதியில் உள்ள 10 மாவட்டங்களில் அனைத்து அரசியல் கட்சிகளும், பல்வேறு அமைப்பினரும் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

அதேவேளை, தெலுங்கானா மாநிலம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் மாணவர்கள் பேரணி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆந்திராவை பிரித்து தெலுங்கானா மாநிலம் அமைக்கப்படுவதை எதிர்த்து விஜயவாடாவில் கூட்டு நடவடிக்கை குழுவின் சார்பில் பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த 3 ஆயிரம் மாணவ, மாணவியர் பேரணியாக சென்றனர். மாணவர்கள் போராட்டத்துக்கு ஆதரவாக பொதுத்துறை, தனியார் துறை ஊழியர்கள், தொழிற்சங்க தலைவர்கள், சட்டத்தரணிகளும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதையடுத்து ஆந்திராவில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. அங்கு பெருந்தொகையான பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈபடுபடுத்தப்பட்டுள்ளனர். (ற)



## நளினி கைது

சென்னை, ஓக.1
வேலூர் பெண்கள் சிறையில் கைத்தொலைபேசி பயன்படுத்திய வழக்கு தொடர்பாக நளினி கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றவர் நளினி. இவர் வேலூர் பெண்கள் தனிச்சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

2010 ஏப்ரல் 20ஆம் திகதி அதிகாலை நளினியின் அடைத்து வைக்கப்பட்டிருந்த பகுதியில் பொலிஸார் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது நளியினியிடம் இருந்து ஒரு கைத்தொலைபேசி பறிமுதல் செய்யப்பட்டது.

இதுதொடர்பாக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எனினும் விசாரணைகளின் போது நளினியைப் பொலிஸார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவில்லை.

அதையடுத்து நளினியை நீதிமன்றில் முன்னிலைப் படுத்துமாறு உத்தரவிட்ட நீதிபதி, அவருக்குப் பிடியாணை பிறப்பித்தார்.

அதன்படி குறித்த வழக்குத் தொடர்பாக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ள நளினி எதிர்வரும் 6 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ற)

**வீடு விற்பனைக்கு**

நீர்வேலி தெற்கு, ஒல்லை வைரவர் கோயில் அருகில் 2 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. (30104)(6.2)

தொடர்பு:-077 722 2142

## பேஸ்புக்கால் இணைந்த குடும்பம்

சென்னை, ஓக.1
சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு வீட்டை விட்டு ஓடிய இளைஞர் பேஸ்புக் மூலமாக தனது குடும்பத்தாருடன் இணைந்துள்ளார்.

புனேயில் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், சரியாக படிக்கவில்லை என்று தாய் திட்டியதால் மனம் உடைந்து வீட்டை விட்டு வெளியேறினான் சிறுவன் அங்குஷ் டேமேல்.

வீட்டில் இருந்து வெளி யேறியவன், நேராக குருத்வாரா கோயிலுக்குச் சென்று அங்கு கோயில் திருப்பணிகளை செய்து வந்தான். அங்கிருந்த குரு ஒருவர், அவனுக்கு குர்பன் சிங் என்று பெயரிட்டு, அவனை பராமரித்து வந்தார். அங் குஷ், பல வழிகளில் தனது குடும்பத் தாரை தேடும் பணியிலும் ஈடுபட்டு வந்தான்.

இறுதியாக, பேஸ்புக்கில் தன்னை விட இரண்டு வயது குறைந்த தனது சகோதரனின் சந்தோஷ் என்ற பெயரை தேடி, அவனை தொடர்பு கொண்டு தன்னை பற்றி கூறினான்.

அதையடுத்து பிரிந்த குடும்பம் ஒன்று சேர்ந்துள்ளது. தற்போது வீடு திரும்பியுள்ள அங்குஷ், தன்னை நல்வழிப்படுத்திய குருவுக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ளார். (ற)

**சீட்டிழுப்பு முடிவுகள்**

30.07.2013 அன்று முல்லைத்தீவு மாவட்ட கல்வி மற்றும் அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தால் நடத்தப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றோர் விவரம்.

சீட்டை இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 16991 | 2ஆம் பரிசு | 06855 |
| 3ஆம் பரிசு | 39915 | | |

ஆறுதல் பரிசுகள்:

சீட்டை இலக்கம்- 58110,56274, 00615,57766,38326

மேற்படி பரிசுக்குரியவர்கள் உரிய ஆவணங்களுடன் மாவட்டச் செயலகம் முல்லைத்தீவிற்கு சமுகமளித்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்

இந்த அதிஸ்டலாபச் சீட்டிழுப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நண்பர்களுக்கும் இந்த நிதியத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நா.வேதநாயகன்,
தலைவரும் அரசாங்க அதிபரும்
கல்வி மேம்பாட்டு நம்பிக்கை நிதியம்,
முல்லைத்தீவு மாவட்டம்.

தொடர்பு: 021 229 0134

(C/10717)(5.6)

**மக்கள் வங்கி**

**அறிவித்தல்**

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.06.2012 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள், 10.08.2013 இலிருந்தும், 31.07.2012 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் எதிர்வரும் 07.09.2013 இலிருந்தும் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | - |
| நெல்லியடி | - |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம்,**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

(சி/10718)
(2-6)



மன அழுத்தம், கோபம், நோய்கள் குறைய ஆரோக்கியம், நிம்மதி, செயல்திறன், மகிழ்ச்சி கூட தெளிவான மனம், இனிதான உறவு அமைய

THE ART OF LIVING

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் "ஆனந்த அலைகள்" பயிற்சியில் பங்கு கொள்வீர்!

அனைவரும் எளிதில் பயிலக்கூடிய யோகாசனங்கள், பிரணாயாமம், தியானம் மற்றும் "சுதர்ஷனக்ரியா" எனும் அற்புதமான மூச்சுப் பயிற்சி உள்ளடக்கியது.

இடம் : யாழ் நிலையம், 254, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (கலட்டிச் சந்திக்கு அருகில்)
காலம் : 02/08/2013 வெள்ளிக்கிழமை முதல் 04/08/2013 ஞாயிற்றுக்கிழமை வரை
நேரம் : காலை 6 - 8.30 மணி / முற்பகல் 10.30 -1 மணி / மாலை 6 - 8.30 மணி

01/08/2013 வியாழக்கிழமை மாலை 6 - 8 மணிக்கு இலவச அறிமுக உரை, தியானம், குருஜியின் காணொளிச் சொற்பொழிவு மற்றும் சத்சங்கம் நடைபெறும்.

(30102)(10.6.3)

பங்கு கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்:
0775071363 / 0754303380



## சீனாவில் கடும் வெப்பம்



பீஜிங், ஓக.1
சீனாவின் பல பகுதிகளில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.
கடும் வெப்பமான காலநிலை காரணமாக இதுவரை 10க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ள நிலையில், சில பகுதிகளில் அடிக்கடி அனர்த்த எச்சரிக்கையும் விடுக்கப்பட்டு வருகிறது.
கடந்த 140 வருடங்களில் சீனாவில் இவ்வாறான காலநிலை காணப்படவில்லை என்று தெரிவித்துள்ள சீன அதிகாரிகள், வெப்பத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர். (ற)



நேற்றுமுன்தினம் ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 60 பேர் உயிரிழந்தனர். சந்தைத் தொகுதியில் நடத்தப்பட்ட இந்தக் குண்டுத் தாக்குதலில் அருகில் நிறுத்தப்பட்ட வாகனங்கள் பல அடி தூரம் தூக்கி வீசப்பட்டன. ஷனி முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இவ்வாறான தாக்குதல்கள் நடத்தப்படுவது அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளன. (ற)

## 78 பேரின் உயிரை பறித்த தொலைபேசி உரையாடல்

பேர்லின், ஓக.1
ஸ்பெயினில் கடந்த வாரம் 78 பேர் உயிரிழந்த ரயில் விபத்து ஏற்பட்டமைக்கு ரயிலின் சாரதி கைத் தொலைபேசியில் உரையாடியவாறு பணியாற்றியமையே முக்கிய காரணம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
விபத்துக்கான ரயிலின் கறுப்புப் பெட்டியில் பதிவாகியிருந்த தரவுகளின் அடிப்படையிலேயே பொலிஸார் இதனைத் தெரிவித்துள்ளதுடன், விபத்துக் குறித்து மேலதிக தரவுகள் திரட்டப்படுகின்றன என்றும் தெரிவித்தனர்.
தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த.ரயிலின் சாரதி, ரயிலின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## 6 கிலோ குண்டுக் குழந்தை சுகப்பிரசவம்




பேர்லின், ஓக.1
ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் 6 கிலோ எடையுள்ள பெண் குழந்தையை சத்திர சிகிச்சை ஏதுமின்றி சுகப்பிரசவ முறையில் பெற்றெடுத்துள்ளார்.
ஜேர்மனியில் பிறந்த போது அதிக எடை கொண்ட குழந்தையாக இந்தக் குழந் தை ஜேர்மனியில் கருதப்படுகின்றது.
இதற்கு முன்னதாக 2011 ஆம் ஆண்டு பெர்லினில் 13 பவுண்ட் எடையுடன் பிறந்த ஆண் குழந்தை தான் அதிக எடை கொண்டதாகக் கருதப்பட்டது. அந்தச் சாதனையை தற்போது பிறந்துள்ள ஜஸ்வீன் என்ற இந்த பெண் குழந்தை முறியடித்து விட்டது. (ற)

# தவிர்க்க முடியாதது இந்திய இராணுவம்

## ஆசிய - பசுபிக் பிராந்தியம் குறித்து அமெரிக்க இராணுவத் தளபதி கருத்து

வொஷிங்டன், ஓக.1
ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் இந்திய இராணுவம் தவிர்க்க முடியாத செல்வாக்குடன் திகழ்கின்றது என்று அமெரிக்க இராணுவத் தளபதி ரெமன் டி ஒடிர்னோ தெரிவித்துள்ளார்.



*ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் ஆளுமையை நிலை நாட்ட இந்தியாவுடனான இராணுவ ஒத்தழைப்பு அவசியம்.*

இந்தியச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு அமெரிக்கா திரும்பியுள்ள ஒடிர்னோ, தமது பயணம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்;
''ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் இந்திய இராணுவம் தவிர்க்க முடியாத செல்வாக்குடன் திகழ்கின்றது. இந்திய இராணுவத்திடமிருந்து அமெரிக்கா கற்க வேண்டிய பாடங்கள் ஏராளமாக இருக்கின்றன. பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளோடு உள்ள எல்லைப் பிரச்சினைகளையும், உள்நாட்டு தீவிரவாத ஊடுருவல்களையும் திறம்பட இந்தியா சமாளித்து வருகின்றது. அந்த வகையில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஏராளமான ஒற்றுமைகள் இருக்கின்றன. ஆசிய - பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் ஆளுமையை நிலை நாட்ட இந்தியாவுடனான இராணுவ ஒத்தழைப்பு அவசியம்'' என்று தெரிவித்தார். (ற)

விக்கிலீக்ஸுக்கு தகவல் வழங்கியமை

## மேன்னிங் மீதான குற்றச்சாட்டு உறுதி

வொஷிங்டன், ஓக.1
விக்கிலீக்ஸ் இணையத்தளத்துக்கு இரகசியத் தகவல்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட அமெரிக்க முன்னாள் இராணுவ வீரர் பிராட்லி மேன்னிங் மீதான குற்றச்சாட்டுக்களை அந்நாட்டு நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
பிராட்லி மேன்னிங் மீது 20 பிரிவுகளின் கீழ் அமெரிக்க அரசு வழக்குத் தாக்கல் செய்திருந்தது. அவை தற்போது நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவருக்கு 136 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மேன்னிங், ''அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பாக விவாதத்தை உருவாக்குவதற்கே விக்கிலீக்ஸ் இணையத்தளத்திடம் சில தகவல்களை வழங்கினேன்''



என்று தெரிவித்துள்ளார்.

### மோசமான முன்னுதாரணம்

இதேவேளை, இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவுநர் ஜுலியன் அசாஞ்சே நீதிமன்றத்தின் இந்த நடவடிக்கை ஒரு மோசமான முன்னுதாரணம் என்று தெரிவித்துள்ளார்.
அமெரிக்க அரசு செய்த குற்றங்களை வெளி உலகுக்கு அம்பலப்படுத்திய மேன்னிங்கின் செயல் தற்துணிவு மிக்கது. நீதிமன்றத்தின் இந்த நடவடிக்கையை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்ய வேண்டும்'' என்றும் அசாஞ்சே தெரிவித்துள்ளார். (ற)

## பாக். புதிய ஜனாதிபதியாக மம்நூன் ஹுசேன் தெரிவு

இஸ்லாமாபாத், ஓக.1
பாகிஸ்தானின் புதிய ஜனாதிபதியாக மம்நூன் ஹுசேன் (வயது-73) தெரிவு செய்யப்பட்டார்.
இவர் அந்நாட்டுப் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சியைச் சேர்ந்தவராவார்.
வாக்கெடுப்பில் 277 வாக்குகளைப்பெற்றுஅமோகவெற்றி பெற்றதை அடுத்து ஹுசேன் செப்ரெம்பர் 9ஆம் திகதி ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார்.
பாகிஸ்தானின் தற்போதைய ஜனாதிபதி சர்தாரி உட்பட இதுவரை 11 பேர் ஜனாதிபதிகளாகப் பதவி வகித்துள்ளனர். ஹுசேன் பாகிஸ்தானின் 12 ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ளார்.
இதுவரை ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர்களில் 5 பேர் இராணுவத் தளபதிகளாக இருந்தவர்கள். அவர்களில் 4 பேர் முறை கேடாக ஆட்சியைப் பிடித்திருந்தவர்கள். (ற)



## ஏஞ்சலினா ஜுலிக்கே சம்பளம் அதிகமாம்!



நியூயோர்க், ஓக.1
ஹொலிவூட் பட உலகில் கடந்த ஆண்டு அதிக சம்பளம் வாங்கிய நடிகைகள் குறித்த விவரத்தை நியூயோர்க்கில் இருந்து வெளிவரும் சஞ்சிகை ஒன்று வெளியிட்டுள்ளது. அந்தப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளார் நடிகை ஏஞ்சலினா ஜுலி.
அவருடைய கடந்த வருட வருமானம் 33 மில்லியன் டொலராகும்.
2ஆவது இடத்தில் 26 மில்லியன் டொலர் வருமானத்துடன் ஒஸ்கர் விருது பெற்ற நடிகை ஜெனிபர் லோரன்ஸும், 3ஆவது இடத்தில் 22 மில்லியன் டொலர் வருமானத்துடன் நடிகை கிறிஸ்டின் ஸ்டுவோர்டும் உள்ளனர். (ற)

**38 வயதாகும் ஏஞ்சலினா அண்மையில் மார்பக புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்றதுடன், சத்திர சிகிச்சை மூலம் மார்பகங்களை அகற்றியிருந்தார்.**



தெற்கு இத்தாலியில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்த 38 பேரின் உடல்களும் ஒரே இடத்தில் தேசிய மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டன. கட்டுப்பாட்டை இழந்த பஸ் 30 மீற்றர் ஆழமான பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. விபத்தில் காயமடைந்த 11 பேர் இன்னமும் மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பின் கீழ் உள்ளனர். (ற)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு




☎ 0215671111
advt@uthayan.com

## அகவை 60 இல் வாழ்த்துகின்றோம்



திருவாளர் S.V.மகேந்திரன்
B.Sc Dip. in Ed, S.L.T.S-1
யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் - கணிதம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக சிறப்பாகக் கடமையாற்றி ஓய்வுபெறும் S.V.மகேந்திரன் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தினை குடும்பத்தினருடன் சிறப்பாகக் கழிக்கவும், நீண்ட ஆயுளைப் பெற்று வாழவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

விஞ்ஞான-கணித அலகு,
வலயக்கல்வி அலுவலகம்,யாழ்ப்பாணம்.

**TV கள் மலிவு விலையில்**

யாழ் நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் உத்தரவாதத்துடன் SONY Wega TV கள் 21"- 11000/= முதல், 29"- 16000/= Panasonic 29" -15000/= DTS amp, Box, DVD என்பன.
தொடர்பு: 077 044 0570
சோனி ரேற் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, கஸ்தூரியார். (29015)(45.6.3)

**சோதிடம்**

★ கல்வியில் சித்தியுண்டா? ★ திருமணம் நிறைவேறுமா?
★ உத்தியோகம் கிடைக்குமா? ★ நோய் நீங்குமா?
★ வியாபாரம் விருத்தியாகுமா? ★ வெளிநாடு போகலாமா?
கேட்டுத்தான் பாருங்களேன்!
ஜாதகம், கைரேகை, எண்சோதிடம், திருமணப் பொருத்தம், வீட்டுக்கு நிலையம் போன்றவற்றிற்கு நேரில் சந்தியுங்கள்!!!
"சிவா சோதிட நிலையம்"
100, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(யாழ்/ இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
தொ.பே. 077 899 6281
(30073) (45.6.3)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி,தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

போலிகள் நடமாடுவதால், பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியில் 'சித்தாரா டிஸ்பென்சரி' 'வைத்திய முத்திரைக் குறியீடு' என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் 'ஒறிஜினல்' என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.

*Manufactured By:*
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

## சேவை நயப்பு



செல்வி வேலன் சிவயோகராணி
(Sp.Trd (Tamil)

எமது பாடசாலையில் நிறைவான ஆசிரியப் பணி செய்து இன்று (01.08.2013) ஓய்வு பெறும் ஆசிரியை செல்வி வேலன் சிவயோகராணி அவர்கள் ஓய்வுக் காலத்தில் சுகபலத்துடன் வாழ இறையருள்வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

# அறுபதாம் அகவையில் பிறந்தநாள் வாழ்த்து

## யாழ்.கல்வி வலய கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் S.V.மகேந்திரன் அவர்களின்

# சேவை நலன் பாராட்டு



### சேவை விவரம்

| | |
|---|---|
| கிளி/ இராமநாதபுரம் ம.வி. ஆசிரியர் | 01.06.1978 - 17.01.1982 |
| யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரியர் | 18.01.1982 - 31.12.1983 |
| மட்/கதிரவெளி தமிழ் வித்தியாலயம் ஆசிரியர் | 01.01.1984 - 31.01.1985 |
| மட்/வந்தாறுமூலை ம.ம.வி ஆசிரியர் | 01.02.1985 - 30.06.1987 |
| யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் | 01.07.1987 - 08.06.2008 |
| வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம் (உதவிக்கல்விப் பணிப்பாளர்-கணிதம்) | 09.06.2008 - 31.07.2013 |

### ஆசியுரை



S.V.மகேந்திரன் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி யின் கணித ஆசிரியராக இருந்து பதவி உயர்வு பெற்று உப அதிபராகக் கடமையாற்றி கணிதபாட உதவிக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் அவர்கள் சகல சௌபாக்கியங்களுடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியினது கிருபாகடாட்சம் பெற்று வாழ நல்லாசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ க.சிவதாசக்குருக்கள்
கிருபாகர சிவசுப்பிரமணிய தேவஸ்தானம், கொக்குவில்.

### தன்னலமற்ற சேவையாளன்



யாழ். கல்வி வலயத்தில் கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமைபுரிந்து 31.07.2013ஆம் திகதியன்று ஓய்வுபெற்ற S.V.மகேந்திரன் அவர்கள் யாழ். கல்வி வலயத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் மாணவர்கள், ஆசிரியர்களின் கணிதபாட விருத்தியில் சுயநலம் பாராது தன்னலமற்ற சேவையைப்புரிந்துள்ளார். இவரது பதவிக் காலத்தில் வலய மட்டத்தில் கணிதபாட அடைவுமட்டம் உயர்வாகக் காணப்பட்டது.

இவர் க.பொ.த.(சா/த),க.பொ.த.(உ/த) மாணவர்களது கணித பாடப் பெறுபேற்றினை உயர்த்துவதற்குப் பல்வேறு விசேட செயற்றிட்டங்களைச் செயற்படுத்தியவராவார். அத்துடன் வலய அலுவலர்களுடன் சிநேக பூர்வ உறவை மேற் கொண்டு யாழ்.கல்வி வலய அபிவிருத்திக்கு பெரிய அர்ப் பணிப்பையும் செய்துள்ளார். மேலும் I.C.T பாட இணைப் பாளராகவும் கடமைபுரிந்து பல ஆசிரியர்களை அத்துறையில் நிபுணத்துவம் பெறச் செய்துள்ளார்.

இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இவரது ஓய்வுக்காலம் சிறக்க இறைவனை வேண்டுகின்றேன்.

S.உதயகுமார்
வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்

### என்றும் கருமத்திற் கண்ணாயிருந்தவர் - எஸ். வி.எம்.



அகவை அறுபது கண்டு கல்விப்பணியிலிருந்து ஓய்வுபெறும் எஸ்.வி. மகேந்திரன் அவர்களது தன்னலம் சாரா கல்விப்பணியினை மனமார வாழ்த்தி நிற்கிறேன். எல்லோராலும் எஸ்.வி.எம் என அன்பாக அழைக்கப்படும் மகேந்திரனை எனக்கு 1998 இலிருந்து நன்றாகத் தெரியும்.

கல்விப்புலத்தில் புகழ்பூத்த கணித ஆசிரியராகப் பணியேற்று, யாழ். கல்விவலயத்தில் கணித பாட உதவிக்கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றவர். அத்துடன் வலயத்தில் பணிபுரிந்த காலத்திலும் க.பொ.த. (சா.த), க.பொ.த. (உ.த) வகுப்புக்களுக்கான கணிதபாட செயற்பாடுகளை பாடசாலைகளின் மட்டத்தில் தரமான முறையில் செயற்படுத்தி வெற்றிகண்டவர். பரீட்சைக் காலத்தில் தனது கணித பாடம் குறித்த முழுப்பணிகளையும் பொறுப்புடன் ஏற்று சிறப்பாகச் செய்து முடித்தவர். அத்துடன், ஆசிரியர், மாணவர்களுக்கான கணித பாட செயலமர்வுகளில் தானே முழுமையாகச் செயற்பட்டு வினைத்திறனுள்ள வகையில் அவற்றினை நிறைவு செய்யும் வல்லமை மிக்கவராகத் திகழ்ந்துள்ளார். இவரிடமுள்ள இன்னொரு சிறப்பு கணினி அறிவிலும் விற்பன்னராக விளங்கியமை ஆகும்.

இத்தகைய ஆளுமைகளையும், குண நலன்களையும் கொண்ட எஸ்.வி.மகேந்திரன் அவர்கள் குடும்ப வாழ்விலும் தனது பிள்ளைகளுக்கு வழிகாட்டி அவர்கள் தம் கல்வியில் உயர்வடைந்து நன்நிலை பெற உதவியவர். இறுதியாக,

"செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவு இன்றி எச்சத்துக்கு ஏமாப்பு உடைத்து"

- என்ற வள்ளுவரின் வாக்கிற்கமைய,வாழ்ந்த எஸ்.வி.மகேந்திரன் அவர்கள். தனது ஓய்வுக்காலத்தில் சீருடன் வாழ்ந்து மேலும் நற்பேறுகள் பெற்று இன்புற்றிருக்க வாழ்த்துகின்றேன்.

த.இராசலிங்கம்
பிரதிக்கல்விப்பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)
மாகாணக்கல்வித்திணைக்களம், வடமாகாணம்.

### இளைப்பாறிய அதிபரின் வாழ்த்து



இன்றைய நாளின் மணிவிழா நாயகனாக விளங்கும் எஸ்.வி.மகேந்திரன் அவர்களை வாழ்த்துகின்ற வாய்ப்பு எனக்கு கிடைத்ததையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். நாம் எல்லோரும் எஸ்.வி.எம். என அன்பாக அழைப்பவருக்கு அறுவது வயதாகிவிட்டதா என ஆச்சரியப்படும் அளவுக்கு அவர் இளமைத்தோற்றத்துடன் இன்றும் விளங்குகின்றார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நீண்ட காலம் சிறந்த கணிதபாட ஆசிரியராக திகழ்ந்த இவர் என்னுடைய அதிபர் பதவிக் காலத்திலே பகுதித் தலைவர், பிரதி அதிபர் பதவிகளை அலங்கரித்ததுடன் கல்லூரிச் செயற்பாடுகளை நல்லமுறையில் முன்னெடுப்பதில் என்னுடன் இணைந்து அரும்பாடுபட்டவரும் கூட.

இவருடைய சிறந்த சேவை கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் மட்டும் நின்றுவிடாமல் யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கும் கிடைக்கத் தக்கவகையில் கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்று நல்ல முறையில் அப்பணியையும் ஆற்றினார் என்ற நற்பெயரையும் தனதாக்கிக் கொண்டார். நற்பணியாற்றிய இவரின் ஓய்வுகாலம் சிறக்கவும், பணிதொடரவும் இறைவன் நல்லருள் பாலிக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

பொ. கமலநாதன், இளைப்பாறிய அதிபர்.
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

### தலைசிறந்த கணித ஆசான்

ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக, உதவிக் கல்விப் பணிப்பாளராகத் தன் திறமையினால் பதவி உயர்வுகளைப் பெற்று நேர் வழி நின்று தன் பணியைச் செவ்வனவே துணிவுடன் ஆற்றிய S.V. மகேந்திரன் அவர்களுடன் யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியில் சக ஆசிரியனாகவும் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் சக உத்தியோகத்தனாகவும் பணியாற்றக்கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி பெரு மன மகிழ்வடைகின்றேன். கணிதத் துறையில் பல மாணவர்களை மிளிரச் செய்த குடாநாட்டின் தலைசிறந்த கணித ஆசானின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் மேலும் தன் கணிதத் துறையை வளர்க்கவும் வாழ்த்துகின்றேன்.

தி. கதிர்காமநாதன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்,(விஞ்ஞானம்),
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

### செயல்வீரன்

யாழ். கல்வி வலயத்தில் கணித பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள எஸ்.வி.மகேந்திரன் அவர்கள் சிறந்த உயர்தரம் கற்பிக்கும் கணித ஆசிரியராக் கடமையாற்றி பல பொறியியலாளர்களை உருவாக்கிய பெருமை அவரின் கடமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தனது பாடத்துறை வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டதன் விளைவாக எமது யாழ்ப்பாணக் கல்வி வலயம் உயர் பெறுபேற்றை பெற்றமை அவரின் பணிக்குக் கிடைத்த பரிசாகும். இவரின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பணிவோமா.

கு.சண்முககுமார்
கோட்டக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

"May your life brim over with happiness for ever following your retirement together with the happy memories of your dedicated contribution to teaching Mathematics"

Maths Teachers' Union - Zonal Education, Jaffna. 01.08.2013

### எஸ்.வி.எம் மே நீ பல்லாண்டு வாழி



கண்ணான கணிதத்தின் ஆசானாகி
கடலிலே தத்தளித்த பலரை மீட்டு
கரையேறச் செய்த மகேந்திரனே
கலங்கரை விளக்கே நீ வாழி வாழி

ஏழை மாணவர்க்கு இல்லத்தில் போதித்து
ஏற்றம் பெற வைத்த பெருந்தகையே
காவியத்து நாயகனே கணிதத்தின் காவலனே
காலத்தால் அழியாது உன் தன் சேவை.

மூவகை மாணவர்க்கும் ஆசானாகி
முத்தான கணிதத்தைப் புகட்டி வைத்து
வலயத்திற் கணிதத்தை வளர்த்தெடுத்த
வரலாற்று நாயகனே வாழி! வாழி!

வ.செல்வராசா
மாகாணக்கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்.

### வாழ்த்துச்செய்தி

அகவை அறுபது காணும் கணித ஆசானே-உங்கள்
திறமையால் பல பதவிகளை அலங்கரித்தீர்
இன்று ஓய்வு பெறுகின்றீர்ஆனால் உங்கள்
கணிதப் புலமை ஓய்வு பெறாது
எத்தனையோ மாணவர்களின் நல்வாழ்வின் வழி காட்டி நீங்கள்
உங்கள் வாழ்க்கையும் ஒளி மயமாகத் திகழ இறைவனை வேண்டும்

A.S.சற்குணராஜா SLEAS
கோட்டக் கல்விப் பணிப்பாளர், கோப்பாய் கல்விக்கோட்டம்

### பாரபட்சம் காட்டாத சேவையாளர்



S.V மகேந்திரன் அவர்கள் யாழ் கல்வி வலயத்தில் கடந்த ஐந்து வருடங்களாக கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமை புரிந்து கணித பாட அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கு பல செயற்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியவர்.அத்துடன் க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) வகுப்புகளில் மேலதிக விசேட செயற்றிட்டங்களை மாணவர்கள் நலன் கருதி திட்டமிட்டு வலய மட்டத்தில் கணித பாட பெறுபேற்றை உயர்த்துவதற்கு அரும்பாடுபட்டார். இதனால் எமது வலயம் தொடர்ந்தும் கணித பாட அடைவில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தில் இருந்து கொண்டிருக்கின்றது. அத்துடன் அவர் மேலதிகாரி என்று பாராமல் என்னுடன் சக அலுவலர் என்ற முறையில் சேவையாற்றினார்.இதனால் அவரது மனப்பாங்கு யாவராலும் போற்றப் படக் கூடியதாக இருந்தது. இவர் தனது கடமைக் காலத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் ,சகஅலுவலக உதவியாளர் களுடன் பாரபட்சம் காட்டாது இதய சுத்தியுடன் செயற்பட்டார். மேலும் கால நேரம் பாராது ஆசிரியர்,மாணவர்களிற்கு கணித பாட புலத்தில் தன்னாலான சேவையைச் செய்துள்ளார். இவரது ஓய்வுக் காலம் சிறப்புற இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

கு.விஜயகுமார்,
கணித பாட ஆசிரிய ஆலோசகர், யாழ்.கல்வி வலயம்.

### கணிதத்துக்கு உயிரூட்டியவர்


யாழ். வலய கணிதபாட உதவிக்கல்விப் பணிப்பாளாராக கடமையாற்றி தனது கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெறும் S.V. மகேந்திரன் அவர்கள் அதிசிறந்த சேவையாளர்.

இவர் தனது 36 வருடகால கல்விச் சேவையில் ஆசிரியராக, பிரதி அதிபராக, உதவிக் கல்விப்பணிப்பாளராக சிறந்த முறையில் சேவையாற்றியுள்ளார். சிறப்பாக குறிப்பிடும்போது இவர் உயர்தர இணைந்த கணிதத்திற்கு ஆற்றல்மிக்க ஆசிரியராக மட்டுமன்றி வளவாளராகவும் தொழிற்பட்டவர். மேலும் குறிப்பிடும்போது இவர் சிறந்த வளவாளருக்குரிய பண்புகளையும், ஆளுமையையும் கொண்டவர்.

இவர் வடமாகாணத்தின் கணிதபாடத்திற்கு வளவாளராக செயற்பட்டது மட்டுமன்றி தேசிய கல்வி நிறுவனத்திலும் வளவாளராகச் சேவை புரிந்தவர். இவ்வாறான சிறப்பான ஆற்றல்மிக்க கணிதவளவாளரின் சேவை இலங்கை பூராவும் தமிழ் மாணவர்களின் கணிதக் கல்விக்கு உயிர்ப்பூட்டியுள்ளது. அரசசேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும் இவரது சேவை எம் மாணவர்களுக்கு கிடைக்க இறைவன் அருள் புரிய வேண்டுகிறேன்.

திருமதி சுதர்சினி சிறிகாந்தன்
உதவிக்கல்விப்பணிப்பாளர் (கணிதம்),யாழ்.கல்வி வலயம்.

## தரம் 5 மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு



தென்மராட்சி, ஓக.1
தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்ற சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தால் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

மன்றத்தின் செயற்றிட்டங்களில் ஒன்றான 'கலங்கரைக் கல்வி' என்னும் செயற்றிட்டத்தின் கீழ் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலய மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் 70 இற்கும் 120 இற்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்ற 300 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதாக சம்மேளனப் பிரதிநிதி எஸ்.ரி.விமல் தெரிவித்தார்.

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சைகளில் 120 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு ஏனைய நிறுவனங்களால் வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# அச்செழு இராணுவ முகாம் பகுதி மக்களிடம் நாளை கையளிப்பு

## நிலை கொண்டிருந்த படையினர் வேறு இடத்துக்கு



அச்செழு, ஓக.1
அச்செழு இராணுவ முகாம் மூடப்பட்டு முகாம் அமைந்திருந்த பிரதேசம் வலி.கிழக்குப் பிரதேச சிவில் அதிகாரிகள் ஊடாக பொதுமக்களிடம் நாளை வெள்ளிக்கிழமை கையளிக்கப்படவுள்ளது.

அச்செழு இராணுவ முகாம் யாழ்.மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க முகாமாக விளங்கியதோடு வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் மிகப் பெரிய இராணுவ முகாமாகவும் சந்தேக நபர்களின் விசாரணை மையமாகவும் சிவில் நிர்வாக மத்திய இடமாகவும் விளங்கியது.

நீர்வேலி மாசிவன் சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாக புன்னாலைக்கட்டுவன் மூன்று சந்தியை சென்றடையும் வீதியில் வீதிக்கு தெற்காலும் வடக்காலும் 285 இற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் தூரநோக்கு காவல் அரண்களுடன் இந்த முகாம் அமைந்திருந்தது.

அச்செழு இராணுவ முகாம் மூடப்படும் என்ற தீர்மானத்தை அடுத்து முகாமின் பயன்பாட்டில் இருந்த இராணுவத் தளபாடங்கள், உபகரணங்கள் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக ஏற்றி இறக்கப்பட்டன. இவை வலி. வடக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள ஓர் இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன.

குறித்த முகாம் பிரதேசத்தில் 85 இற்கு மேற்பட்ட குடியிருப்பு வீடுகள் மற்றும் பெருமளவு பயிர்ச் செய்கை நிலங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்தப் பிரதேசம் கடந்த 18 வருடங்களின் (1995 இடப்பெயர்வுக்கு) பின்னர் தமது பாவனைக்கு கிடைப்பதையிட்டு பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

முகாம் மூடப்படுவதை முன்னிட்டு காவல் அரண்கள் மற்றும் மண் அணைக்கட்டுகள், தடைகள், எல்லை அகற்றப்பட்டு இருப்பதோடு இதுவரை காலமும் பொது மக்களின் பயன்பாட்டுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்த பாடசாலை வீதி, கோயில் வீதி, குள ஒழுங்கை என்பன தடைகள் அகற்றப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் முகாம் பகுதியில் காணப்படும் விறகுகளையும் மக்கள் சேகரிக்கின்றனர்.

இதேவேளை அச்செழு இராணுவ முகாம் பகுதியில் உள்ள வீடுகளில் உயர் அதிகாரிகளின் பாவனையில் இருந்த வீடுகளைத் தவிர ஏனைய வீடுகள் அனைத்தும் பயன்படுத்த முடியாத நிலையில் முற்றாக சேதமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

முகாம் பகுதியை கையளிக்கும் நிகழ்வு நாளை நடைபெறவிருப்பதாகவும் இது தொடர்பாக பாதுகாப்புத் தரப்பினரால் பிரதேச சிவில் நிர்வாகிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

## கடை உரிமையாளர் மூவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஓக.1
கொழும்புத்துறை பாண்டியன்தாழ்வு பகுதியில் பலசரக்குக் கடை உரிமையாளர்கள் மூவருக்கு காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.கொழும்புத்துறைப் பகுதி பொதுசுகாதாரப் பரிசோதகரால் இது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குறித்த வர்த்தகர்கள் தண்டப்பணம் செலுத்தியதாக அந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் த.நிஷாந்தன் தெரிவித்தார்.

காலாவதியான பொருள்களை விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை, சுட்டுத் துண்டுகளற்ற பொருள்களை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கடை உரிமையாளரில் ஒருவருக்கு ரூபா ஐயாயிரமும் மற்றொருவருக்கு ரூபா பத்தாயிரமும் மேலும் ஒருவருக்கு ரூபா பதினைந்தாயிரமும் குற்றப்பணமாக செலுத்துமாறு நீதிவான் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது. இதேவேளை ரூபா 15 ஆயிரம் தண்டப்பணம் விதிக்கப்பட்ட கடை உரிமையாளரை கடையைத் திருத்தி புனரமைத்த பின்னரே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு உத்தரவிடப்பட்ட தாக பொது சுகாதார பரிசோதகர் மேலும் தெரிவித்தார். (வ-7)




சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெற்றன. விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுகின்றனர். (வ-9)

## வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் புனரமைப்புக் காணும் 10 குளங்கள்


யாழ்ப்பாணம், ஓக. 1
வேலணைப் பிரதேச செயலகப் பிரிவில் இந்த ஆண்டில் கெயர் திட்டத்தின் கீழ் பத்துக் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளதாக வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தெரிவித்தார்.

வேலணையில் களவோடைக்குளம் 49 லட்சத்து 51 ஆயிரம் ரூபா செலவிலும், மண்கும்பானில் புலந்தோட்டகுளம் 27 லட்சத்து 17 ஆயிரம் ரூபா செலவிலும், கிரினிக்கரைக்குளம் 13 லட்சத்து 32 ஆயிரம் ரூபா செலவிலும் புங்குடுதீவில் புட்டுனிகுளம் 8 லட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவிலும் நுணுக்கன்குளம் 29 லட்சத்து 22 ஆயிரம் ரூபா செலவிலும் கொரவயல் குளம் 15 லட்சத்து 48 ஆயிரம் ரூபா செலவிலும், ராமன் குண்டு குளம் ரூபா 18 லட்சத்து 44 ஆயிரத்திலும், மண்டைதீவில் உப்புக்கழி குளம் 31 லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவிலும் நயினாதீவில் வண்ணான்குளம் 34 லட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவிலும் தில்லைவெளிக்குளம் 9 லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-7)



## யாழ்.மாநகர சபை எல்லை தவிர்ந்த பகுதிகளுக்கு 33,000 வோல்ற் மின்

### சுன்னாகம் மின் உற்பத்தி நிலையம் வழங்குகிறது



யாழ்ப்பாணம், ஓக.1
யாழ்.மாநகர சபை எல்லை தவிர்ந்த குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு 33 ஆயிரம் வோல்ற் மின்சாரம் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து வழங்கப்படுகின்றது என்று இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பிரதேச பிரதம மின் பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன் தெரிவித்தார்.

குடாநாடு முழுவதுமான மின்சாரம் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து வழங்கப்படுகின்றது.

இவற்றில் யாழ்.மாநகர சபை எல்லைக்கான மின்சாரத்தை 11 ஆயிரம் வோல்றிலும் ஏனைய பகுதிகளுக்கு 33 ஆயிரம் வோல்றிலும் வழங்கப்பட்டுள்ளது. இதனூடாகவே அந்தந்த மின்பாவனையாளருக்கான மின்சாரம் மின் பிறப்பாக்கிகளில் இருந்து வழங்கப்படுகின்றது.

மின்சாரத் தடைகள் ஏற்படுகின்ற பிரதேசங்களுக்கான மீள்இணைப்பு வேலைப்பாடுகளை மின்சார சபைகளை அறிவித்தலுக்கு ஏற்ப காலதாமதம் இன்றி மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவித்தார். (வ-14)

## வடக்குத் தேர்தலைத் தடுக்க அரசு பல முனையில் முயற்சி

### முதன்மை வேட்பாளர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக.1
வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு இலங்கை அரசுக்கு விருப்பமில்லை. இதனால் இந்தத் தேர்தலை ஜனநாயக ரீதியிலும் தடுக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடமாகாண முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசு வடமாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதையே விரும்புகின்றது. இங்கு ஆளுநரும், ஒரு சில அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளைச் சட்ட ரீதியாகக் கடமைகளைச் செய்ய விடாது தடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

அரசு தனக்கு ஏற்பட்டுள்ள நெருக்குதல் காரணமாகவே தேர்தலை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இதனைத் தடுப்பதற்கு அவர்கள் பல்வேறு முயற்சிகளை எடுக்கின்றனர். ஜனநாயக ரீதியில்கூட தடுக்க நடவடிக்கை மேற்கொள்கின்றனர் என்றார். (த-5)

# புணானையில் ராணுவ முகாம்

## அமைப்பதை நிறுத்துங்கள் என்கிறார் யோகேஸ் எம்.பி.



மட்டக்களப்பு,ஓக.1

மட்டக்களப்பு,புணானை பகுதியில்இராணுவமுகாம் அமைக்கப்படுவதை உடனடியாக நிறுத்தி, அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் மீள்குடியேற உதவ வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற மீள்குடியேற்ற அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிரான் பிரதேசத்தின் புணானை மேற்கு, வாகரைப் பிரதேசத்தின் புணானை கிழக்கு பகுதியில் 1990 ஆம் ஆண்டளவில் நடைபெற்ற கொடிய தாக்குதல் முயற்சியால் 35 பேர் கொல்லப்பட்டும், 13 பேர் படுகாயமும் அடைந்தனர்.

அன்று இடம்பெயர்ந்த மக்கள் இன்று வரை வாழைச்சேனை உட்பட்ட பகுதிகளில் உறவினர் வீடுகளில் வாழ்கின்றனர். அவர்களை அன்று இராணுவமே தாக்கியது. அதன் அடிப்படையிலேயே வழக்கும் நடைபெற்றது.

அதனையடுத்து அந்த இடத்தில் இருந்து வெளியேறிய இராணுவம் தற்போது அங்கு மீண்டும் முகாம் அமைக்கின்றது. அதனால் இந்தப் பகுதி மக்கள் மீள் குடியமர பயப்படுகின்றனர். எனவே இராணுவ முகாமை அங்கிருந்து அகற்றி இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் தங்கள் இடங்களில் குடியமர்வதற்கு ஏற்ற அடிப்படை வசதிகளை வழங்க வேண்டும். இந்த மக்களின் பாதுகாப்புக்கு பொலிஸ் பிரிவை அமைக்க வேண்டும்.

கிரான் பிரதேசத்திலுள்ள வடமுனை, ஊத்துச்சேனை மக்கள் மீள்குடியேறியும், வீடு வசதி இன்றி காணப்படுகின்றனர். அவர்களுக்கு வீடு உட்பட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.- என்றார்.

இந்த விடயங்களைக் கேட்டறிந்த மீள்குடியேற்ற அமைச்சர், உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு மீள்குடியேற்றப்படாத மக்களை மீள்குடியேற்றவும், மீள்குடியேறிய மக்களுக்கு வீடு உட்பட்ட அடிப்படை வசதியை ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை பணித்துள்ளார். (ச)

## மோட்டார்சைக்கிள் விபத்தில் பொலிஸ் அதிகாரி சாவு



மட்டக்களப்பு,ஓக.1

மட்டக்களப்பு, பிள்ளையாரடியில் இடம்பெற்ற விபத்து சம்பவத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து ஏறாவூரில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேகத்தினை கட்டுப்படுத்த இயலாமல் பிள்ளையாரடிப் பகுதியில் உள்ள மின்கம்பத்தில் மோதியதன் காரணமாகவே இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்லடி பொலிஸ் பயிற்சி நிலையத்தில் கடமையாற்றும் அமீர் என்பவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## புனரமைக்காத பாலத்தால் பெரும் சிரமம்

அம்பாறை,ஓக.1

அம்பாறை, காரைதீவு பிரதான வீதியிலுள்ள மாவடிப் பள்ளி பாலம் நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நாம் அதிகமாகப் பயன்படுத்தும் அம்பாறை, காரைதீவு பிரதான பாதையிலுள்ள பாலம் குறுகியதாக உள்ளது என்று மக்கள் சுட்டிக் காட்டினர்.

வெள்ள இடர் ஏற்படும் காலங்களில் போக்குவரத்துச் செய்ய முடியாமல் உள்ளது. இதனால் மக்கள் தொழில், இதர தேவைகளுக்காக வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

காலத்துக்கு காலம் அரசியல் வாதிகளால் குறித்த இடம் பார்வையிடப்படுவதும் அறிக்கைகள் விடப்படுவதும் வழக்கமாகி விட்டதே அன்றி தீர்க்கமான எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை என்று மக்கள் கூறினர். (ச-10)

## வறிய குடும்பங்களுக்கு உலர் உணவு

நாவிதன்வெளி,ஓக.1

நாவிதன்வெளி பிரதேச ஜம்-இய்யத்துல் பாப் நிறுவனத்தின் அனுசரணையுடன் சவளக்கடை பகுதியிலுள்ள 210 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு உலர் உணவு வழங்கும் நிகழ்வு சவளக்கடை மஸ்ஜிதுல் பிலால் ஜும்ஆபள்ளி வாசல் தலைவர் எம்.எச். எம்.ஆபூபக்கர் தலைமையில் நடைபெற்றது. (ச-10)

யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளரும் கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபரும், எங்கள் கணித ஆசிரியருமாகிய

S.V.மகேந்திரன் ஆசிரியரின்

மணிவிழா வாழ்த்து

காற்றில் வருகிறது நேற்றைய வாசம்
குழிகளும் பொறிகளும்
நிறைந்திருந்த பாதையில்
எம்மைப் பலி கொடுத்து விடாது - இன்று எம்மை
பல நூறு விழிகள் அதிசயிக்கும் படியாய் மாற்றிய
ஒரு பெரும் விருட்சத்தில்
வாசம் சேர்த்து வருகிறது காற்று .
கணிதப்பிரிவை கையில் எடுத்து
கனவுகள் பல சுமந்து வந்தோம்
கணிதமே கனவாய் தெரிந்தது ஒன்றும் புரியாது
சிக்கலெண் போல் சிக்கித்தவித்தோம்.
நீங்கள் வந்தீர்கள் கணித ஆசானாய்
எங்கள் தரத்தினைத் தொகையிட்டு அதற்கு
ஏற்ப கணக்குகளை வகையிட்டு
பகுதிப்பின்னங்கள் போல் அதை எளிமையாக்கி
அழகாகப் புரிய வைத்தீர்கள்.
கணிதத்தில் இருபடிச்சமன்பாடாய் இருந்த எங்களை
மேலும் பல படிகள் முன்னேறச் செய்தீர்கள்.

அன்பின் சேர்மானமாய் உங்களை நாம் கண்டோம்
எல்லோரும் அன்பே சிவம் என்பார்கள்
எங்களுக்கோ அன்பே SVM சேர்தான்..
உங்களால் தான் கணிதத்தின் ஈர்ப்பு வந்தது
புவியீர்ப்பு மையம் கூட இலேசானது
எங்கள் பிழைகளை வரைவுபடுத்தி உணர வைத்தீர்கள்
பரீட்சை காலங்களில் உங்கள் கற்பித்தல்
தொடராய் அமைந்தாலும் - அதை வரிசைமாற்றம் செய்து
எங்களுக்கு பிடித்தது போல் படிப்பிப்பீர்கள்
கணித தொகுத்தறிவு முறையால் நிறுவிப் பாருங்கள்
உங்களையும் எங்களையும் பிரித்துப் பார்க்க முடியாது.

உலகெங்கும் மீளும் தசமங்களாய் உங்கள் பிள்ளைகள்
மீளாத உங்கள் ஞாபகங்களோடு நாங்கள் - வற்றாப் பெரும்
கடலுக்கு கொட்டிக் கொடுக்கும் பல கோடி இல்லாவிடினும்
உள்ளம் தொட்டு உவகையோடு வாழ்த்துகிறோம்





சேவை விவரம்
திரு.S.V. மகேந்திரன் B.Sc P.G.D.E
உதவிக்கல்விப்பணிப்பாளர் (கணிதம்) யாழ்.வலயம்
முன்னாள் பிரதி அதிபர், முன்னாள் பகுதித் தலைவர், முன்னாள் ஆசிரியர் - யா/கொக்குவில் இந்துக்கல்லூரி
ஆரம்பக்கல்வி:
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை.
யா/ வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.
இடைநிலைக்கல்வி:
யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி.
சேவை விவரம்:
01/06/1978 – 17/01/1982
கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
18/01/1982 – 31/12/1983
பலாலி ஆசிரியர் கலாசாலை
01/01/1984 – 31/01/1985
மட்டு/ கதிரவெளி தமிழ் வித்தியாலயம்
01/02/1985 – 30/06/1987
மட்டு/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம்
01/07/1987 – 03/06/2008
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி
04/06/2008 - 31/07/2013

Best Best Best
wishes wishes wishes

வாழ்த்துவோர்: பழைய மாணவர்கள்.
A/L 2008 – 13 H (கணித பிரிவு) கொக்குவில் இந்துக்கல்லூரி.

பணிநயந்து வாழ்த்துகிறேன்



அகவை அறுபதில் கால்பதிக்கும் யாழ்ப்பாண கல்வி வலயத்தின் கணித பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் திருவாளர் எஸ்.வி.மகேந்திரன் அவர்களது பணிநயப்பு மலருக்கு இக்குறிப்பினை எழுதுவதில் அகமகிழ்வடைகின்றேன்.

''பெருமை உடையவர் ஆற்றுவார் அற்றின் அருமை உடைய செயல்''- என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்குக்கமைய வாழ்ந்து காட்டியவர் எனது அன்புக்குரிய எஸ்.வி.எம் அவர்கள் அவருடன் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் அபிவிருத்திப்பிரிவில் ஒன்றாகப் பணிபுரிந்த வேளை அவரது ஆற்றல், அறிவுடமை, குணநலன்களை நான் அவதானித்தேன். என்றும் மற்றவர்களை மதித்து எல்லோரது மனதிலும் அவர் இடம் பிடித்துக் கொண்டவர். தனது கல்விப்பணியில் மாணவர் நலன்களையே முதன்மைப்படுத்தி மாணவர் அடைவு மட்டத்தினை உயர்த்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டவர். எங்களால் எஸ்.வி.எம் என அன்பாக அழைக்கப் படும் இவர் கணிதபாட கற்பித்தலில் கற்பித்தல் நுட்பங்களைக் கையாள ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக விளங்கியவர். வலயத்தில் பணிபுரிந்த காலத்தில் பரீட்சைக் கடமைகளிலும் சரி செயலமர்வுகளை நடத்துவதிலும் சரி மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி தனது ஆளுமையினை வெளிக்காட்டியவர். தனது பணியில் நேர்மையாகவும், நல்நோக்கத் துடன் செயற்பட்டதனால் சக பாடிகளைக் கவர்ந்தவர்.அத்துடன் அவரிடம் நான் கண்ட சிறப்பு, பிறர் துன்பம் கண்டு உதவ முன்வரும் பண்பாகும். அதேவேளை நேர்மையீனமான செயல்களை வெறுத்து ஒதுக்குபவர்.

''குணநலம் சான்றோர் நலனே பிற நலம் எந் நலத்துள்ளதூ உம் அன்று''

என்பதற்கமைய இலட்சியப் படிப்புடன் வாழ்ந்து வரும் எஸ்.வி.மகேந்திரன் அவர்கள் நீண்ட ஆயுள் பெற்று, சகல சௌபாக்கியங்களுடன் தனது குடும்ப வாழ்வைத் தொடர வாழ்த்தி நிற்கின்றேன்.

த.இராசலிங்கம், பிரதிக்கல்விப்பணிப்பாளர்(ஆரம்பக்கல்வி)
மாகாணக்கல்வித்திணைக்களம், வடமாகாணம்.

ஆளுமை மிக்க சிறந்த சேவையாளன்



இன்று தனது அறுபதாவது வயதினைப் பூர்த்தி செய்து மணிவிழாக் காணும் எஸ்.வி மகேந்திரன் அவர்களை வாழ்த்தும் வாய்ப்பு கிடைத்தமையிட்டு பெருமையடை கின்றேன். மாணவ சமுதாயத்திற்கு இவர் செய்த நல்ல சேவையின் பயனாக பழைய மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் நன்மதிப்புப் பெற்று விளங்குகின்றார். இதற்கு எடுத்துக் காட்டாகவே இந்த வாழ்த்துச் செய்தி வெளியீடு அமைகின்றதெனக் கூறலாம்.நான் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபர் பணியாற்றிய வேளை கல்லூரி வளர்ச்சிக்காக என்னுடன் இணைந்து ஆற்றிய சேவை என்றும் மறக்க முடியாத ஒன்றாகும். சிறந்த ஆளுமையும், திறமையும் கொண்ட எஸ்.வி.எம் அவர்களின் சேவை ஓய்வுக் காலத்திலும் மாணவ சமுதாயத்திற்கு கிடைக்க வேண்டி இறைவனைப் பிரார்த்தித்து வாழத்துகின்றேன்.

பொ.கமலநாதன், இளைப்பாறிய அதிபர்.

கணித மாமேதைக்கு மணிவிழா



கொக்குவில் இந்துவின் மிகச்சிறந்த கணித ஆசான் "S.V.M.Sir" என்றால் மிகையாகாது,தனது கணிதப் புலமையாலும் ஆளுமையாலும் மாணவர்கள் அனைவரையும் கவர்ந்தவர். குறிப்பாக மீத்திறன் மாணவர்களின் மிக விருப்பத்துக்குரிய ஆசானாக திகழ்ந்தார். 25 வருட ஆசிரிய சேவையில் கொக்குவில் இந்துவிலிருந்து பல பொறியிலாளர்களையும் கணித விற்பன்னர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியவர்.

நானும் "S.V.M.Sir" அவர்களும் 25 வருடங்களுக்கு மேல் கொக்குவில் இந்துவில் கணித ஆசிரியராக இருந்தபோது அவரது கணித அறிவைக்கண்டு வியந்துள்ளேன். நாங்கள் இருவரும் உயர்தர வகுப்பின் பிரயோக கணிதம், இணைந்தகணித பரீட்சகராக கடமையாற்றிய வேளை அவரது கணிதப்புலமையால் விடைத்தாள்களை மிகவும் சரியாகவும் வேகமாகவும் திருத்துவதுகண்டு பிரமிப்படைந்துள்ளேன். கொக்குவில் இந்துவில் ஆசிரியராக, பகுதித்தலைவராக பிரதி அதிபராக, பதில் அதிபராக மிகச் சிறப்பாக விசுவாசமாகவும் நேர்மையாகவும் உழைத்தவர். என் நண்பனின் நல்ல குணங்களையும், நேர்மையையும், கற்பித்தலில் கொண்ட ஆர்வத்தைக்கண்டு வியந்துள்ளேன்.

அவரது ஓய்வுகாலம் மகிழ்வுடன் அமைய இறைவனை வேண்டுகின்றேன். ஓய்வுகாலத்தில் அவரது புலமை கணித புத்தககங்களாக வெளிவர வேண்டுகின்றேன்.

க. வேலாயுதம், ஓய்வு நிலை பிரதி அதிபர்,கொக்குவில் இந்துக் கல்லூரி.

## கார்–லொறி மோதியதில் கடற்படை அதிகாரிகள் சாவு



கொழும்பு,ஓக.1
புத்தளம், கருவலகஸ்வெவ பிரதேசத்தில் புதன்கிழமை அதிகாலை 2.30 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் கடற்படை உயர் அதிகாரிகள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து பூநகரியிலிருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த கடற்படையினரின் காரும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறியும் மோதியே இடம்பெற்றுள்ளது என்று கருவலகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் கொமாண்டர் ஜானக்க பிரியந்த, லெப்டினட் கொமாண்டர் சரித் கலுதந்திரி ஆகிய கடற்படை உயர் அதிகாரிகளே உயிரிழந்துள்ளனர். (ச)

## அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த கார் தீப்பற்றியது

கொழும்பு,ஓக.1
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த காரொன்று செவ்வாய்க்கிழமை தீடிப்பிடித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாவ நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்தக் கார் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் 54.2ஆவது மைல் கல்லடியிலேயே தீடிப்பிடித்துள்ளது.

அதிவேக நெடுஞ்சாலையின் பாதையை விட்டு விலகிய இந்த கார் பாதுகாப்பு வேலியில் மோதியமையாலேயே தீப்பற்றியுள்ளது என்று பொலிஸார் கூறினர்.



இந்தக் கார் முற்றுமுழுதாக எரிந்து சேதமடைந்துள்ளது. சாரதி எல்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

## 5000 முதலீட்டாளர்கள் இலங்கை வர ஏற்பாடு

கொழும்பு,ஓக.1
பொதுநலவாய உச்சி மாநாடு தொடர்பாக 5000 வெளிநாட்டு வர்த்தகர்களும், முதலீட்டாளர்களும் இலங்கைக்கு வரவுள்ளனர்.

அதில் உலகின் முன்னணி முதலீட்டாளர்களும், நிறுவனப் பிரதிநிதிகளும் உள்ளடங்குவர்.

இவர்களின் வருகை பொருளாதார மேம்பாட்டுக்கு உந்து சக்தியாகும் என்று விவசாய அமைச்சின் தேசிய விவசாய ஆலோச கர் சரத் டி சில்வா தெரி வித்தார்.

அவர்களின் வருகையால் பல துறைகளின் ஊடாக இலங்கைக்கு நன்மைகள் கிடைக்கும்; அத்துடன் உல்லாசப் பிரயாணத் துறையும் வளர்ச்சி காணும்; எமது உற்பத்திப் பொருள்களை வெளிநாட்டுச் சந்தையில் பிரபல்யப்படுத்த வாய்ப்பு உருவாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தேர்தல் மோசடியை தடுக்க முன்வரவும்

### ஓய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி வேண்டுகோள்



கொழும்பு,ஓக.1
நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் தேர்தல் வன்முறை, ஒழுங்கீனங்கள், அரசதரப்பு வேட்பாளர்கள் அரச சொத்துக்களை பிரசாரத்துக்கு பயன்படுத்தல் போன்றவற்றை தடுப்பதற்கு வாக்காளர்கள், சிவில் சமூகம், அரசியல் கட்சிகள் ஆகியன முன்வரவேண்டும்.

இவ்வாறு ஓய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி பி.பி. வராவெவ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவை வராவெவ செவ்வாய்க்கிழமை சந்தித்த தன் பின்னர் தேர்தல்கள் செயலகத்துக்கு வெளியே குழுமியிருந்த ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாக்காளர்கள் தமது உரிமைகளை பயன்படுத்தாதுவிட்டால் ஒரு சுதந்திரமான,நியாயமான தேர்தலை நடத்தமுடியாது.

தேர்தல் சட்டங்களை பொலிஸ் மீறினால் தேர்தல்கள் ஆணையாளராலும் எதுவும் செய்ய முடியாது.

வாக்களிப்பு நிலையங்களுக்குள்ளும் வாக்கு எண்ணும் நிலையங்களுக்குள்ளும் அமைச்சர்கள் செல்வதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.–என்றார்.(ச)

## கூரையிலிருந்து இறங்கினார் ஆசிரியை




கொழும்பு,ஓக.1
கொழும்பு, றோயல் கல்லூரியின் இரண்டாவது மாடியில் கூரையின் மீதேறியிருந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியை செவ்வாய்க் கிழமை இரவு கீழே இறக் கப்பட்டார்.

ஆசிரியையிடம்பொலிஸார் மேற் கொள்ளப்பட்ட பேச்சை அடுத்தே அவர் கீழே இறங்க இணக்கம் தெரிவித்தார்.

பொலிஸார் ஆசிரியையிடம் வாக்குமூலத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

தனக்கு வழங்கப்பட்ட இட மாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாடசாலை கூரை மீது ஏறி ஆசிரியை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



யாழ்.கோட்டை அருள்மிகு முனீஸ்வரன்
தேர் உற்சவம் - 01.08.2013
இன்று (01.08.2013) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு
1008 சங்காபிஷேகமும் பகல் அன்னதான நிகழ்வும், மாலை 4.30 மணிக்கு
வசந்த மண்டப பூசையும் தொடர்ந்து இரத பவனியும் இடம்பெறும்.
நாளை (02.08.2013)வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு
தீர்த்த உற்சவம் நடைபெறும்.
ம.லோகராஜன் குடும்பத்தினர்,
கல்வியங்காடு.
கிருபா லேணர்ஸ்,
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டை இருண்ட காலத்துக்கு இழுத்துச் செல்லும் போக்கு வேண்டாமே

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறும் பட்சத்தில், அதன் முதல் அமைச்சர் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுடன் ஒத்துழைப்பதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது.

ஆனால் அரசமைப்பின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை எந்தக் காரணங்களைக் கொண்டும், எந்த சூழ்நிலையிலும் யாரும் பிடுங்கி எடுக்க முடியாது. அரசமைப்பு சட்டத்தில் அது குறித்து தெட்டத்தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு மிகுந்த ஆணித்தரமாகவும் தெட்டத்தெளிவாகவும் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நேற்று முன்தினம் அலரிமாளிகையில் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் நிர்வாகிகளை சந்தித்துப் பேசிய வேளையிலேயே, ஜனாதிபதி இதனை வெளிப்படுத்தி உள்ளார்.

மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் எப்போதும் என்னிடமே இருக்கும். அதனை விட்டுக் கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஜனாதிபதி அறுதி உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றினாலும் அது நடக்கவே நடக்காது. எனது வரலாற்றில் அதற்கு இடமிருக்காது– என்றும் ஜனாதிபதி மிக இறுக்கமாகக் கூறியிருக்கிறார்.

ஊடகத் துறையினரிடம் ஜனாதிபதி வெளியிட்ட மேற்சொன்ன கருத்துக்கள், அவர் தமது வெளிநாட்டு விஜயங்களின்போது தெரிவிக்கும் அபிப்பிராயங்களுக்கு, கருத்துக்களுக்கு வேறுபட்டனவாகவே உள்ளன எனலாம்.

அனைத்துலக நாடுகளுக்குத் தாம் விஜயம் செய்யும் போதெல்லாம், நல்லிணக்கச் செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் தாம் ஈடுபட்டு வருவதாகவும், உரிய பெறுபேற்றை அல்லது பலனைப் பெறுவதற்கு கால அவகாசம் தேவை என்றும் ஜனாதிபதி கூறுவது வழக்கமாகிவிட்டது.

ஆனால், இன சௌன்யத்தை ஏற்படுத்தவல்ல விடயங்களில் அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றை, தன்வசம் உள்ள அதிகாரங்களை எக்காரணம் கொண்டும் கைவிடப் போவதில்லை என்ற நிலைப்பாட்டை மேற்கொள்வது ஆட்சியியலுக்கு ஏற்புடையதல்ல. அது நாட்டில் இன நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு எள்ளளவும் உதவப்போவதில்லை.

மாறாக, சிறுபான்மை இன மக்களுக்குச் சேர வேண்டிய உரிமைகளை வழங்கக் கூடாது என்ற போக்குடையவர்களுக்கு மேலும் உஷார் ஏற்றுவதாகவும், அவர்களைத் தூண்டுவதாகவும் இது அமையலாம்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு நேற்றைய ஊடகங்களில் பிரதான இடத்தைப் பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த அறிவிப்பு இந்தியாவுக்கு ஏமாற்றம் அளிக்கலாம். அதே வேளை, '13'க்கு எதிரான சிங்கள–பௌத்த தீவிரவாத அமைப்புகளுக்கு உற்சாகம் அளிப்பதாக அமைந்துள்ளது.

மாகாண சபைகளுக்கு பொலிஸ்,காணி அதிகாரங்களை வழங்கினால் பிரிவினைவாத, இனவாத நோக்கங்களுக்கு இந்த குறிப்பிட்ட அதிகாரங்கள் பயன்படுத்தப்படலாம் என்றும் இந்த அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

மேலும் ஜனாதிபதியிடமும், அரசாங்கத்திடமும் அளவுக்கு அதிகமான அதிகாரங்கள் செறிந்து கிடப்பதால், சட்ட திட்டங்கள் பலவீனமுறுவதும், மக்களின் அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகள் நலிந்து மெலிந்து போவதும், அவை தடுக்கப்பட அல்லது சிறிதளவேனும் குறைக்கப்பட முடியாத நிலையே மேலோங்கி வருகிறது.

வடமாகாண சபைத் தேர்தல் நடைபெற உள்ளதாக தகவல்கள் வெளிவந்த கையோடு, பொலிஸ், காணி அதிகாரங்களை வெட்டிவிட அரசு நினைப்பது அதன் இனவாதச் சிந்தனையை வெளிக்காட்டுகிறது. சிங்கள மக்களை நம்பலாம், தமிழ் மக்களை நம்பக்கூடாது. இதுதான் அரசின் கொள்கையா? இத்தகைய நடவடிக்கைகள் ஊடாக, இருண்ட ஓர் எதிர்காலத்தை நோக்கி அரசு நாட்டை இழுத்துச் செல்கிறது என்பது மிகத் துலாம்பரமாகத் தெரிகிறது.

தமிழ் மக்கள் தங்களுக்குரிய அதிகாரங்களை, தமது தலைமைத்துவங்கள் ஊடாக அனுபவிக்க அல்லது உரிமை கொண்டாட விழைவது ஜனநாயக விழுமியங்கள் மற்றும் செயன்முறைகளுக்கு அப்பாற்பட்ட அல்லது அந்நியத்துவமான ஒன்றல்ல.

எனவே வடக்கில், அந்தப் பிராந்தியத்தில் ஆட்சியியலும் தலைமைத்துவமும் மேலுயர்வது நாட்டுக்குப் பாதகமானது என்று கிலேசம் அடைவது, முற்றிலும் தப்பான போக்காகும். இதனைத் தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவங்கள் பேதமை வெறியின்றி உணர்வது எப்போதோ.....?

# வாக்குறுதிகளை ஒருபோதும் நிறைவேற்றாத இலங்கை அரசு

இலங்கை அரசு, ஏற்கனவே தான் வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து பின்வாங்குவது தொடர்பில் 'இலவச மதிய உணவைப் போல வேறெதுவுமில்லை' என்கின்ற பிரபலமான பழமொழியை நினைவில் கொள்ள வேண்டும். இலங்கையில் மிக அண்மையில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 13வது திருத்தச் சட்டத்தில் மாற்றம் மேற்கொள்வது தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு உருவாக்கப்பட்டு அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில், கடந்த முப்பதாண்டுகாலப் போரின் போது காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்யுமாறு இலங்கை ஜனாதிபதி கட்டளையிட்டுள்ளார்.

> எந்தவொரு அரசும் சகல வேளையிலும் சகல மக்களையும் முட்டாளாக்குவதில் வெற்றிபெற முடியாது என்பதை கடந்த கால வரலாறு சுட்டிக்காட்டுகிறது. போர் வெற்றி மமதையில் இலங்கையின் தற்போதைய அரசு அதிகாரம் மிக்க ஆட்சியை நடத்துகின்றது.

இலங்யையில் போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில், தற்போதும் பல ஆயிரக்கணக்கான குறிப்பாக, பெரிய அளவில் தமிழ் மக்கள் காணாமற் போயுள்ளனர். ஆனால் இவ்வாறு காணாமற் போனோர் தொடர்பில் ஆராய்வதற்காக அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என அழுத்தங் கொடுக்கப்பட்ட வேளையிலும் கூட, இலங்கை ஜனாதிபதி மிகத் தீவிரமாக தனது நாட்டுப்பற்றுத் தொடர்பாக பரப்புரை செய்வதன் மூலம் இவ்வாறான அழுத்தங்களுக்குப் பணியாது காலந்தாழ்த்தி வருகிறார்.

ஆனால் இலங்கையின் தலைநகர் கொழும்பில் இவ்வாண்டு இறுதியில் பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் ஒன்று கூடும் உச்சி மாநாடு நடைபெறுவதற்கு முன்னர் இலங்கை ஜனாதிபதி, தனது அரசு மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிலளிப்பதற்கு சுயாதீன விசாரணை ஒன்றை மேற்கொள்வதாக அனைத்துலக சமூகத்திடம் வாக்குறுதி வழங்கியிருந்தார். அதேவேளையில் இலங்கை ஜனாதிபதி அனைத்துலக சமூகத்தினால் தீர்மானிக்கப்பட்ட இரு தீர்மானங்களையும் நிறைவேற்றாது காலத்தை இழுத்தடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது தெளிவாகத் தெரிகிறது.

இலங்கையில் தொடரப்பட்ட போரின் போது காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது என இலங்கை ஜனாதிபதி இறுதி நேரத்தில் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். ஆனால் இந்த விசாரணை எவ்வளவு தூரம் நம்பகமானதாக இருக்கும் என்பதில் கேள்வி எழுப்பப்படுகிறது. அத்துடன் இந்த ஆணைக்குழுவால் எடுக்கப்படும் இறுதித் தீர்மானமானது இலங்கை மீது அனைத்துலக மனிதாபிமான அமைப்புக்களால் சுமத்தப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு போதியளவில் பொறுப்பளிக்குமா என்கின்ற சந்தேகமும் நிலவுகிறது. காலத்திற்கேற்ப இலங்கையில் நியமிக்கப்படும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் வல்லுநர்கள் அடங்கிய ஆணைக்குழுக்கள் போன்றவை தம்மால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் தொடர்பாக ஒரு தெளிவான பதிவுகள் எதனையும் முன்வைப்பதில்லை.

இலங்கையில் வாழும் சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்கிடையில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிட்டு தனது பரிந்துரைகளை முன்வைத்த, இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை செய்து பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தகவல் அளிக்குமாறு அரசால் நியமிக்கப்பட்ட சிறப்பு ஆணையாளரிடம் பரிந்துரைத்திருந்தது.

ஆனால் இலங்கை அரசு தன் மீதான மனித உரிமைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் காண்பிக்கவில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையை வெளியிட்ட போது, நல்லெண்ணச் சமிக்கையாக, இலங்கை அரசால் காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை செய்வதற்கான சிறப்பு ஆணைக்குழு நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தால், இலங்கை மீது ஜெனீவாவில் ஒரு தடவையல்ல இரு தடவைகள் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களை முறியடித்துஇலங்கையின் நற்பெயரைக் காப்பாற்றியிருக்க முடியும்.

அனைத்துலக சமூகத்தின் பல்வேறு அமைப்புக்கள் மற்றும் நவம்பரில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டிற்கு முன்னோடியாக இலங்கைக்கு அண்மையில் வருகை தந்த பிரித்தானிய அனைத்துக் கட்சி நாடாளுமன்றப் பிரதிநிதிகள் குழு போன்றவை இலங்கை அரசின் காணாமற்போனோர் தொடர்பில் ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான தீர்மானத்தில் பெருமளவில் செல்வாக்குச் செலுத்தியுள்ளமை தற்போது தெளிவாகிறது.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கான ஆணைக்குழுவானது எவ்வளவு தூரம் தீவிரமாக செயற்படவுள்ளது என்பதும், தொடர்பாகவும் தனது இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வதற்கு எவ்வாறான திட்டங்களைக் கொண்டுள்ளது என்பதும் கேள்வியை எழுப்பியுள்ளது. அனைத்துலக சமூகத்தைத் திருப்திப்படுத்துவதை நோக்காகக் கொண்டு காலத்துக்கு ஏற்றவாறு இலங்கை அரசால் முன்னெடுக்கப்படும் பிறிதொரு முயற்சியாகவே இது நோக்கப்படுகிறது. இலங்கையில் மேற்கொள்ளப்படும் மீளிணக்கப்பாடானது, உண்மையில் பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வித நலனையும் அடைவதற்கு வழிகோலாது.

எந்தவொரு அரசும் சகல வேளையிலும், சகல மக்களையும் முட்டாளாக்குவதில் வெற்றிபெற முடியாது என்பதை கடந்த கால வரலாறு சுட்டிக்காட்டுகிறது. போர் வெற்றி மமதையில் இலங்கையின் தற்போதைய அரசு அதிகாரம் மிக்க ஆட்சியை நடத்துகின்றது. ஆனால் நாட்டில் போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் கூட, இலங்கை போர் வெற்றிவிழாக்களைக் கொண்டாடுவதானது, போரால் ஏற்பட்ட வடுக்களை ஆற்றுவதற்குப் பதிலாக போர்க் காயங்களை மேலும் ஆழப்படுத்துகின்ற, வேதனைப்படுத்துகின்ற ஒன்றாகவே நோக்கப்படுகிறது. இலங்கை அரசு நாட்டில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ள போதிலும் கூட, வெறும் வாக்குறுதிகளை மட்டும் வழங்குகின்றதே தவிர அவற்றை நிறைவேற்றுவதில் ஆர்வங் காட்டவில்லை.

இதனால் அனைத்துலக சமூகத்தின் அழுத்தத்தின் பேரிலோ அல்லது தன்னிச்சையாகவோ இலங்கை அரசு காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவை அமைப்பதாக வழங்கியுள்ள வாக்குறுதியானது செயற்படுத்தப்பட்டு, இந்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் வெளிப்படையாகவும், நேர்மையாகவும், நம்பகமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டியது மிக முக்கிய தேவையாகும். ★

(நன்றி: புதினப்பலகை)

# திக்கு முக்காடும் யாழ்ப்பாணத்து வர்த்தகம்

சோபனா

நலிவடைந்திருந்த நான் இப்போது புதுப்பொவிவு பெற்று வருகிறேனல்லவா? என்று கேட்கும் அளவுக்கு யாழ்.நகரின் மாற்றங்கள் நாளாந்தம் மெருகூட்டப்பட்டு வருகின்றன. புதிய புதிய கட்டடங்கள், மாற்றிய மைக்கப்பட்ட காப்பெற் வீதிகள், விளம்பரப் பலகைகள் என யாழ். நகர் 'கலர்புல்'லாகத் தான் இருக்கின்றது. இதற்கேற்ப நகருக்குள் நுழையும் மக்களும் பரபரப்பாக தமது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு வந்த வழியே வீடு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.



யாழ்ப்பாணத்தின் புதிய உருமாற்றங்களை உள்ளூரிலிருந்து கொண்டே நாளாந்தம் அவதானிக்கும் எமக்கே பெரும் வியப்பாகத்தான் இருக்கிறது. உடைந்து பாழ் அடைந்து போயிருந்த கட்டடங்கள் புதுப்பொலிவுடனும், சந்துகளாக இருந்த வெற்றுக் காணிகள் மாடிக் கட்டடங்களாக கண்ணாடிகள் பொருத்தப்பட்டு கண்ணுக்குக் குளிர்ச்சியாக 'மல்ரிலாக்' பெயின்றகளின் வர்ணங்களால் புது மணப் பெண் போல் மாறியுள்ளன.

இந்தப் புதிய கட்டடங்களை யார் அமைப்பித்தார்கள்? என்ன நோக்கத்துக்கு அமைப்பித்தார்கள்? என்பது குறித்து தூண்டித்துருவி ஆராய்ந்தால் எல்லாமே வியாபார நோக்குடன் தான் மேற்கொள்ளப்படுகின்றமை தெரியவரும். மெருகூட்டப்பட்ட இந்தப் புதிய கட்டடங்களில் அமையவுள்ள விற்பனை நிலையங்களால் காலாதிகாலமாக, பரம்பரை பரம்பரையாக நகரில் தொழில் செய்து வரும் வர்த்தகர்களுக்கு பேரிடி ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கருவாட்டுக் கடைகளாகவும், பழக்கடைகளாகவும் இருந்த நிலங்கள் இப்போது வங்கிகளுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனையாகி விட்டன. இது நாளாந்தம் ஐந்துக்கும் பத்துக்கும் உழைத்த, அரை வயிற்றுப் பசிக்காரர்களுக்கு ஒரேயடியாக பட்டினி நிலையை ஏற்படுத்தி வைத்துள்ளது. இந்தக் கட்டடங்கள் யாவுமே யாழ்ப்பாணத்தை அழகான தொரு நகராக்கி வைத்துள்ளதென்னமோ உண்மை தான். ஆனால் இவற்றில் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் பெரும்பாலானவற்றில் கணிசமான வியாபார வாய்ப்பு இல்லாது போனதால் நொந்து நூலாகிப் போயுள்ள வர்த்தகர்களுக்கு இது பெரும் பின்னடைவை ஏற்படுத்தி வைத்துள்ளது.

''கடையின் முன்பக்கத்திலை இரண்டு புளி மூடைகளும், செத்தல்மிளகாய், தேங்காய் என பரப்பி வைத்து கடையைத் திறந்தா இராத்திரி 8 மணி வரைக்கும் அங்கை இங்கை நகரேலாது. வாடிக்கைச் சனம், வந்து போற சனம் என்று கடையைச் சுற்றி வளைத்து சாமான் வேண்ட நிக்குங்கள். விற்க விற்க சாமான் வேண்டி வேண்டி போட்டுத்தான் நாங்கள் அந்தக் காலத்தில இருந்து வியாபாரம் செய்தனாங்கள். இப்ப புளி மூடையும் காய்ஞ்சுபோச்சு. சனத்தை வரச்சொல்லிக் கூப்பிட்டாலும் வருகுதுகளில்ல. கண்ணாடி போட்டு அடைச்ச-கடையளைத்தான் தேடிப் போகுதுகள். பிறகெப்படி எங்களால வியாபாரத்தில உய்ய முடியும். வேண்டிப்போட்ட சாமான்களெல்லாம் அப்படியே கிடக்கு. போட்ட சாமானுகளை வேண்டின கடைக்காரன்களுக்கு கடன் பட்டுத்தானே காசு கட்ட முடியும். இதுதான் இப்ப எங்கடை நிலைவரம்".

சத்திரத்துச்சந்தியில் கடந்த 22 வருடமாய் பலசரக்கு கடை நடத்தும் விநாயகமூர்த்தி தனது ஆதங்கத்தை இப்படிக் கொட்டித் தீர்த்தார்.

அவரது முகபாவங்களைக் கொண்டு அவர் இப்போது எவ்வளவு தூரம் வியாபாரம் குறைந்ததால நொடித்துப் போயிருக்கிறார் என்பதை உணர முடிந்தது. ஏன் உங்கட வாடிக்கையாளரை நீங்கள் கைவிட்டனீங்கள்? அவையின்ர விருப்பத்துக்கு ஏற்ற மாதிரி சாமான்களைவாங்கிப்போட்டுகடையை மாற்றி அமைக்கலாம் தானே? என்று கேட்ட என்னைப்பார்த்து. ''சனம் இப்ப நாங்கள் எடுத்துக் குடுக்கிறதைவிட தங்கடை விருப்பத்துக்குத் தாங்களே எடுத்துப் பார்த்து தாங்களே தெரிவு செய்து வாங்கத்தான் நிக்குதுகள். இந்தப் பெட்டிக் கடைக்குள்ள அப்படியான வசதியை எப்படிச் செய்ய முடியும்? அந்தளவுக்கு முதலீடும் எங்களிட்ட இல்ல. இப்ப என்னைப் போல கடைக்காறர் பாதிப்பேர் பாங்கில தான் கடனாளியாய் இருக்கிறாங்க. வாற லாபத்தைக் கொண்டுபோய் பாங்குக்கு வட்டியைக் கட்டிறான்கள். பிறகெப்படி கடைகளை மாற்றியமைத்து சாமான் களைப் போட்டு விற்கிறது?'' என்று திருப்பிக் கேட்டார் அவர்.

நகர்ப்புறம் அழகாகத்தான் தோற்றமளிக்கிறது. வியாபார நிலையங்களது விளம்பரப்பலகைகள் தலையை உயர்த்திப் பார்க்க வைக்கின்றன. இந்த மாற்றங்களின் அழகுப் பொலிவோடு, இன்றும் அதே பழைய நிலைமையில் கிடக்கும் பெட்டிக் கடைக்காரர்களின் கடைகளையும் ஒப்பிட்டு நோக்கும் போது மனது சிரமப்படத்தான் செய்கிறது. அக்கடைகளின் புறத் தோற்றத்தில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. நகரின் அபிவிருத்திகள் பளபளப்பாக கண்ணுக்கு குளிர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டாலும் நகரின் மொத்த அபிவிருத்தியில் பங்கு கொள்ளும் பழைய வர்த்தக நிலையங்களை மீளப் புதுப்பித்துக் கொடுக்க எவரும் முன்வரவில்லை. தென்னிலங்கை நிறுவனங்கள் கடன் அடிப்படையில் வழங்கிய பொருள்களைக் கடைகளில் அடுக்கி வைத்துக் கொண்டு வீதியில் செல்வோரை விடுப்புப் பார்த்துக் கொண்டிருக்கும் வர்த்தகர்கள் பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்பை சந்தித்து வருகிறார்கள் என்பதே யதார்த்த நிலை. இந்தப் பொருளாதார நெருக்கடிகள் வர்த்தகர்களை தற்கொலை வரை கொண்டு சென்றுள்ளமை ஒருபுறம். கடனுக்குப் பயந்து தலைமறைவாகியுள்ள வர்த்தகர்கள் ஒருபுறம் என்ற கையறு நிலையில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் தமது வர்த்தக முயற்சிகளில் நலிவு நிலை கண்டு வருகின்றனர். இந்த நிலையில் யாழ்ப்பாண நகரின் புறக் கட்டமைப்பு மாற்றம் வர்த்தகர்களுக்கோ பொதுமக்களுக்கோ நன்மையைத் தந்துள்ளதா?

வட்டிப் பணத்தைச் செலுத்த முடியவில்லை என்று திண்டாடும் வர்த்தகர்கள், கடன் சுமையை மீளச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். தமது கடன் சுமையைக் குறைக்க வங்கிகளில் கடன் உதவி கோரி அலைந்து திரியும் வர்த்தகர்களும் இல்லாமல் இல்லை. வடபகுதிப் பொருளாதாரத்தின் தூண்களாக கருதத்தக்க யாழ்ப்பாண வர்த்தகர்கள் இத்தகைய தமது சிரமங்களிலிருந்து மீண்டெழுவதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய கட்டாயம் இன்று ஏற்பட்டுள்ளது.

"கடனுதவி கேட்டு இங்க வாற வர்த்தகர்கள் எதற்காக கடன் தேவைப்படுகிறது என்று கேட்டால், கொஞ்சம் சாமான் கடன் அடிப்படையில் வாங்கிப் போட்டிருக்கிறன். அதைக் குறித்த தினத்தில மீளக்கட்ட வேணும். அதுதான் இப்ப அவசரமா கடன் தேவை'' என்று காரணம் கூறுவதாக வங்கி அதிகாரி ஒருவர் கூறினார்.

கடனுக்குப் பெரும் அளவில் பொருள்களை வாங்க முன்னம் அதை எண்ணால் உரிய வேளையில் திருப்பிச் செலுத்த இயலுமோ, வாங்கின பொருள்களை சந்தைப்படுத்த முடியுமோ, கணிசமான இலாபம் ஈட்ட இயலுமோ, வாங்கிய பொருள்களுக்கான சந்தை வாய்ப்பு நிலை என்ன? என்றெல்லாம் யோசிக்காமல் விற்பனை ஆகிறதோ இல்லையோ, கடையிலை சாமான் இருந்தால் சரி, மற்றக் கடைகளைப் போல தம்முடைய கடைகளையும் 'ஷோ' வாக வைத்திருக்க வேண்டும் என்றுதான் வர்த்தகர்கள் நினைக்கிறார் போல் தோன்றுகிறது. கால நேரத்துக்கு ஏற்றபடி வர்த்தகத்தைத் திட்டமிட்டு மேற்கொள்வதற்கான துறை சார் ஆலோசனைகளை வர்த்தகர்களுக்கு வழங்க யாரும் இல்லை. எல்லாமே வியாபார தந்திரம் என்ற நிலையில், தாம் கொண்டு வரும் சாமான்களை இங்குள்ள வர்த்தகர்களின் தலைகளில் கட்டி அடித்து விட்டு தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்கள் லாபத்துடன் திரும்பிச் செல்கின்றன. 'இப்ப காசு இல்லாட்டா கடனுக்கு வாங்குங்கோ நீங்கள் எத்தனை காலத்து வாடிக்கையாளர், உங்களை நம்பாமலோ?' என்றெல்லாம் ஐஸ் வைத்து தென்னிலங்கை வியாபார நிறுவனங்கள் தமது தந்திரத்தால் யாழ்ப்பாணத்து வர்த்தகர்களிடம் தமது பொருள்களைச் சுமத்தி முடித்துவிடுவர். இதனால் தமது பொருள்களுக்கு இங்கு கணிசமான சந்தை வாய்ப்பு உள்ளதா இல்லையா என்றெல்லாம் அவர்கள் நாடி பிடித்துப் பார்ப்பதில்லை. அதற்கெல்லாம் அவர்களுக்கு நேரம் கிடையாது. எரியிற வீட்டிலை பிடுங்கினது அறுதி என்ற விதத்தில் தமது வாய் வல்லமையால் அவர்கள் காரியம் சாதித்து விடுகிறார்கள்.

எனினும் யாழ்ப்பாண வர்த்தர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கீடுகள் வர்த்தகர்களை மேலும் மேலும் பெரிய பிரச்சனைகளுக்கு இட்டுச் செல்ல முன்னர் அதற்கான தீர்வுகளை தொடர்புடையவர்கள் மேற்கொண்டால் மட்டுமே வர்த்தகர்களின் தலை மீதான சுமை இறக்கப்பட வாய்ப்பமையும். ★




# பெற்றோர்கள் பிள்ளைக்கு சொல்லிக் கொடுக்க வேண்டியவை

கவிதாயினி

ஒவ்வொரு பெற்றாருக்கும் தங்களுடைய பிள்ளைகள் மேல் அதிக அக்கறை இருக்க வேண்டும். அத்துடன் அவர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் நாம் மிகுந்த கவனம் எடுக்க வேண்டும்.

ஆணோ, பெண்ணோ, எந்தக் குழந்தையாக இருந்தாலும், 'நல்லது எது, கெட்டது எது' என்பதைப் பெற்றோர்களே சொல்லிக் கொடுக்க வேண்டும். சின்னப் பிள்ளைகள்தானே என்று குழந்தைகளை மேலாடையின்றியோ, ஆடை இன்றியோ இருக்க ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. குழந்தைகள் உங்களுக்கு குழந்தைகளாய்த் தெரியலாம், ஆனால் பார்ப்பவர்கள் எல்லோருக்கும் அப்படியே தெரியும் என்று எண்ணிவிடாதீர்கள். அதுதான் பெற்றோர்கள் புரியும் முட்டாள்தனம்.

குழந்தைகளைத் தனியே கடைக்கு அனுப்பும் போது மிகுந்த கவனம் எடுக்க வேண்டும். நீண்ட நேரமாய் குழந்தைகள் நிற்க வைக்கப்பட்டாலோ, அல்லது பொருள்கள் மிகுதியாகவோ, இலவசமாகவோ வழங்கப்பட்டாலோ உடனடியாக கவனம் எடுக்க வேண்டும்.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பும் போது வாகனத்தில் தனியாகவோ, அல்லது பிற குழந்தைகளுடனோ அனுப்பினால், அந்த வாகன ஓட்டுநரின் முழு விவரத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். அவரின் நடத்தையிலும், பழக்க வழக்கத்திலும் ஐயமின்றி தெளிவுறுங்கள். அதன் பின்னர் பிள்ளைகளை அனுப்புங்கள்.

யார் அழைத்தால் போக வேண்டும், யார் கொடுத்தால் வாங்க வேண்டும் என்று குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுங்கள்.

எப்போதும் குழந்தைகளிடம், வீட்டின் முகவரி, உங்களின் தொலைபேசி எண்கள் என்பவற்றை மனப்பாடமாய் வைத்திருக்க கற்றுக் கொடுங்கள்.

வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால், வயதுவித்தியாசமாக இருந்தாலும் கூட ஒரு போதும் ஒருவருடன் மற்றவரை ஒப்பிட்டுப் பேசாதீர்கள்,

அளவுக்கு மீறி, உங்கள் விருப்பங்களை குழந்தையின் மேல் திணிக்காதீர்கள். குழந்தைகளிடம் அதிக நேரம் செலவிடுங்கள், ஒரு தோழமையுடன் அவர்கள் சொல்வதை காது கொடுத்து கேளுங்கள்.

தவறுகளைத் தன்மையுடன் திருத்துங்கள், தண்டிக்க நினைக்காதீர்கள்! ஒருமுறை நீர் ஊற்றியவுடன், விதை மரமாகிவிடாது, நீங்கள் ஒருமுறை சொன்னவுடன் குழந்தைகள் உங்கள் விருப்பபடி மாறிவிட மாட்டார்கள். பொறுமையைக் கடைப்பிடித்து திரும்பத் திரும்ப நல்ல விடயங்களைக் கற்றுக் கொடுங்கள்.

பாடசாலை விட்டு வரும் குழந்தைகளை அன்புடன் அரவணைத்து, வேண்டியது செய்ய அம்மாவோ, பெரியவர்களோ வீட்டில் கண்டிப்பாக இருத்தல் வேண்டும்!

நீங்கள் உங்கள் பெற்றோரை நடத்தும் விதம், உங்கள் பிள்ளைகளால் கவனிக்க படுகிறது. நாளை உங்களுக்கும் அதுவே நடக்கலாம்! பெரியவர்களை மதிப்பதில் பெற்றோர்கள் மிகக் கவனமாக இருங்கள்.

படிப்பு என்பது அடிப்படை, அதையும் தாண்டி குழந்தைகளுக்கு உள்ள ஏனைய ஆர்வத்தையும் ஊக்குவியுங்கள். ஓடி ஆடி விளையாடுவது குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு அவசியம். விளையாட்டுக்குத் தடை போடாதீர்கள்.

குழந்தைகள் கேள்வி கேட்கட்டும், அவர்களின் வயதுக்கேற்ப புரியும்படி பதில் சொல்லுங்கள்! பொது அறிவுக் கேள்விகள் கேட்கப்படும் போது தெரிந்தால் சொல்லுங்கள், தெரியாவிட்டால் பிறகு சொல்லுகிறேன் என்று சொல்லுங்கள். சொன்னபடி கேள்விக்கான பதிலை அறிந்து கொண்டு, மறக்காமல் அவர்களிடம் சொல்வது அவசியம். ஒருபோதும் ''ச்சீ வாயை மூடு'' ''தொணதொண என்று கேள்வி கேட்காதே'' என்று அவர்களுக்கு எரிச்சலூட்டி, அவர்களின் ஆர்வத்தைக் குழி தோண்டி புதைத்து விடாதீர்கள்!

## உனக்காக....



உன்னை எனக்கு
பிடிக்கும் என்றாய்.
என் அம்மாவை விட
பிடிக்கும் என்றாய்,
நீ எதைச் சொன்னாலும்
செய்வேன் என்றாய்,
ஏன் என்று கேட்டேன்?
உன் குணம்
பிடிக்கும் என்றாய்,
எதற்காக என்றேன்?
என் உயிர்
தோழி நீதான்டி என்றாய்-
நான் எப்போதும்
உன்னை விட்டுப்
பிரிய மாட்டேன் என்றேன்
ஏன் என்றாய்?
என் உயிரே
நீ தான் என்றேன்

ச.புவித்ரா,
தொழில் நுட்பக் கல்லூரி

# தாய்ப்பால் குடிக்கும் பிள்ளைகளுக்கு புத்திக் கூர்மை



**குறைவான காலம் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கும், அதிக காலம் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் இடையே புத்திக் கூர்மையில் வித்தியாசம் இருக்கிறது**

தாய்ப்பால் குடிக்கும் பிள்ளைகள் உடல் ஆரோக்கியத்துடன் இருப்பார்கள். அதனால் தாய்க்கும் பல நன்மைகள் ஏற்படுகின்றன. அத்தோடு தாய்ப்பால் குடிக்கும் பிள்ளைகளுக்கு புத்திக் கூர்மை அதிகமாக இருப்பதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

குறைவான காலம் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கும், அதிக காலம் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் இடையே புத்திக் கூர்மையில் வித்தியாசம் இருப்பது, பல்வேறு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளது.

எனவே, தாய்மார்கள் தங்களது குழந்தைகள் புத்திசாலிகளாகவும், ஆரோக்கியமானவர்களாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பினால், குறைந்தது குழந்தை இரண்டு வயதாகும் வரையாவது தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.

# அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது பெண்களே

உலக அரசியலில் இன்று பெண் தலைமைத்துவம் என்பது கணிசமான அளவில் உள்ளது. பெண்களின் அரசியல் பங்களிப்புக்கு சில இயல்புகளும் தடை போடுகின்றன. பிராந்திய, பிரதேச இயல்புகளும், பெண்களின் சில இயல்புகளும் பெண்களுக்கும், அரசியலுக்கும் இடையிலான தூரத்தைக் கூட்டி வைக்கின்றன.

ஒரு பெண் வாக்குப் போடுவதும் கட்சிக்கு ஆதரவாக இருப்பதும் மட்டுமே அவளின் அரசியல் பங்களிப்பாக அமையுமா? பெண்கள் 3 வகையில் அரசியலில் பங்குபற்றலாம்.

★ தீர்மானம் எடுப்பதில் பங்கு பற்றல்.
★ எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் பங்குபற்றல்.
★ தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் நன்மைகளைப் பகிர்ந்து கொள்வதில் பங்குபற்றல்.

இலங்கையில் முதலாவது பெண் பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, முன்னாள் ஜனாதிபதியாக சந்திரிக்கா, முன்னாள் இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி, தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா, காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரும் இவைதவிர பாகிஸ்தானின் பெனாசீர் பூட்டோ போன்று பங்களாதேஷில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சித் தலைமைப் பதவி களிலும் பெண்கள் அங்கம் வகித்தார்கள். வகித்துக் கொண்டிருக்கிறார்கள். இனிவரும் காலங்களிலும் அங்கம் வகிப்பார்கள்.

தற்காலத்துப் பெண்கள் ஆண்களைக் காட்டிலும் வீரம், வெற்றி, துணிச்சல் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் பல துறைகளிலும் முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

அந்த வகையில் அரசியலிலும் முன்னேறிக் கொண்டு தான் இருக்கிறார்கள். பாரதி படைத்த புதுமைப் பெண்ணாக மேற்கூறிய பெண்மணிகள் திகழ்கின்றனர்.

எனவே அரசி யலில் முன்னரைவிட தற்போது பெண்களின் ஆதிக்கம் பெருமளவில் அதிகரித்துள்ளது.

வி.விஜயசாந்தி

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது

**ஆண்களா? பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## திசைமாறிப் போன வழிகாட்டி

காரணமும் இருக்கவில்லை
காரியமும் இருக்கவில்லை
திடீரென ஒரு சந்திப்பு....
அந்த நாள் என் வாழ்வின்
மேன்மையான நாள்...
அது புது உறவின்
சந்திப்பு நாள்...
அந்த உறவு உண்மையான
உறவுதான்!
அன்பின் அடையாளம்தான்!
என் வாழ்வில் வழிகாட்டியும் கூட!

தாகமாய் அழைக்க
அவள் ஒரு தங்கச்சி- ஆனால்
ஒரு தாய் வயிறு அல்ல...
உருவாக்கிய உறவுதான்!
இனம் புரியாத அன்பு!
இனம் புரியாத கவலை!
சமூகத்திலோ பல சலசலப்பு
காரணங்களும் பலவிதம்...

அன்புக்கு இலக்கணமான
உறவுதான்!
ஆச்சரியப்பட எதுவுமில்லை...
இரக்கமான மனதும் கூட!
ஈரமான ரோஜாப்போல
உன்னதமான குதூகலம்..
இதெல்லாம் தாண்டி
மேன்மையான வழிகாட்டி...

சந்தோஷம்
புதிய சிந்திப்பு
நேர்மையான சிந்திப்புக்கு
ஒரு சிந்தனை வழிகாட்டி!
புதிய உறவின் சங்கம நாள்
என் வாழ்வின் புத்தொளி நாள்...
ஆனாலும்-
காலம் யாருக்காகவும்
காத்திருக்கவில்லை.
காரணமில்லாப் பிரிவு...



வழிதெரியா உறவு
திசை மாறிய பயணம்...

இல்லை என்றபோதும் புரிந்து
இருந்ததன் பெறுமதி!
இருந்த போது தெரியவில்லையே!

T.ஜங்கரதீபன்,
யாழ்.பல்கலைக்கழகம்



## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-......................................................

முகவரி :- ......................................................

......................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## அம்மா...



உன் அருகில்
நான் இருந்தபோது
உன் பாசமென்றால்
என்னவென்று புரியவில்லை
எனக்கு இன்று
தொலைதூரம் சென்ற
பின்தான் உணர்கின்றேன்
உன் அருகில் நான்
இல்லை என்பதை!

கு.ஜனுசா,
ஆறாம் வட்டாரம்,
வேலணை மேற்கு.

## மேய்ச்சல் தரவைகள் இல்லாத கிளிநொச்சி




கிளிநொச்சி, ஓக.1
கிளிநொச்சி ஒரு விவசாய மாவட்டமாக உள்ள போதிலும் இங்கு மேய்ச்சல் தரவைகள் இல்லாத குறை நீண்டகாலமாக நிலவி வருவதாகத் தெரிகின்றது.
கிளிநொச்சி மாவட்டத்தில் மேய்ச்சல் தரவைகள் இல்லாததால் கால்நடை வளர்ப்பாளர்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
குறிப்பாக அக்கராயன் குளத்தின் கீழ் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தமது கால் நடைகளை எங்கு கொண்டுபோய் மேய்ச்சலுக்கு விடுவது என்று குழம்பிப்போய் உள்ளனர்.
இங்கு மேய்ச்சல் தரவைகள் இல்லாத காரணத்தினாலேயே கால்நடைகள் நெல் வயல்களைக் நாடிச் சென்று அழித்துவரும் அவலம் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்வதை அவதானிக்க முடிகின்றது. (க-18)

# புளியங்குளத்தில் பப்பாசித் தொழிற்சாலை

வவுனியா, ஓக.1
**வவுனியா புளியங்குளத்தில்** பப்பாசிப் பழ ஜாம், மற்றும் ஜூஸ் போன்றவற்றைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருவதாக வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் தெரிவித்துள்ளார்.
ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருவதாகவும்,

**முதற்கட்டமாக 200 பப்பாசிச் செய்கையாளர்களை இலக்காகக் கொண்டு இந்தத் தொழிற்சாலை செயற்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.**



முதற்கட்டமாக 200 பப்பாசிச் செய்கையாளர்களை இலக்காகக் கொண்டு இந்தத் தொழிற்சாலை செயற்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.
மேலும் எதிர்காலத்தில் தொழிற்சாலையின் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.
வவுனியா வடக்குப் பிரதேசம் பப்பாசிச் செய்கைக்கு சிறந்த மண்வளத்தைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க-14-18)

## விளையாட்டு மைதானம் அமைத்துத் தாருங்கள்

### மக்கள் வேண்டுகோள்

அக்கராயன், ஓக.1
அக்கராயன் கிழக்குப் பகுதியில் விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
மீளக்குடியமர்ந்து 3 ஆண்டுகள் கடந்த நிலையிலும் கிராமத்தில் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு விளையாட்டு மைதானம் இல்லாதது தடையாக உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை இந்தக் கிராமத்தில் பொது நோக்கு மண்டபத்தை புனரமைக்குமாறும் வெள்ளநீர் வீதிகளைக் குறுக்கறுத்துப் பாயும் இரு இடங்களில் பாலங்களை அமைத்துத் தருமாறும் இந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## உருத்திரபுரம் கிராமத்தில் கால்வாய்கள் அமைப்பு

உருத்திரபுரம், ஓக.1
கிளிநொச்சி உருத்திரபுரம் கிராமத்தில் மழை வெள்ளம், குடிமனைகள் ஊடாகப் பரவிப் பாய்வதைத் தடுக்கும் வகையில் கால்வாய்களை அமைக்கும் பணிகள் தொடங்கியுள்ளன.
இந்தக் கால்வாய்கள் ஊடாக மழை வெள்ளம் சிவநகர் குளத்தை அடைவதுடன் வான் வழியாக வெளியேறக் கூடிய வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
உருத்திரபுரம் 8 ஆம் வாய்க்கால் பகுதியிலிருந்து மழை வெள்ளம் கடந்த காலங்களில் குடிமனைகளைக் குறுக்கறுத்துப் பாய்ந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)



## அக்கராயனில் காடுகள் அழிப்பு

### மக்கள் விசனம்


அக்கராயன், ஓக. 1
அக்கராயன் குளத்தின் பின்புறத்தில் உள்ள காட்டில் தினமும் பெருமளவு மரங்கள் தறிக்கப்படுவதாக இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
முல்லைத்தீவு மாவட்டம் அமதிபுரத்தின் பின்புறத்தில் அக்கராயன் குளத்தை அண்டிய தொடர் காடுகள் உள்ளன. இந்தக் காடுகளிலேயே பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.
மேலும் பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களிலுள்ள காடுகளிலும் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டு வரும் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அக்கராயன் குளத்தின் காட்டுப் பகுதியிலும் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# மன்னாரில் தொடர்ந்து மின் தடை; மக்கள் பலவிதங்களிலும் பாதிப்பு

மன்னார்,ஓக.1
மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக இரவு,பகல் பாராது நாளாந்தம் அடிக்கடி மின் தடங்கல் ஏற்படுகிறது. அதனால் மன்னார் மாவட்ட மக்களும், மாணவர்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கும், இன்னல்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.
மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக திடீர், திடீர் என்று மின்சாரம் தடைப்பட்டு வருகின்றது. அதனால் மின் பாவனையாளர்களது பெறுமதி மிக்க மின் உபகரணங்கள் பழுதடைந்துள்ளன என்று மின் பாவனையாளர்கள் தெரிவித்தனர்.
தற்போது முஸ்லிம்கள் புனித நோன்புக் காலத்தை அனுஷ்டித்து வருகின்ற நிலையில் , அதிகாலை நேரங்களில் மின் தடங்கல் ஏற்படுகின்றது. அதனால் புனித நோன்புக் கடமைகளை நிறைவேற்றிக்கொள்வதில் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.
இதேவேளைஅடுத்த மாதம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ உயர் தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று பெற்றோர் கவலை தெரிவித்தனர்.
நாளாந்தம் பல மணி நேரம் மின் தடங்கல் ஏற்படுகின்ற போதிலும் மாத முடிவில் அதிகரித்த தொகைக்கு மின் பட்டியல் கிடைப்பதாக மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்தனர்.
இது தொடர்பாக இலங்கை மின்சாரசபையின் பிரதம மின் பொறியியலாளர் எஸ்.பிரபாகரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,
மன்னார் தொடக்கம் புத்தளம் வரையில் உள்ள அதியுயர் மின் கோபுரங்களில் உள்ள மின் கம்பங்களில் 'காபன்' மற்றும் உப்பு படிவதினால் அடிக்கடி மின் தடங்கல் ஏற்படுகின்றது.
இந்தப் பிரச்சினை ஒவ்வொரு வருடமும் இந்தக் காலப்பகுதியில் இடம்பெறுகின்றது. இயற்கைக்கு எதிராக எம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று அவர் கூறினார். (ச-12)

## வீட்டுத் திட்டத்தின் வேலைகளை விரைவில் நிறைவு செய்யுங்கள்

### அமதிபுரம் கிராம அலுவலர் வேண்டுகோள்



துணுக்காய், ஓக.1
எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் வீட்டுத் திட்ட வேலைகளை நிறைவு செய்யுமாறு துணுக்காய் அமதிபுரம் கிராம அலுவலர் நா.துளசிதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அமதிபுரம் கிராமத்தில் நடைமுறைப்படுத்தப்படும் 66 வீட்டுத் திட்ட வேலைகளையும் விரைவாக முடிக்குமாறு அவர் வீட்டுத் திட்டத்தில் வீட்டு வசதிகள் பெற்றவர்களிடம் தெரிவித்தார்.
இது தொடர்பான கூட்டம் ஆரோக்கியபுரம் பொதுமண்டபத்தில் நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
வீட்டைப் பெறுவதற்குத் தகுதியான அனைத்துக் குடும்பங்களுக்கும் வீடுகள் அமைக்கும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. வீட்டு வேலைகளை விரைந்து நிறைவு செய்வது பயனாளிகளின் முக்கிய பணி எனவும் அவர் மேலும் தெரிவித்ததுடன் அமதிபுரம் கிராமத்தில் 7 வீடுகளை இராணுவத்தினர் அமைத்து வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## குழாய் மூலம் குடிதண்ணீர்

அக்கராயன், ஓக.1
அக்கராயன் பகுதிக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டவேலைகளின் ஒரு கட்டமாக 50 வீட்டுத் திட்டம், இம்மாஸ் நகர் பகுதிகளில் இயந்திரத்தின் உதவியுடன் குழிகளைத் தோண்டும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.
இந்தப் பகுதிகளில் நீர்க் குழாய்களைப் பதிப்பதற்காக குழிகளைத் தோண்டும் பணிகள் மனித வலு மூலம் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்ட போதிலும் இங்கு நிலவும் வறட்சி நிலை காரணமாக இயந்திரத்தின் உதவி பெறப்பட்டு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.
6 மாத காலத்தினுள் குடிதண்ணீருக்கான திட்டம் நிறைவு செய்யப்பட்டு விடுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)



முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வயல் ஒன்றில் சிறுபோகத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் சிற்றுண்ணிகளின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. (க-500)

தருவது வித்தியா

# இன்றைய நாள்
## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிர்க்கவும்

**இடபம்:** மனதில் பட்டதை பளிச் சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மனநிம்மதி கிடைக்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். அரசு காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு. செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

**கடகம்:** நட்பு வட்டாரம் விரிவடையும். பணவரவு திருப்தி தரும். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு. வெளியூர் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள்.

**சிங்கம்:** குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள். உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கன்னி:** சில தினங்களாகத் தடைப் பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.

**நாளை**

ஆடி-17 வெள்ளிக்கிழமை 02.08.2013
திதி: ஏகாதசி மு.இ. 08.39 வரை
நட்சத்திரம்: ரோகிணி மு.ப. 11.13 வரை
சுபநேரம்: 06.03 - 07.33 வரை
இராகுகாலம்: 10.33 - 12.03 வரை

**துலாம்:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**மகரம்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**கும்பம்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றிஅடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண்பதற்றம் அலைச்சல் நீங்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**மீனம்:** செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். சிலர் உங்களை குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்காதீர்கள்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 7 | | 4 | 1 | 2 | |
| 6 | | | | | | | | |
| 7 | 1 | 2 | | 5 | | 9 | 4 | |
| | | 7 | | | 5 | | 6 | |
| | | | 4 | 7 | 1 | | | |
| | 5 | | 9 | | | 7 | | |
| | 7 | 1 | | 8 | | 6 | 3 | 4 |
| | | | | | | | | 1 |
| | 8 | 3 | 6 | | 9 | | | 5 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 4 | 3 | 1 | 6 | 2 | 5 | 8 |
| 1 | 5 | 8 | 2 | 4 | 7 | 3 | 6 | 9 |
| 2 | 6 | 3 | 8 | 5 | 9 | 7 | 4 | 1 |
| 5 | 4 | 2 | 7 | 8 | 1 | 9 | 3 | 6 |
| 8 | 3 | 6 | 9 | 2 | 4 | 5 | 1 | 7 |
| 9 | 1 | 7 | 5 | 6 | 3 | 8 | 2 | 4 |
| 3 | 8 | 1 | 6 | 9 | 2 | 4 | 7 | 5 |
| 6 | 2 | 9 | 4 | 7 | 5 | 1 | 8 | 3 |
| 4 | 7 | 5 | 1 | 3 | 8 | 6 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.






## சைவ சமய அறிவுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக.1

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத் திக் கழகத்தால் வருடந்தோறும் நடத்தப்படும் சைவ சமய அறிவுப் பரீட்சை, செயல்முறைப் போட்டி ஆகியவற்றுக்கான விண்ணப்பங் கள் கோரப்பட்டுள்ளன.

சைவ சமய அறிவுப் பரீட்சை, நீதி நூல் மனனப்போட்டி மற்றும் கோலம் போடு தல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயன்முறைப் போட்டிகளுக் கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்காத பாடசாலைகள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82, நாவலர் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முக வரிக்கு அனுப்பி வைக்குமாறு கழகத் தின் உதவிப் பரீட்சைச் செயலாளர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (வ-14)

## இரவில் வெளிச்சம் இன்றி சைக்கிளில் பயணித்தால் தண்டம் ரூ.2 ஆயிரம்

பருத்தித்துறை, ஓக. 1

சைக்கிள்களில் இரவு நேரங்களில் வெளிச்சம் இன்றி பயணித்தால் குற்றப் பணம் செலுத்த வேண்டி நேரிடும் என்று நெல்லியடி போக்குவரத்து பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதற்கமைய சமாந்தரமாக பய ணம் செய்தால் 3 ஆயிரம் ரூபா வும், வெளிச்சம் இன்றி பய ணித்தால் 2 ஆயிரம் ரூபாவும் குற்றப் பணமாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-34)

## நிர்ப்பந்தம் என்றால் என்ன?

நிர்ப்பந்தம் என்றால் கட்டாயப்படுத்தல் என்று பொருள்படும். உதாரணமாக குறிப்பிட்ட ஒரு நாள் உமது காரியால யத்தைப் பார்வையிட உயரதிகாரி வருகிறார். திடீரென உமக்குச் சுரம் பிடித்து விட்டது. நீர் என்ன செய்வீர்? நீர் வைத்தி யரிடம் விரைந்து, மருந்துகள் பெற்றுக் கொண்டு காரியாலயம் செல்வீர். உமக்குக் காய்ச்சலானது உபத்திரவத் தைக் கொடுத் தாலும் காரியாலயம் செல்ல நிர்ப்பந்திக்கப்படுகிறீர். இதுவே நிர்ப் பந்தம் ஆகும்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது!



சாயி சிந்தனை

## மறுபிறப்பு உண்டென்றால் மடியினில் நீ தவழ்ந்திட வா..

### சகாதேவன் நிலக்ஷன் (நிலா)



நிலாவெனவே ஒளிவீசி நித்திலத்தில் மிளிர்ந்தவனே!
நீர்க் குமிழியல்ல, நிலையான புகழோடு
நிகரின்றி வாழ்ந்தவனே!
ஒன்றல்ல இரண்டல்ல ஒப்பற்ற பல்துறை வித்தகனாய்
பாரினிலே பவனி வந்தவனே!
நின் திறனைப் பொறுக்காத பொல்லாதோர்
தேடிவந்து உனை எழுப்பி ஓராயிரம் கேள்வி கேட்டு
ஒப்பற்ற உன் திறனை ஓர் நொடியில் பொசுக்கிவிட
எண்ணினரோ ஒழுக்கமற்ற கயவர் கூட்டம்
பக்கத்தில் நாம் இருக்க பாதகர்கள் செய்தசதி
பகற்கனவாய் போயிருந்தால் பாவிகள் நாம்
படுந்துன்பம் ஏதும் இல்லை எங்களுக்கே
மூவிரண்டு ஆண்டுகள் முடிந்துதான் போனதையா!
அகிலத்தில் நாம் வாழ்வதிலே அர்த்தமொன்று
உண்டென்றால் மறுபடியும் உன் மனைவந்து
மடியினில் நீ தவழ்ந்திடையா!

அம்மா, டடா, அண்ணா

(c/11098)(3.6)

மலர்வு
08.11.1985

மறைப்பு
01.08.2007

நிலா இல்லம்,
47, புகையிரதநிலைய வீதி,
கொக்குவில்.

01.08.2013

## நல்லிணக்க பொறிமுறையை உருவாக்குவதால் காணிப் பிணக்குகளைத் தீர்க்க முடியும்

### நீதி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலர் தெரிவிப்பு

நெல்லியடி, ஓக.1

காணிப் பிணக்குகளைத் தீர்ப் பதற்கு நல்லிணக்கத்தை ஏற் படுத்தும் புதிய பொறி முறையை உருவாக்குவதன் மூலம் அது வெற்றியளிக் கும் என்று நீதியமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலர் அனுஷா அபேவிக்ரம முன சிங்க தெரிவித்தார்.

மத்தியஸ்தமும் காணிப் பிணக்குகளும் என்ற தலைப் பில் யாழ். மாவட்ட மத்தி யஸ்தர் சபைகளின் தவி சாளர்களுக்கான கலந்துரை யாடல் கடந்த 29 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மாவட்ட செய லகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரி வித்ததாவது:-

காணிப் பிணக்குகள் தொடர் பாக புதிய ஒரு பொறி முறை யை உருவாக்கும் நோக்கில் இந்தக் கலந்துரை யாடல் மேற்கொள்ளப்பட் டது. பிரதேச செயலர், பொலிஸ் பொறுப்பதிகாரி, கிராம சேவை யாளர்களுடன் மத்தியஸ்தர் சபைகளின் தவிசாளர்கள் நல்லுறவைப் பேண வேண்டும். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ்.மாவட்டத்தில் காணிப் பிணக்குகள் குறை வாக உள்ளன. காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு குறிப்பாக அரச காணி களின் பிணக்குகளைத் தீர்ப் பதற்கு என புதிதாக அரச காணிப் பிணக்குகளுக்கான நல்லிணக்கத்தை ஏற்படுத் தும் புதிய பொறி முறையை உருவாக்குவதன் மூலம் பிணக்குகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள இயலும் என்றார். (எ-35)

சிவமயம்

## முதலாம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம்
09.10.1974

மறைவு
12.08.2012

### அமரர் திருமதி.வைதேகி சிவசெந்திநாதன்

(முகாமைத்துவ உதவியாளர், நிலஅளவைத் திணைக்களம்,
திருகோணமலை)

**திதி :- ஆடி மாத அபரபக்க தசமி- 01.08.2013**

இல்லத்தரசியாய் – எங்கள் குல விளக்காய்
இருந்தாய் எம் வைதேகி எங்கு சென்றாய்
ஓராண்டு வந்து உன் நினைவைத் தூண்டியது
வாழ்ந்தது போதுமென உனை வானவன் கவர்ந்தானோ
வாய்விட்டலறுகின்றோம் வருவாயா – இவ் வையகத்தில்
பெற்றெடுத்த இரு குழந்தைகளும் பேதலிக்க
கைப்பிடித்த கணவன் கண்கலங்கி நீர் சொரிய
உனைப் பெற்றோரும், உன் சோதரரும்,
உற்றோரும் ஏங்கி நிற்க – நீ பிரிந்தாய்
உன் ஆத்மா சாந்தி எனும் சோலையிலே சங்கமிக்க
இறைவனை இறைஞ்சுகின்றோம் – வைதேகி


*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

*கரம்பைக்குறிச்சி மேற்கு,*
*வரணி.* T.P : 071 8358139 குடும்பத்தினர்.

(C/11098)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
21.10.1989



மறைவு
01.08.2011

அமரர்

### கிருஸ்ணமூர்த்தி கோகுலன் [கோபி]

மீளாத நினைவுகளுடன்......
காற்றோடு கலந்து கரைந்து போனதடா
கால நதியினிலே ஈராண்டுகள்....
ஊற்றாக ஊறுதடா கண்ணீர்
உன் நினைவால் எம் கண்களில்
ஆறாத துன்பமிது ஆரெமக்குத் துணையென
அகன்றாய் எம்மை விடுத்து
வற்றாத அன்பு நதியாய்
வலம் வந்த எம் கோகுலனே
பற்றறுத்து போனதெங்கே – எம்
பாசமலரே பதறுதடா எம் நெஞ்சம்
உற்றவனே எம் உள்ளம் நினைந்தவனே
உலகுகாண மீண்டும் வரமாட்டாயோ

குடும்பத்தினர்.
(த.கிருஸ்ணமூர்த்தி)

அல்லாரை வடக்கு, மீசாலை. (30050) (45.6.3)

# சிற்பியை போற்றும் சிலைகள்



**S.V. மகேந்திரன்**
**B.sc, PGDE, SLTS-I**
(உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்)
யாழ் கல்வி வலயம்.
ஓய்வு பெற்ற ஆசிரியர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி)

காலமெல்லாம் எங்களுக்கு
கணக்கென்றால் தலை கனக்கும்!
நீங்கள் வந்த பின்னாலே
கணக்கென்றால் மனம் மணக்கும்!
கணிதம் என்னும்
கண்ணான பாடத்தோடு
மனிதம் என்னும்
மகத்தான பாடத்தையும்
மனம் மகிழப் பயிற்று வித்த
கணித ஆசிரியரன்றோ நீங்கள்!
புனித ஆசிரியருமல்லவா நீங்கள்!
எட்டாக் காயாய்த்தான்
கணக்கு இருந்தது எங்களுக்கு!-அதை
கட்டிக் கரும்பாக மாற்றிய
பெருமையெல்லாம் உங்களுக்கே!

நலம் கண்டு வளம் பெறுக!
வாழ்க வளமுடன். வாழிய வாழியவே.

**Best Wishes**

உங்களது விழுதுகள்
2005 (13A), கணிதப் பிரிவு மாணவர்கள்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(30063) (3.6.11)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக.1

கைதடி குருசாமி வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் திருமதி ப.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மற்றும் கல்வி அமைச்சின் ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி வே.பொன்னம்பலம் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ)

## மாணவனைத் தாக்கிய ஆசிரியருக்கு பிணை

வடமராட்சியில் அமைந்துள்ள பிரபல கலவன் பாடசாலை ஒன்றில் அத்தாய் எனும் இடத்தைச் சேர்ந்த உயர்தர வகுப்பு கலைத்துறை மாணவனை ஆசிரியர் கடுமையாகத் தாக்கியதில் காயமடைந்த மாணவனது பெற்றோர், நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். இது தொடர்பான வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, நீதிவான் குறித்த ஆசிரியரை 25 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதித்ததுடன், வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் 25 ஆம் திகதிவரை ஒத்தி வைத்துள்ளார். (ஒ-35)

## வீடு வாடகைக்கு

யாழ்.நகரில் வீடு மற்றும் அறை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 072 132 8713

(30090)(3.6.11)

## பணிநிலை வெற்றிடம்

**TCT பல்பொருள் விற்பனை நிலையத்தில் பின்வரும் பணிநிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

1) தகவல் நிரற்படுத்துபவர் (Data Entry Opprator) (ஆண்/ பெண் இருபாலாரும்)
2) மேற்பார்வையாளர் (Supervisor) (ஆண்கள் மட்டும்)
3) பாதுகாப்பு உத்தியோகத்தர் (Security guard) (ஆண்கள் மட்டும்)

குறிப்பு:-
01. எமது விற்பனை நிலையத்தில் இருந்து 4 கிலோ மீற்றருக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தங்கள் சுய விவரங்களை 05.08.2013 இற்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பொதுமுகாமையாளர்,**
**TCT பல்பொருள் விற்பனை நிலையம்,**
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.:- 021 222 8025 (சி/30093)(6.2.3)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## மாணவர்களுக்கான அறிவித்தல்

கலைப்பீட மாணவர்களில் இராமநாதன் நுண்கலைக்கழகம் தவிர்ந்த மூன்றாம், நான்காம் வருட மாணவர்கள் பல்கலைக்கழக வளவினுள் பிரவேசிப்பதற்கும் பல்கலைக்கழக விடுதிகளில் தங்குவதற்கும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மறு அறிவித்தல் வரை தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி மாணவர்களில் விடுதியில் தங்கும் மாணவர்கள் 31.07.2013 நண்பகல் 12 மணியிலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் விடுதியைவிட்டு வெளியேறுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்விதியை மீறிப் பல்கலைக்கழக வளவினுள்ளோ, பல்கலைக்கழக விடுதியினுள்ளோ உட்பிரவேசித்தால் பல்கலைக்கழக மாணவர்கள் ஒழுக்காற்று விதிகளின் அடிப்படையில் அவர்களின் பல்கலைக்கழகப் பதிவு இரத்துச் செய்யப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

**பதிவாளர்.**

(C/10714)(6.2.3)

## கரைச்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம் வட்டக்கச்சி

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்களிற்கு தகைமையுள்ள இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை தலைவர் கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் வட்டக்கச்சி எனும் முகவரிக்கு பதிவு தபால் மூலமோ அல்லது நேரிலோ 14.08.2013 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

**I. பதவி - பொதுமுகாமையாளர்**
**சம்பளக்குறி இல. - 101/7**
**சம்பள அளவுத்திட்டம் - 11450 - 145 x 10 - 160 x 10 - 14500**

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 08 ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 09 ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவி யொன்றில் ஆறு (06) வருடங்களுக்குக்குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்டப் பதவியொன்றில் எட்டு (08) வருடங்களுக்குக்குறையாத அனுபவம்.

**வயது எல்லை** - 18 - 45 வரை
கூட்டுறவுச் சங்க ஊழியர்களிற்கு வயது கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது

**II. பதவி - எழுதுநர்**
**சம்பளக்குறியீடு இல - 302/16**
**சம்பள அளவுத்திட்டம் - 9200 - 70 x 10 - 75 x 10 - 10650**

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

(அ) கூட்டுறவுப்பணியாளர் 15ஆவது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக்குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக்குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) க.பொ.த. (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 05பாடங்களில் திறமைச்சித்தியுடன் (ஆறு)06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்

**III. பதவி - கிளைமுகாமையாளர் - (பயிலுநர்)**
**சம்பளக்குறியீடு இல - 208/13**
**சம்பள அளவுத்திட்டம் - 9950 - 85 x 10 - 90 x 10 - 11700**

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

(அ) கூட்டுறவுப்பணியாளர் 14ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதியொன்றில் இரண்டு (02) வருடங்களிற்குக்குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 10ஆவது சம்பளத்திட்ட தொடர்பட்ட வியாபார பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக்குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) க.பொ.த. (சாதாரண தரம்) எண் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04பாடங்களில் திறமைச்சித்தியுடன் (ஆறு) 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்

**வயது எல்லை** - 18 - 45 வரை
கூட்டுறவுச் சங்க ஊழியர்களிற்கு வயது கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது

மேற்படி பதவி நிலைகளிற்கு கூட்டுறவு சுற்று நிருபத்திற்கு அமைவாக இதர படிகளும் வழங்கப்படும்.


கூட்டுறவு சே. உள்ள
க.தர்மசூரியர்.
தலைவர்,
கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், வ

(37494)(3.6.45)

## ஆவணி விடுமுறையில் ஆங்கில வகுப்புக்கள்
## ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும்

யாழ்ப்பாணம், மானிப்பாய், சாவகச்சேரி, கிளிநொச்சிப் பகுதிகளில்
யாழ் குடாநாட்டில் முன்னனி வகிக்கும் சர்வதேசப் பாடசாலையால் வழங்கப்படுகின்றது.

E101 : BEGINNING ENGLISH Fee: Rs.1000/=
**Ideal for Pre-School Kids (4+,5+)**
இந்த வகுப்புக்கள் கிளிநொச்சிப் பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.



ANGEL INTERNATIONAL SCHOOL: A School of Excellence.

## August Holiday Courses in English
### ° For Both Teachers and Students

E201 : SPOKEN ENGLISH Fee: Rs.1500/=
**Ideal for Grades 1–5 Students**
E301 : TEACHING IN ENGLISH Fee: Rs.2000/=
**Ideal for School Teachers**
இவ்விரு வகுப்புக்களும் யாழ்ப்பாணத்திலும் மானிப்பாயிலும் மாத்திரமே வழங்கப்படும்.

- An entrance exam will be required for E201 & E301.
- Classes are taught by lecturers from Sri Lanka, USA, UK and Australia.
- Every course includes theory and application.
- For those completing the courses a certificate will be offered by

**PROFESSOR ALEX THEVARANJAN, SYRACUSE UNIVERSITY, U.S.A.**
**Principal, ANGEL INTERNATIONAL SCHOOL.** (C/10173)(6.2.)

Classes meet Mondays - Fridays, 8am-1pm during August 5th - 30th, 2013.
பதிவுகளுக்கும். மேலதிக விவரங்களுக்கும் : 077 322 6960 / 077 50 40 450.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சம்பந்தர் பரமேஸ்வரி



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சம்பந்தர் பரமேஸ்வரி 28.07.2013 அன்று கனடாவில் காலமானார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2013) வியாழக்கிழமை மொன்றியல், கனடாவில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

வீரபத்திரர் கோயில் வீதி,
கல்வியங்காடு.

தகவல்:
திருமதி ந.மகேஸ்வரி
திருமதி சி.ஈஸ்வரி
(சகோதரி)

(30091)(3.6.11)

## திருமதி கனகசபை நகுலேஸ்வரி

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை)



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் ஆத்தியடி பருத்தித்துறையை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி கனகசபை நகுலேஸ்வரி நேற்று (31.07.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி- மங்கயர்க்கரசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகசபை (ஓய்வுபெற்ற புகையிரத சாரதி)யின் அன்பு மனைவியும், முருகானந்தன் (கனடா), இந்துமதி (ஆத்தியடி) ஆகியோரின் சிறிய தாயும், பிரியதர்சினி (கனடா), யோகராசா ஆகியோரின் அன்பு மாமியும், ஆரணி, துர்க்கா, கஜீவன், கீதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08. 2013) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மட இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.M. றோட், ஆத்தியடி,
பருத்தித்துறை.
T.P: 021 226 4760 (37667)(10,6,3)

தகவல்: -
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## நமசிவாயம் பரராசசிங்கம்



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் பரராசசிங்கம் 29.07.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குலசேகரம் பிள்ளை மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சற்குணதேவியின் பாசமிகு கணவரும், விக்னராஜா (ஆஸ்திரேலியா), சுபாஜினி (பிரான்ஸ்), ரோகினி (ஆஸ்திரேலியா), கார்த்திகாஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கல்பனா (ஆஸ்திரேலியா), விக்னேஸ்வரன் (பிரான்ஸ்), சத்தியராஜா (ஆஸ்திரேலியா), அனந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், சஞ்ஜய, விஜி, வினேஷ், பிரகாஷ், பிரவீனா, அஷ்லயா, பவதாரணி, அஷ்வின் ஆகியோரின் பேரனும், அன்னம்மா, சிவசோதி ஆகியோரின் சகோதரனும், தனசேகரம், பாலசுப்பிரமணியம், யோகநாதன் (ஜேர்மனி), ஜெகநாதன் (சுவிஸ்), இராசகுமார் (பண்ணாகம்), சந்திரவதனா (டென்மார்க்), வசந்தமலர் (ஜேர்மனி), ருக்குமணி தேவி (டென்மார்க்), போகேந்திராதேவி(கொலன்ட்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2013) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 11 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(30076)(3.6.11)

## ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெறலாம்

தென்மராட்சி, ஓக. 1

தென்மராட்சி பிரதேச பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர், 70 வயதுக்கு மேற்பட்டோருக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு மற்றும் நோயாளர்களுக்கான கொடுப்பனவு என்பவற்றை பெறுவோர் எதிர்வரும் 5 ஆம் திகதி கொடுப்பனவை அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுக்கான பட்டியல்கள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்கள், உப அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு நேற்று பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (வ-9)

# முஸ்லிம் மக்களை மீண்டும் காட்டிக்கொடுத்தார் ஹக்கீம்

## ஐ.தே.க. மாகாணசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.1

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மீண்டும் முஸ்லிம்களை காட்டிக்கொடுத்து விட்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சாட்டியுள்ளார்.

போர்த்துக்கேயர் காலத்தில் இருந்து இலங்கையில் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனினும் தற்போதைய ஆட்சியில் அது மிகவும் மோசமாகியுள்ளது என்று அவர் கூறினார்.

இந்தநிலையில் முஸ்லிமகளுக்கு எதிரான அரசை தோற்கடிக்க முயற்சிக்காமல் தனித்து போட்டியிடும் தீர்மானத்தை ஹக்கீம் எடுத்திருப்பது தவறான விடயம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

**தனித்து வாக்கு கேட்டு, வாக்குகளைப் பெற்ற பின்னர் அரசில் இணைந்து கொள்ளும் உத்தியையே ஹக்கீம் கடைப்பிடித்து வருகிறார்.**

அரசில் இருந்து வாக்கு கேட்டால் முஸ்லிம்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்பதால் தனித்து வாக்கு கேட்டு, வாக்குகளைப் பெற்ற பின்னர் அரசில் இணைந்து கொள்ளும் உத்தியையே ஹக்கீம் கடைப்பிடித்து வருகிறார்.

இதனையே அவர் கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலும் கடைப்பிடித்தார் என்று அவர் கூறினார். (ச)

## யாழ். சென்றல் ஸ்தாபகர் தினம் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஸ்தாபகர் தினம் இன்று வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு சென் பீற்றஸ் தேவாலயத்தில் நடைபெற வுள்ளது. விசேட ஆராதனையும், அதனைத் தொடர்ந்து கல்லூரி றொமைன்குக் மண்டபத்தில் சிறப்புரையும், கல்லூரிக்கான புதிய இணையத்தள திறப்பு நிகழ்வும் இடம்பெற இருப்பதால் சகல பழைய மாணவர்கள் மற்றும் கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஒ)

# மரண அறிவித்தல்

## திருமதி மனோன்மணி மனோறஞ்சிதன்



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கிருலப்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி மனோறஞ்சிதன் 29.07.2013 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மனோரஞ்சிதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சாரதா மற்றும் பாரதா, கதாதரன், நரேந்திரன், சிறீதரன், சுபத்திரா, கலைவாணி (யசோ), மனோகரன், லங்கா ஆகியோரின் பாசமிகு தாயாரும், நடராஜா, சொர்ணராஜசிங்கம், திருச்செல்வம், இராஜேந்திரம், மகேந்திரராஜா, செல்வராணி, சந்திரா, வளர்மதி, பாலினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரத்தின மலர்ச் சாலையில் நாளை (02.08.2013) வெள்ளிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பி.ப. 12.30 மணி தொடக்கம் கிரியைகள் நடைபெற்று, பி.ப. 2 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனோறஞ்சிதன் குடும்பத்தினர்.

(சி/10660)(10,6,3)

# மரண அறிவித்தல்

## அந்தோனி விசேந்தி (ஆபிரகாம்)

*கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது*
*(சங்:116:15)*



காலானை, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி விசேந்தி (27.07.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி-கிறிஸ்ரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அகஸ்ரின் -அனந்தாசி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மேரிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ஜெய மேரிமலர் (பாப்பா) மற்றும் குருசுதாஸ்(துரை), சென்மராக்கினி (சந்தனம்-சுவிஸ்), லீலா, லெற்றீசியா (றொசிந்தா-சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆபிரகாம் (டேவிற்), தவமலர், மைக்கல்ப்பிள்ளை (சுவிஸ்), சற்குணதாஸ், குகன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், யோகராஜா (ஆஸ்திரேலியா), ஜோன்சன் (பிரான்ஸ்), கஜன், ஜர்லீன் (சுவிஸ்), யோகமலர், சுபா, பிறீடா, றொசன், சோபன் றொசற் (லண்டன்), கெமி, காலஞ்சென்ற நிசோ மற்றும் றொஜீன், றியோ, கசன், மென்சி, றொசில்டா, ஜெனு ஆகியோரின் பேரனும், நிலோஜன், நிலுஸ்ரா, வெஸ்லீன், ஹரிப்ராஜன், லாரா, சாரா (சுவிஸ்), டெஸ்லீன், ஷரோனா (லண்டன்) ஆகியோரின் பூட்டனு மா வார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01.08.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.30மணியளவில் நல்லடக்கத்திற்காக பூதவுடல் அச்சுவேலி வல்லை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொண்டமனாறு வீதி,
2 ஆம் ஒழுங்கை, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(30092)(3.6.11)



இராணுவத் தளபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்று பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரியாக நியமனம் பெற்றுச் செல்லும் ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கு இராணுவத்தினரால் வழங்கப்பட்ட பிரியாவிடை அணிவகுப்பு மரியாதை செவ்வாய்க் கிழமை கொழும்பில் இடம்பெற்ற போது, ஜெனரல் ஜகத்ஜயசூரியவோடு புதிய இராணுவத் தளபதியாக கடமையேற்ற மேஜர் ஜெனரல் தயா ரத்னாயக்கவும் காணப்படுகின்றார்.

# அரசு நிறுவனங்களுக்கு கடன் இக்கட்டு நிலையில் வங்கிகள்

## 'கோப்' அறிக்கையில் அபாய அறிவிப்பு

கொழும்பு,ஓக.1

நாட்டில் நட்டங்களை தொடர்ச்சியாக காட்டிவரும் அரச நிறுவனங்களுக்கு கடன்களை வழங்குவதால் அரச வங்கித் தொகுதிகள் சரிந்து விழும் நிலைக்கு உள்ளாகும் ஆபத்து ஏற்படும்.

இவ்வாறு பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றச் செயற்குழுவின் (கோப்) அறிக்கையில் அபாய அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, அத்தகைய அரச நிறுவனங்களுக்கு கடன்களை வழங்கும் விடயத்தில் முறையானதொரு செயற்றிட்டத்தைப் பின்பற்றுவதற்கு அரச வங்கிகள் கவனமெடுக்க வேண்டியுள்ளது என்று 'கோப்' அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் மத்திய வங்கி கவனம் செலுத்தி பொறி முறையொன்றை வகுத்து அரச வங்கிகளின் அத்தகைய கடன் வழங்கல் செயற்பாடுகளைக் கண்காணிக்க வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபை, பெற்றோலிய கூட்டுத்தாபனம் , மிஹின் லங்கா நிறுவனம் போன்றவை தொடர்ச்சியான நட்டங்களையே காட்டி வருகின்றன. அத்தகைய நிறுவனங்கள் சரிந்து விழும் ஆபத்தான நிலைக்கு உள்ளாகி வருவதைத் தற்போது உணர முடிந்துள்ளது.

எனவே அத்தகைய நிறுவனங்களுக்குக் கடன்களை வழங்கிவரும் வங்கித் தொகுதியும் சரிவை எட்டும் அபாயம் ஏற்படும் என்று 'கோப்' அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

கடுமையான போட்டிகள் நிலவும் முன்னணி வர்த்தகச் சந்தைப் புறச்சூழலொன்றுக்குள் தொடர்ச்சி யாக தமது இருப்பைத் தக்க வைத்துக் கொண்டு நாட்டின் தேசிய நலனுக்காக தமது சேவைகளை வழங்க வேண்டிய பெரும் சவாலொன்றை இந்த அரச நிறுவனங்கள் எதிர்கொண்டுள்ளன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22)

# தபால் திணைக்கள பணியாளரில் எண்பது வீதமானோர் பெண்களே

## அதனால் தடைப்படுகின்றன சில கடமைகள்

கொழும்பு,ஓக.1

தபால் திணைக்களத்தின் உள்ளகப் பணியாளர்களுள் 80 சத வீதமானோர் பெண்களாக உள்ளதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக தபால் திணைக்களத்தின் பொதுவான கடமைகளுக்குத் தடைகள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.



அந்தவகையில் தபால் பரிமாற்றச் சேவையில் பெண்களைப் பணியில் ஈடுபடுத்துவதால் சிக்கல்கள் உருவாகியுள்ளன என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இரவில் பணியாற்றாது தபால் பரிமாற்றப் பணிகளை மேற்கொள்வது சாத்தியமற்றது.

எனவே இந்த விடயத்தில் உயரதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று தபால் சேவை தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ச-22)

# கலைப் பிரிவு மாணவர்கள் குறைப்பு

கொழும்பு,ஓக.1

**பல்கலைக்கழகத்துக்கு இணைத்துக் கொள்ளப்படும் கலைப் பிரிவு மாணவர் தொகையை குறிப்பிட்ட அளவு குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**



கொழும்பு கோத்தமி பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

வேலை வாய்ப்பற்றுள்ள இளைஞர், யுவதிகளுக்கு புதிய வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

வேலையற்று நடுத்தெருவில் நிற்பவர்கள் ஆயுதங்களை கையில் ஏந்தி கொலை செய்யும் அளவுக்கு சென்று விடுகின்றனர் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# எரிபொருள் நிலையங்களை மேலதிகமாக கோரும் ஐ.ஓ.சி.



கொழும்பு,ஓக.1

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வசமுள்ள மேலும் 107 எரிபொருள் நிலையங்களை தம்மிடம் வழங்குமாறு ஐ.ஓ.சி. (இந்திய எண்ணெய் நிறுவனம்) கோரியுள்ளது.

நாட்டில் 336 எரிபொருள் நிலையங்கள் தற்போது உள்ளன. அதில் ஐ.ஓ.சியிடம் 200 நிலையங்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வசமுள்ளன. எனினும் ஐ.ஓ.சி. வசம் மேலும் 107 நிலையங்களை ஒப்படைப்பது சமநிலையற்ற தன்மையை உருவாக்கும் என்று கனிய எண்ணெய் தேசிய சேவையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலர் ஆனந்த பாலித தெரிவித்தார்.

கனிய எண்ணெய் தேசிய சேவையாளர்கள் சங்கத்தின் ஊழியர்களும், பெரும்பான்மையான எரிபொருள் நிலையங்களை ஐ.ஓ.சியிடம் ஒப்படைப்பது முரண்பாடான நிலையைத் தோற்றுவிக்கும் என்று கருதுவதாகவும் அவர் கூறினார். (ச-22)

# அரச தலைவர்கள் பயன்பாட்டுக்கு வாடகைக்கு நவீன சொகுசு கார்கள்

## விலை மட்டங்கள் கோருகின்றது வெளிவிவகார அமைச்சு

கொழும்பு,ஓக.1

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டுக்கு வருகைதரும் அரச தலைவர்கள் மற்றும் விசேட பிரதிநிதிகளின் பயன்பாட்டுக்காக 120 வரையிலான மோட்டார் கார்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ள வெளிவிவகார அமைச்சினால் விலை கோரப்பட்டுள்ளன.

இந்த மாநாட்டுக்கு வருகை தரும் அரச தலைவர்களின் பயன்பாட்டுக்கென புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கே அரசு முதலில் தீர்மானித்திருந்தது. எனினும் தற்போது



அத்தேவை தொடர்பாகத் தேவைப்படும் மோட்டார் கார்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதியிலிருந்து நவம்பர் 20 ஆம் திகதி வரையிலான காலத்துக்கு இந்த வாகனங்கள் வாடகைக்கு அமர்த்திக் கொள்ளப்படவுள்ளன என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. அரச தலைவர்களது விருப்புக்கு ஏற்றவாறு மோட்டார் கார்களை விநியோகிப்பதற்கு ஒழுங்கமைப்புக்குழு செயற்படும் என்று வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்தார். (ச-22)

# பரீட்சைக் கடமையில் 16,200 ஆசிரியர்கள்



கொழும்பு,ஓக.1

இந்தமுறை நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் 16,200 ஆசிரியர்கள் கடமையில் ஈடுபடுத்தப் படவுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் 18,000 ஆசிரியர்களை ஈடுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சை எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதன்போது சுமார் இரண்டு லட்சத்து 80 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

# கொழும்பு சதொச கட்டடத் தீ கட்டுப்பாட்டுக்குள்

கொழும்பு,ஓக.1

கொழும்பு - வொக்ஸோல் வீதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையக் கட்டடத் தொகுதியில் புதன்கிழமை அதிகாலை பரவிய தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்று தீயணைப்பு சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சதொச கட்டடத் தொகுதியில் தீ பரவியமைக்கான காரணம் இதுவரை உறுதிசெய்யப்படவில்லை. தீ பரவியமை தொடர்பான தகவல் வெளியானதும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளார். இந்தத்



தீ கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் ஏழாவது மாடியிலேயே பரவியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# ஆரவார அமளியுடன் வேட்பு மனுத் தாக்கல்

மக்கள் சேவை நாள் என்பதால் சொந்த அலுவல்களுக்காக செயலகத்துக்கு வந்திருந்தவர்களின் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அதிகாரிகளுடன் சேர்ந்து அவர்களும் அரசியல் வாதிகளின் செயல்களை வேடிக்கை பார்க்க வேண்டி இருந்தது.

வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி என்பன யாழ்.மாவட்டத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்தன.

இதற்கு முன்னதாக நல்லூர் கந்த சுவாமி கோயிலுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் சென்றனர். அங்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் வந்து கோயிலுக்குள் உள் நுழையவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் வழிபாடுகள் முடித்து வெளியேறினர்.

தொடர்ந்து மாவட்டச் செயலகத்துக்கு வருகை தந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் வேட்புமனுத் தாக்கல் செய்து வெளியேற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் வெடி கொழுத்தி பெரும் ஆரவாரமாக வேட்புமனுத் தாக்கல் செய்ய வந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியினரும் வேட்பு மனுத் தாக்கல் முடிந்து வெளியேறும் போது தாமும் வெடி கொழுத்தி பெரும் ஆரவாரப்பட்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் வருகைதந்த பின்னரே ஈ.பி.டி.பியினர் வருகை தந்தனர். இவர்கள் மாவட்ட செயலகம் வரையில் கட்சியின் நூற்றுக் கணக்கான ஆதரவாளர்களுடன் பேரணியாக கோஷங்களை எழுப்பிய வாறு வந்தனர். அத்துடன் வெடி கொழுத்தி பாண்ட் வாத்தியங்களையும் இசைத்தனர். (உ-5)

# அரசா, ஐ.தே.கவா தெரிவு?...


கிறோம். தமிழ்க் கட்சி அல்லாத ஒரு கட்சிக்கு வாக்களிக்க தீர்மானிக்கும் தமிழர்கள் இந்த விடயத்தை தீவிர மாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை" என்றார் சுவாமிநாதன்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இதய சுத்தியுடன் தீர்வு காண முயன்ற நாட்டின் ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் என்பதை மனதில் இருத்தி தமிழ் மக்கள் தமது முடிவை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். அந்தத் தலைவர் இருக்கும்போதே ஒரு தீர்வைக் கண்டுவிட தமிழ் மக்கள் அவரது கரத்தை வடமாகாண சபைத் தேர்தல் மூலம் பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, வடமாகாணசபைத் தேர்தலில் மக்கள் புதிய முகங்களைத் தேர்வு செய்ய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளர் தி.துவாரகேஸ்வரன் தெரிவித்தார்.

"நீதியான தேர்தலுக்கு முகம் கொடுக்க நாம் தயாராக இருக்கின்றோம். வடமாகண சபைத் தேர்தல் எமக்கு முதல் படியான ஆணை. 13 ஆவது திருத்தத்தை நோக்கி என்றாலும் சரி தமிழர்களின் சுயாட்சி என்றாலும் சரி தீர்வை நோக்கிச் செல்வதென்றாலும் சரி இந்தத் தேர்தல்தான் முக்கியமானது. வடபகுதி மக்கள் கட்சி பேதமின்றி சரியானவர்களை தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய வேண்டும்" என்றார்.

ஐ.தே.க.யாழ்.மாவட்ட வேட்பாளர் விவரம்
தியாகராஜா துவாரகேஸ்வரன், முருகேசு சதாநந்தன், பிரணவன் கனகரஞ்சிதன், நடராஜா பரமசிவம், சபாரட்ணம் தியாகேந்திரன், கேதீஸ்வர கௌரிபாலன் தர்சன் சர்மா, தேவராசா அகலவன், புவனேந்திரராஜா கஜன், வீரராஜன் ஜெயப்பிரவீன், மொஹமட் இலியாஸ், பாலசந்திரன் கணேசபிள்ளை, தியாகராசா கபிலராஜ், கனகலிங்கம் சிவசங்கர், சந்திரசேகரம் அச்சுதன், சண்முகாநந்தன் சசிகுமார், தேவராஜா தேவசீலன், யோகராஜா துஷ்யந்தன், ராசையா நாகேந்திரராஜா, கார்த்திகேசு டனிஸ்குமார். (உ-5)







# 7 கட்சிகள், 10 குழுக்கள்...

**யாழ்.மாவட்டம்**
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., சுயேச்சைக் குழுக்கள் இரண்டு நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளதுடன் சுயேச்சைக் குழுவொன்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.
இதுவரை 7 கட்சிகள், 4 சுயேச்சைக் குழுக்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளதுடன் 10 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

**கிளிநொச்சி மாவட்டம்**
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜே.வி.பி மற்றும் சுயேச்சைக் குழு என்பன நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளன.
இதுவரை 6 கட்சிகள் மற்றும் ஒரு சுயேச்சைக் குழு என்பன வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளதுடன் 3 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

**முல்லைத்தீவு மாவட்டம்**
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜே.வி.பி. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், எக்சத் லங்கா சம்பத்துவ, ஜனநாயகக் கட்சி, சுயேச்சைக் குழு என்பன நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளன.
இதுவரையில் 9 கட்சிகள் மற்றும் ஒரு சுயேச்சைக் குழு என்பன வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளதுடன் 3 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

**மன்னார் மாவட்டம்**
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பனவும், 7 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளன. இதுவரையில் 6 கட்சிகள், 9 சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளன.

**வவுனியா மாவட்டம்**
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சோஷலிசக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜே.வி.பி., ஜனநாயகக் கட்சி மற்றும் 3 சுயேச்சைக் குழுக்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளன.
இதுவரையில் 9 கட்சிகளும், 7 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளதுடன் 6 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. (த-5-6-10-402)

# மக்களை ஒன்று திரட்டும்...

சபைத் தேர்தலை எமது கட்சி பயன்படுத்தும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி.

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக யாழ். மாவட்டத்தில் நேற்று ஜே.வி.பி. தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தது.

இதற்கென ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹந்துன் நெத்தி யாழ்.மாவட்ட செயலகத்துக்கு வந்திருந்தார். ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர் கூறியதாவது:-

வடமாகாணத்தில் இராணுவப் பிரசன்னம் அதிகமாக உள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினையை அரசு தீர்க்க முன்வரவில்லை. போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகளாகிவிட்டன. ஆனாலும் தீர்வு கிடைக்கவில்லை.

மாகாணசபையில் அதிகாரம் இல்லை. இதனாலேயே எமது கட்சி அதை அன்றும் எதிர்த்தது. இன்றும் எதிர்க்கின்றது. இருந்தும் மக்களுக்காக போராடுவதற்காகவே மாகாண சபையில் எமது கட்சி போட்டியிடுகின்றது - என்றார்.

ஜே.வி.பி.யின் யாழ்.மாவட்ட வேட்பாளர் விவரம்,
பீ.நடராஜா, அம்பலவாணர் கணபதிப்பிள்ளை, ஆர்.பி. இக்னேஸஸ்பிள்ளை, பீ.பெருமாள்பாலகிருஷ்ணன், என்.ஜோசப் பிரசாந்த், எஸ்.ராஜேஸ்வரன் விவேக். ஏ.சத்தியரூபன், சின்னத்துரை நந்தனன், ஆர்.பி.ஐ.ஜினோவாபிள்ளை, சந்திரசேகரம் சசிகலா, பீ.அன்டன் ஜெயந்தன், பீ.ஆனந்தராசா, வேலாயுதம் விஜயகுமார், துரைசாமி ஸ்ரீகாந்த், அல்பிரட் ஜேக்கப், பாதும்மா சனாஸா, எஸ். மொஹமட் இக்பால், எம்.கே.எம். இராஜரத்தினம், நடராஜா கணேஸன் (ஐ-5)

**தவறிவிட்டது** சுப்பையா செல்வராசா என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம், தே.அ.அட்டை ஆகியன அடங்கிய கறுப்பு நிற கைப்பை சங்கானைக்கும் சுழிபுரத்துக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே- 0773276397

**31ஆம் நாள் நினைவு தனில்**



அமரர்
பாலதாஸ்
ஜெறின்சன்
(ஜெறின்)

தோற்றம்
16.09.1983
மறைவு
02.07.2013

இரக்கமுள்ள யேசுவே மரித்த ஜெறின்சனின் ஆத்மத்துக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும் இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
நண்பர்கள், நிமால், மனோ, குட்டித்தம்பி, நிலோஜன், நிராஜ்
நாவாந்துறை.

# கூட்டமைப்பு....

மலை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனின் மனைவி அனந்தி ஆகியோரின் வீடுகளுக்குச் சென்ற படையினர் அவர்களின் விவரங்களை அச்சுறுத்தும் வகையில் திரட்டினர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இது தொடர்பில் பலாலி பாதுகாப்பு தலைமையகம் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில்,

இந்தச் செய்தி தொடர்பில் இராணுவத்துக்கோ புலனாய்வுப் பிரிவினருக்கோ எதுவித சம்பந்தமும் இல்லை. அரசியல் காரணங்களுக்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ மக்களை அச்சுறுத்தும் அவசியம் இராணுவத்துக்கு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)




## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### மாணிக்கர் சொர்ணலிங்கம்
(ஜோதிடர்)

அன்னாரின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.08.2013) வியாழன் எமதில்லத்தில் நடைபெறவுள்ளது. அவ்வேளை கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் பிரிவையிட்டு நேரிலும், தொலைபேசியூடாகவும், விளம்பரங்கள் ஊடாகவும், எம்மைத் தேற்றிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.
குடும்பத்தினர்.
(30108)(10,14)

## சதுரங்க சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.1
வடமாகாண ஆளுநர் செயலகத்தால் நடத்தப்படுகின்ற வடமாகாண சதுரங்கப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் 3 சுற்றுக்களும், மறுநாள் 5 சுற்றுக்களும் நடைபெறவுள்ளன.

8, 10, 12, 15 வயதுப் பிரிவுகளுக்கும் மற்றும் 15 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான போட்டிகள் நடத்தப்படும்.

இந்தச் சுற்றுத் தொடரில் தெரிவு செய்யப்படுவோர் எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ள கண்டி சர்வதேச சதுரங்க திறந்த சுற்றுப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

விண்ணப்பதாரிகள் போட்டி நடைபெறும் தினத்தன்று காலை 8 மணிக்கு முன்பதாக சமுகமளிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ற-4)



## டிறிபேர்க் அணியை வீழ்த்தியது சாவகச்சேரி இந்து

தென்மராட்சி, ஓக.1
சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் புதிய மைதான திறப்பு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட '20/20' கிரிக்கெட் ஆட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 69 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.


டிறிபேர்க் கல்லூரி அணிக்கும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற டிறிபேர்க் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி ஐந்து இலக்குகளை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

201 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய டிறிபேர்க் கல்லூரி அணி வீரர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியின் துல்லியமான பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது தடுமாறினர்.

20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 131 ஓட்டங்களை மட்டுமே பெற்றது டிறிபேர்க் கல்லூரி அணி.

69 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ற-9)





இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட 25 ஆவது இளைஞர் விளையாட்டு விழாவில் பனங்கட்டுக்கொட்டு புனித சூசையப்பர் விளையாட்டுக்கழகம் தேசிய மட்டத்தில் 1 ஆம் இடத்தைப் பெற்று சாதனை படைத்தது. சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை மன்னார் நகர நுழைவாயிலில் இடம் பெற்றது. இதன் போது குறித்த கழகத்தைச் சேர்ந்த 13 சாதனையாளர்களும் கௌரவிக்கப்பட்டு பவனியாக அழைத்துச் செல்லப்பட்டனர்.(ற-12)

## இன்றைய ஆட்டம்

பருத்தித்துறை, ஓக.1
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் கழக மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 4.30 மணி
மயிலங்காடு ஞானமுருகன் வி.க. எதிர் நாச்சிக்குடா சென். மேரிஸ் வி.க. (ற-34)



## இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டத்தில் சீனிவாசன் பங்குபற்றுவார்



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் (பி.சி.சி.ஐ.) செயற்குழுக் கூட்டத்தில் சீனிவாசன் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐபிஎல் சூதாட்ட விவகாரம் மற்றும் அதைத் தொடர்ந்து எழுந்த சர்ச்சையினால் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் பொறுப்பிலிருந்து சீனிவாசன் விலகினார். அதனைத் தொடர்ந்து இடைக்கால தலைவராக ஜக்மோகன் டால்மியா பொறுப்பேற்றார்.

இந்தநிலையில் ஐ.பி.எல். குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணைக்கு இருவர் கொண்ட குழுவை பி.சி.சி.ஐ. அமைத்தது.

அந்தக் குழு இருநாள்களுக்கு முன்பு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. அதில், சீனிவாசன் மீது எந்தக் குற்றச்சாட்டும் கூறப்படவில்லை.

அதனால், அவர் மீண்டும் பி.சி.சி.ஐ. தலைவர் பதவிக்கு வருவார் என்று பரவலாகக் கூறப்பட்டு வந்தது.

தீர்ப்பு குறித்து ஜக்மோகன் டால்மியா கூறுகையில்,
''நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்த பிறகு அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம். நாளை டெல்லியில் நடைபெறும் பி.சி.சி.ஐ. செயற்குழுக் கூட்டத்தில் சீனிவாசன் பங்கேற்பார்'' என்று தெரிவித்துள்ளார். இந்த தகவலை சீனிவாசனும் உறுதி செய்துள்ளார்.

அதேவேளை, பி.சி.சி.ஐ. அமைத்த இருவர் கொண்ட குழு இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்று மும்பை உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது. (ற)

## ரே பிரைஸ் ஓய்வு

சிம்பாப்வே அணியின் சுழற்பந்துவீச்சாளர் ரே பிரைஸ், சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

இந்திய அணியுடன் நடந்துவரும் ஒருநாள் தொடருக்கான சிம்பாப்வே அணியில் ரே பிரைஸ் இடம்பெற்றிருந்த நிலையில், இதுவரை ஒரு போட்டியில் கூட அவர் களமிறங்க வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

எஞ்சியுள்ள 2 ஆட்டங்களில் அவருக்கு கடைசியாக ஒரு வாய்ப்பு அளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறப் போவதாக நேற்று திடீரென அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,
''சிம்பாப்வே கிரிக்கெட் சபையுடனான ஒப்பந்தம் முடிய இன்னும் அவகாசம் இருந்தாலும், உடனடியாக ஓய்வு பெற விரும்புகிறேன். எனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிட்டது'' என்று தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வே அணிக்காக அவர் இதுவரை 102 ஒரு நாள் ஆட்டங்களில் விளையாடி 100 இலக்குகளையும், 22 டெஸ்டில் விளையாடி 80 இலக்குகளையும் 16 '20/20' ஆட்டங்களில் விளையாடி 13 இலக்குகளையும் வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



## தெற்காசிய உதைபந்து: இந்திய அணி சம்பியன்

தெற்காசிய உதைபந்துத் தொடரின் இறுதிச்சுற்றில் இந்திய அணி நேபாளத்தை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

நேபாள தலைநகர் காத்மண்டுவில் 2ஆவது தெற்காசிய கால்பந்து சம்பியன் கிண்ணத் தொடர் (16 வயது) நடைபெற்றது. நேற்றுமுன்தினம் நடந்த இறுதிச்சுற்றில் இந்தியா, நேபாளம் அணிகள் மோதின.

ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் ஜெர்ரி லால்ரின் ஜுவாலா, இந்திய அணிக்கு கைகொடுத்தார்.

32 மீற்றர் தூரத்தில் இருந்து ஜெர்ரி தனது இடது காலால் அடித்த பந்து கோலாக மாறியது. நேபாளத்தின் சொந்த மண்ணண்பதால்மைதானத்தில் இருந்த 20,000 ரசிகர்களும் அதிர்ச்சியில் அப்படியே உறைந்தனர்.

முதல் பாதியில் இந்திய அணி 1-0 என்று முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் (66வது நிமிடம்) ஜெர்ரி அடித்த பிரி-கிக் பந்து வீணானது. எப்படியும் பதிலடி கொடுக்க வேண்டும் என்ற ஆவேசத்தில் விளையாடிய நேபாள வீரர்களின் தாக்குதல்களை இந்திய அணி கோல் காப்பாளர் தீராஜ் சிங் அருமையாக தடுத்தார்.

ஆட்டநேர முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற இந்திய அணி சம்பியன் பட்டம் வென்றது.

1:0 என்று ஆப்கனை வென்ற பங்களாதேஷ் அணி மூன்றாவ[illegible] தப் பெற்றது. (ற)



# மகளிர் ‘20/20’ உலகக் கிண்ணம் தகுதி பெற்றது இலங்கை அணி



2014ஆம் ஆண்டு பங்களா தேஷில் இடம்பெறவுள்ள மகளிர் உலகக் கிண்ண ‘20/20’ தொடரில் பங்கு பற்றுவதற்கு இலங்கை அணி தகுதி பெற்றுள்ளது.

தற்போது நடைபெற்றுவரும் தகுதிகாண் தொடரில் இறுதி யாட்டத்துக்குத் தகுதிபெற் றுள்ளதையடுத்தே இலங்கை அணி உலக மகளிர் ‘20/20’ தொடருக்குத் தகுதிபெற் றுள்ளது.

டப்ளினில் நெதர்லாந்து அணிக்கெதிராக இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் இலங்கை 33 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19 பந்துப்பரிமாற்றங் களில் 6 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களைக் குவித்தபோது மழை குறுக் கிட்டதன் காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

முதலாவது இலக்குக்காக 27 ஓட்டங்களைப் பகிர்ந்த இலங்கை அணி,இரண்டாவது இலக்குக்காக 52 ஓட்டங் களைக் குவித்ததோடு, தொட ர்ந்து வந்த வீராங்கனைகள் சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தினர்.

இறுதிநேரத்தில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய இஷானி கௌஷல்யா, இலங்கை அணி சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெறுவதற்கு உதவினார்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக தீபிகா ரசங் கிக்கா 50 பந்துகளில் 47 ஓட்டங்களையும், இஷானி கௌஷல்யா 16 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங் களையும், யசோதா மெண்டிஸ் 22 பந்துகளில் 26 ஓட்டங் களையும், சாமரி அத்தப் பத்து 12 பந்துகளில் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நெதர்லாந்து அணி சார்பாக லியோனி பெனற், ஷாஷா புரூனிங் ஆகியோர் தலா 2 இலக்கு களை கைப்பற்றினர்.

டக் வேர்த் லூயிஸ் முறையில் 9 பந்துப்பரிமாற்றங்களில் 85 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் துடுப் பெடுத்தாடிய நெதர்லாந்து அணி, வழங்கப்பட்ட 9 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 51 ஓட்டங்களை மாத்திரம் பெற்று டக் வேர்த் லூயிஸ் முறையில் 33 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் நெதர்லாந்து அணி சார்பாக ஹெல்மியன் றம்போல்டோ 24 பந்துகளில் 22 ஓட்டங்களையும், மிரா ண்டா வெரிங்மெய்யர் 15 பந்துகளில் 14 ஓட்டங் களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக சண்டமாலி டொலவட்ட, ஷஷிகலா சிரி வர்தன, சண்டிமா குணரத்ன ஆகியோர் தலாஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்ட நாய கியாக தீபிகா ரசங்கிக்கா தெரிவா னார்.

இத்தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை சந் திக்கவுள்ளது.

(ற)

# 16 வயது வீராங்கனை நீச்சலில் உலக சாதனை

உலக நீச்சல் சம்பியன்ஸிப் தொடரில் லிதுவேனிய வீராங்கனை ரூடா மெயிலு டைட் உலக சாதனை படைத் துள்ளார்.

ஸ்பெயினில் உள்ள பார்சி லோனாவில் 15ஆவது உலக நீச்சில் சம்பியன்ஸிப் தொடர் நடைபெற்று வரு கின்றது.

அதில் பெண்கள் 100 மீற் றர் பிரஸ்ட்ஸ்டோக் பிரிவில், 16 வயதான லிதுவேனியா வீராங்கனை ரூடா மெயிலு டைட் பங்கேற்றார்.

இவர் நேற்றுமுன்தினம் நடந்த அரையிறுதி போட்டி யில் அதிவேகத்தில் நீந்தி, 1.04.35 செக்கன்களில் குறித்த தூரத்தைக் கடந்து உலக சாதனை படைத்து இறுதிச்சுற்றுக்கு முன்னேறி யுள்ளார்.

இதற்கு முன் இப்பிரிவில் அமெரிக்காவின் ஜெசிகா ஹார்டி 1.04.45 வினாடிக ளில் கடந்ததே சாதனையாக இருந்தது.

இதுகுறித்து ரூடா கூறுகை யில், ‘‘உலகசாதனை படைத் ததை தங்கப் பதக்கம் வென் றதை விட உயர்வாக கருது கிறேன். நிச்சயம் இறுதிச் சுற்றில் வெல்வேன் என்ற நம்பிக்கை உள்ளது’’ என்று தெரிவித்துள்ளார்.

இவர் லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தங் கம் வென்றார் என்பது குறிப் பிடத்தக்கது.




# பிரபல உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்டியன் பெனிடஸ் சாவு




ஈக்குவடோர் நாட்டைச் சேர்ந்த பிரபலமான சர்வதேச உதைபந்து வீரரான கிறிஸ்டியன் பெனிடஸ் உயிரிழந்தார். இந்தத் தகவலை கத்தாரின் தலைநகரான தோஹாவில் உள்ள எல்ஜைஷ் விளையாட்டு மன்றம் இணையதளத்தில் உறுதி செய்துள்ளது.

சுச்சோ கழகம் என்று செல்லமாக அழைக்கப்பட்ட இவர், மெக்சிகோ கிளப் அமெரிக்காவிற்காக விளையாடிவந்தார். இந்த ஆண்டு ஜ"லை மாதம்தான் எல்ஜைஷ் அணிக்காக மூன்று வருட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். ஞாயிற்றுக்கிழமை தனது புதிய அணியினருடன் முதல் போட்டியிலும் இவர் விளையாடினார். பின்னர், வயிற்றுவலி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.


இந்நிலையில் அவர் இறந்துவிட்டதாகவும், மாரடைப்பு காரணமாக இறந்திருக்கக்கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2006ஆம் ஆண்டு உலககோப்பை உதைபந்து ஆட்டங்களில் இளைஞராக நுழைந்த இவர், தனது திறமையின் மூலம் ஈக்குவடோர் அணியில் முக்கிய இடத்தைப் பெற்றார். அடுத்த வருடம் பிரேஸிலில் நடைபெற இருக்கும் உலகக்கோப்பை உதைபந்துத் தொடரிலும் விளையாட இவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச ஆட்டங்களில் இவர் அடித்த 24 கோல்கள், தேசிய அணியில் இவரை மூன்றாவது இடத்தில் வைத்துள்ளது.(ற)

# கரீபியன் பிறீமியர் லீக் பார்படோஸ் வென்றது

கரீபியன் பிறீமியர் லீக் தொடரின் முதலாவது ஆட் டத்தில் பார்படோஸ் அணி வெற்றிபெற்றது. சென் லூ சியா அணிக்கெதிரான இந்த ஆட்டத்தில் பார்படோஸ் அணி 17 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.



பார்படோஸில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பார்படோஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மா னித்தது.

அதன்படி முதலில் தடுப் பெடுத்தாடிய பார்படோஸ் அணி, 20 பந்துப்பரிமாற் றங்கள் நிறைவில் 5 இலக் குகளை இழந்து 169 ஓட்டங் களைப் பெற்றது.

ஆட்டத்தின் முதலாவது பந்தி லேயே டுவைன் ஸ்மித் ஆட்டமிழந்ததோடு, ஒரு கட்டத்தில் 4 இலக்குகளை இழந்து 48 ஓட்டங்களுடன் அவ்வணி தடுமாறிக் கொண் டிருந்த போது, 5ஆவது இலக்குக்காக சொய்ப் மலிக், கெரான் பொலார்ட் இரு வரும் 88 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

இறுதி நேரத்தில் கெரான் பொலார்ட் அதிரடியாக ஆட பார்படோஸ் அணி சிறப்பான நிலையை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பார்படோஸ் அணி சார்பாக சொய்ப் மலிக் 51 பந்துகளில் 78 ஓட்டங்க ளையும், கெரான் பொலார்ட் 46 பந்துகளில் ஆட்டமிழக் காமல் 61 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென் லூசியா அணி சார்பாக டெரன் சமி 2 இலக்குகளையும், அல்பி மோர்க்கல், ஷேன் ஷிலிங் பேர்ட், பீனோ பெஸ்ற் ஆகி யோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

170 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய சென் லூசியா அணி 19.4 பந்துப் பரிமாற் றங்களில் சகல இலக்கு களையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்று 17 ஓட்டங்களால் தோல்விய டைந்தது.

முதலாவது இலக்குக்காக 5.1 பந்துப்பரிமாற்றங் களில் 57 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, ஒரு கட்டத்தில் 13.4 பந்துப்பரி மாற்றங்களில் 3 இலக்கு களை இழந்து 104 ஓட்டங்க ளுடன் பலமான நிலையில் காணப்பட்டது. எனினும் தொடர்ந்து வந்த வீரர்கள் ஓட்டங்களைக் குவிக்கத் தவற, அவ்வணி தடுமா றியது.

துடுப்பாட்டத்தில் சென் லூசியா அணி சார்பாக அன்ட்ரூ பிளெற்சர் 41 பந்து களில் 57 ஓட்டங்களையும், டெரன் சமி 16 பந்துகளில் 35 ஓட்டங்களையும், தமிம் இக்பால் 14 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பார்படோஸ் அணி சார்பாக கெரான் பொலார்ட் 15 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஆஷ்லி நேர்ஸ், றயாட் எம்றிற், ஜேஸன் ஹோல்டர் ஆகி யோர் தலா 2 இலக்குகளை யும் கைப்புற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக சொய்ப் மலிக் தெரிவானார்.

## புங்குடுதீவில் சடலம் மீட்பு

யாழ்.புங்குடுதீவு கடற்கரைப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டது. புங்குடுதீவு 10ஆம் வட்டாரம் கடற்பரப்பில் கரையொதுங்கிய இச்சடலத்தை கடற்படையினர் மீட்டு ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அடையாளம் காணமுடியாதவாறு உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட சடலம் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கபபட்டது. (400)


### வேலைவாய்ப்பு

யாழ். கச்சேரியடியில் உள்ள அச்சகத்துக்குவேலை ஆள்கள் தேவை. (இருபாலாரும்)

(30116) 0772174741

### வேலை வாய்ப்பு

தொடர்பாடல் சாதனங்கள் சந்தைப்படுத்தல் தேவையான பயிற்சி அளிக்கப்படும். முன் அனுபவம் தேவையில்லை. ஆர்வமுள்ளவர்கள் (இருபாலாரும்) தொடர்பு கொள்ளவும்.

0719894281 - 0712163216
021 222 4281

(30088)


### மரண அறிவித்தல்

#### சகோதரன் ரவீந்திரன்

இலங்கை பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்த சகோதரன் பரமசிவம் ரவீந்தன் அவர்கள் 30.07.2013 கிறிஸ்துவிற்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னாரின் அடக்க ஆராதனை 02.08.2013 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இல.111, கண்டி வீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள எமது சபைச்சாலையில் நடைபெறும்.

அடக்கம் கொட்டடியில் உள்ள இலங்கை பெந்தெகொஸ்தே சபை சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாஸ்டர் ஜோசேப் பாலச்சந்திரன்.

(30103)




hp pavilion-15E
I5 3rd,4Gb Ram, 750Gb HDD, 15.6' LED
Rs 81,800/=

hp pavilion g6-2230TU
I3 3rd,4Gb Ram, 500Gb HDD, 15.6' LED
Rs 64,000/=

hp 1000-1311TU
D.core 3rd,2Gb Ram, 500Gb HDD, 14.0' LED
Rs 52,800/=

FREE Anty virus for 1Year FREE Headphone FREE Mouse FREE Lap Bag



Toshiba satellite-C850
I3 3rd,2Gb Ram, 500Gb HDD, 15.6' LED
Rs 59,900/=

Asus-K55A
I5 3rd,4Gb Ram, 750Gb HDD, 15.6' LED
Rs 79,000/=

Dell inspirion-3520
I3 3rd,4Gb Ram, 500Gb HDD, 15.6' LED
Rs 65,800/=

Authorised Business Partner

NALIN Information Technologies
195/4 Parameswara Junction,Palaly Road,Thirunelvely
Phone- 0212221121/1166 0777667975

NALIN City Showroom
116G KKS Road,Chunnakam
Phone- 0212242222 0777140431

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

வரலாறு
S.தாஸ்
A/L 2014 2015
ஆரம்பம்
03.07.2013 சனி 8 am
G.A.Q., B.A. Part-I
B.A. Final
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.
NEC
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தியாழ்ப்பாணம்.

விடுமுறை கால புதிய வகுப்புக்கள்
A/L 2014 & A/L 2015
சனி, ஞாயிறு வகுப்புக்கள்
பொருளியல் - திரு.NB.கஜீதரன்
வணிகக்கல்வி- திரு.S.யசோ,
திரு.S.K.பாலசபேஷ்
கணக்கீடு- திரு.பாலகஜன்
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்
Paper class ஆரம்பம்
03.08.2013 சனி காலை 8.00 மணி
கீழ்வரும் இரு இடங்களிலும்
NEC பெருமாள் கோயில் (மணிக்கூட்டுக்கோபுரவீதி, யாழ்ப்பாணம்)
NEC ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி.

FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES
France,Canada,Swiss,Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட சர்வதேச Certificates இனை பெறலாம்
ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007)
இது வரைக்கும் 718 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்...
ஆரம்பம் : 03.08.13 Sat at 10 am
No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital க்கு அண்மையில்).
ஆரம்பம் 05.08.13 Mon at 3.30pm
No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
ஐரோப்பிய French (DELF) பரீட்சையில் எம்மிடம் அதிகமானோர் சித்தி..
0779 789 456
DEUTSCH,IELTS,BI,ITALIAN, & SINHALA CLASSES.....

IELTS
Complete Training



வெளிநாடு செல்வோருக்கானது
ஆங்கிலம் தெரியாதவர்கள்,ஓரளவு தெரிந்தவர்களுக்கென இரண்டு வெவ்வேறு பிரிவுகள்.
சரளமான பேச்சுப்பயிற்சியுடன் Listening, Reading, Writing பயிற்சிகள் பரீட்சைக்கேற்ப Practical ஆக வழங்கப்படுவதோடு 8 முன்னோடிப் பரீட்சைகள்.
பதிவும் அறிமுக வகுப்பும் – 04.08.2013 ஞாயிறு காலை 10.00 மணி
பிரிவுகள்
• சனி,ஞாயிறு பிரிவுகள் • வாரத்தில் ஒரு நாள் மட்டும் பிரிவு
• மாலைநேர வகுப்புகள் • வாரநாள் பிரிவுகள்
ஒவ்வொரு வகுப்பிலும் கையேடுகள்,பரீட்சை வினாத்தாள் விடைகள்,CD கள் இலவசமாக வழங்கப்படும்
SAAMSON
Language Research Centre
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம்.
077 621 4567

# Arul Study Circle

111, Bonjean Road, Kotahena, Colombo 13, T.P: 011 2331 495, 011 2470 148

## G.C.E. (O/L) 2013 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

Free Seminar

| பாடம் | ஆசிரியர்கள் |
| --- | --- |
| கணிதம் | - வே.தேவசேனாதிபதி (L.L.B சட்டத்தரணி) |
| | - K. வசந்தராஜ் (ஆசிரியர் நாவலப்பிட்டிய) |
| | - A.M. சந்திரசேகர் |
| | - S. சுந்தரேஸ்வரன் |
| | - S. அழகேஸ்வரன் (ஆசிரியர் - St. Joseph's College) |
| | - M. வாமதேவன் |
| விஞ்ஞானம் | - வே. சுந்தரேஸ்வரன் (D.g.M. National Lotteries Board) |
| | - V. பிரேம்குமார் (PHI-Jaffna), மணிமாறன் |
| வரலாறு | - S. நடராஜா B.A. |
| | - S. ஐங்கரன் (MPA) |
| | - I. ஜெகன் (B.A (Hons), Geo Spl, M.A. (PDS History Batch II) |
| தமிழ் | - A. ஆர்த்திகன் B.A (ஆசிரியர் -St. Benedicts College) |
| வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | - மோகன் சந்திரன் B.com., Hons, A.I.P.E.M, U.K |

கடந்த 2010, 2011, 2012 ஆம் வருடங்களில் வெற்றிகரமாக இலவசக் கருத்தரங்குகளை நடத்தியதோடு இந்த வருடமும் சிறப்பாக நடத்தப்படுகின்றது.

இலவச கருத்தரங்கு முழு அனுசரணை வே.தேவசேனாதிபதி (L.L.B சட்டத்தரணி)

### இலவசக் கருத்தரங்கு நடைபெறும் இடமும் திகதியும்

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**
09.08.2013 (வெள்ளி காலை 8.00 - மாலை 5.00 இருபாலாரும்)

**ஊர்காவற்றுறை பிரதேச செயலகம்**
10.08.2013 (சனி காலை 8.30 -மாலை 5.00 இருபாலாரும்)

**யாழ் வீரசிங்கம் மண்டபம்**
11.08.2013 (ஞாயிறு காலை 6.00 - மாலை 5.00 மாணவிகள் மட்டும்)
12.08.2013 (திங்கள் காலை 6.00 - மாலை 5.00 ஆண் மாணவர்கள் மட்டும்)
13.08.2013 (செவ்வாய் காலை 6.00 - மாலை 5.00 இருபாலாரும்)

**உருத்திரபுரம் தமிழ் மகா வித்தியாலயம்**
16.08.2013 (வெள்ளி காலை 8.00 - மாலை 5.00 இருபாலாரும்)

நாட்டின் சகல பாகங்களிலும்உள்ள அனைத்து O/L மாணவர்களும் இக் கருத்தரங்கில் பங்குபற்றலாம்

சம்பிரதாய பூர்வமாக வகுப்புகள் காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

**குறிப்பு:** முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் நூல்கள்

★ கணிதம், விஞ்ஞானம், வரலாறு, தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் 2008, 2009, 2010, 2011, 2012, ஆகிய வருட க.பொ.த. (சா/த) பரீட்சை வினா-விடை புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
★ கணிதம் கடந்த 16 வருட க.பொ.த (சா/த) பரீட்சை வினா - விடைப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
★ அனைத்துப் பாடங்களிலும் மாதிரி வினாக்கொத்து (Tutes) வழங்கப்படும்.
★ விஞ்ஞான வினாவிடை நூல் இலவசமாக வழங்கப்படும். (25 வருட கடந்தகால வினாவிடைத் தொகுப்பு)

பிரதான ஒழுங்கமைப்பாளர்:- பே.இளமுருகன் (ஆசிரியர் K.H.C) 077 90 73 593

ஊடக அனுசரணை:
உதயன் மக்கள் மனம் நிறைந்த நாளிதழ்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/11071)(10.6.3)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.